சுவடி : 39

ஏடு : 12

சூன் 2016

*

ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

*

ஆசிரியர் குழு

**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
**தி.துரை சித்தார்த்தன்**

*

அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892

*

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**'சிந்தனையாளன்'**

2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.

தொடர்புக்கு :
94448 04980
72994 41712
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com

*

இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179

*


இணையத்தில் படிக்க
**www.keetru.com**

*

ஆசிரியவுரை

# தமிழ்நாட்டுச் சட்டமன்றத் தேர்தல் 2016 :

## ஊழலுக்கும் மதுவுக்கும் வித்திட்டது தி.மு.க.
## ஊழலையும் மதுவையும் உச்சத்தில் வளர்த்தது அ.இ.அ.தி.மு.க.
## வேளாண்மையையும் தமிழ்வழிக் கல்வியையும் பாதுகாக்கப் போராடுவோம், வாருங்கள்!



இந்தியாவிலுள்ள அனைத்திந்தியக் கட்சிகள் இந்திய தேசியக் காங்கிரசு, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்டு), பாரதிய சனதாக் கட்சி முதலானவை.

காங்கிரசுக்குக் குறிக்கோள் காந்தி ராஜ்யம் - இராமராஜ்யம் அமைப்பது. அதற்கான அடிப்படையை 1948இல் பண்டித வல்லப பந்த் அமைத்தார்; அதை இராஜீவ் காந்தி 1984-89இல் கெட்டிப் படுத்தினார்; 1991-1995இல் பி.வி. நரசிம்மராவ் மேலும் கெட்டிப்படுத்தினார். ஆனால் காங்கிரசு, இராமராஜ்யம் அமைப்பதில் தோற்றுவிட்டது.

2014 நாடாளுமன்றத் தேர்தலில் தனிப்பெரும்பான்மை பெற்ற பாரதிய சனதாக் கட்சி இராமராஜ்யம் அமைக்கும் பணியை நிறைவேற்றிட அல்லும் பகலும் பாடுபடுகிறது.

இந்திய யூனியன் முஸ்லீம் லீகின் தலைவர் முகமது அலி ஜின்னா 8 கோடி இஸ்லாமியர்களுக்குப் பாகிஸ்தானை 1947 ஆகத்தில் பெற்றார், அது "இஸ்லாமிய அரசாக" (Islamic State) பாக்கித்தானில் அமைந்துவிட்டது.

26.12.1925இல் நிறுவப்பட்ட இந்தியப் பொதுவுடைமைக் கட்சி - மேற்கு வங்கம், கேரளா, திரிபுரா முதலான மாநிலங்களில் மாநில அரசுகளை மட்டுமே அமைத்தன. இந்திய அரசை ஒருபோதும் கைப்பற்றவில்லை.

1916இல் சென்னையில் அமைக்கப்பட்ட "தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்" - சென்னை மாகாணக் கட்சியாக மட்டுமே இயங்கியது. மாகாண அரசை 17 ஆண்டுகள் ஆண்டது. பார்ப்பனரல்லாதார் நலன் கருதி எண்ணற்ற சட்ட திட்டங்களை அது மேற்கொண்டது. ஊழலற்ற நல்லாட்சியைத் தந்தது. **இந்தியாவில் ஆட்சி அமைக்க வேண்டும் என்ற திட்டத்தை எப்போதும் அது மேற்கொள்ளவில்லை.**

பெரியார் ஈ.வெ.ரா.வின் முயற்சியால், 26.12.1926இல் தோற்றுவிக்கப்பட்ட "பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை இயக்கம்", 1927 முதல் சமதர்மம் பற்றிப் பேசியது. அதற்கு முன் தேவை வருண சாதி ஒழிப்பு - பழக்கவழக்கச் சட்ட ஒழிப்பு என்பதைத் துலாம்பரமாக அறிவித்தது.

1916இல் தோற்றுவிக்கப்பட்ட பார்ப்பனரல்லாதார் கட்சியின் தலைவராக, 29.12.1938இல் ஈ.வெ.ரா. தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்கட்சியின் தலைவராக அமர்ந்த ஓராண்டில் - 17.12.1939இல் "திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற அரசியல் குறிக்கோளை அறிவித்தார்.

அந்தக் கோரிக்கை "முழுமையான - தனிச் சுதந்தர நாடு தான்" என்பதை 30.9.1945 திருச்சி திராவிடர் கழக மாநாட்டில் முதன்முதலாக உறுதி செய்தார். அதற்கான இணக்கமான நடவடிக்கைகளை சென்னை மாகாணம் முழுவதிலுமோ, அனைத்திந்திய அள விலோ அவர் எப்போதும் மேற்கொள்ளவில்லை.

**நாட்டுப் பிரிவினை என்பது, இந்திய ஆட்சிக்கு எதிரான - இந்திய முப்படைகளுக்கக எதிரான நேரடியான போர் என்பது - பல இலக்கம் பேரைச் சாகக் கொடுக்கும் போர் என்பது மக்களுக்குப் புரிய வைக்கப்படவில்லை. வாயாலே பேசிப் பேசி, கையாலே எழுதி எழுதி, சென்னை மாகாணத்தில் தமிழ்நாட்டில் மட்டும் செயல்பட்டு, "திராவிட நாட்டை அடைய முடியாது" என்பதும் புரிய வைக்கப்படவில்லை.**

1.11.1956-க்குப் பிறகு, "தனிச் சுதந்தரத் தமிழ்நாடு" வேண்டும் - அதுபோதும் என்று பெரியார் எடுத்த முடிவு மிகச் சரியானது. அதன் பிறகும் மேலேகண்ட தன்மையிலான விடுதலைப் போருக்கு எந்த ஆயத்த மும் செய்யப்படவில்லை.

இந்தச் சூழலில் 17.9.1949இல் நிறுவப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், 1957இல் நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தலில் ஈடுபட்ட பின்னர், பதவிக்குப் போக, திராவிட நாடு கோரிக்கை ஒரு தடை என்று புரிந்தவுடன், மெத்தப் படித்த அறிஞர் சி.என். அண்ணா துரை, நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில், "திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டோம்" என, 1962இல் அறிவித்தார்.

3.3.1967இல் தமிழ்நாட்டில், 138 சட்டமன்ற உறுப் பினர்களுடன் ஆட்சி அமைத்த தி.மு.க. (1) சுயமரி யாதைத் திருமணம் செல்லுபடிச் சட்டத்தை 1968இல் இயற்றியது. (2) 'சென்னை மாநிலம்' என்ற பெயரைத் "தமிழ்நாடு" என மாற்றியது.

1972இல் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 25% என்பதிலிருந்து 31% ஆக உயர்த்தியது; பட்டியல் வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டை 16%-லிருந்து 18% ஆக உயர்த்தியது; 1989இல் பழங்குடியினருக்கு முதன்முதலாக 1% தனி இடஒதுக்கீடு வழங்கியது; பெண்களுக்குச் சம சொத்துரிமையை வழங்கியது.

ஆனால், தமிழகத்தில் 1972 முதல் ஊழலுக்கு வித்திட்டது தி.மு.க.

மதுக்குடிக்கு வழிவகுத்தது தி.மு.க. இவை உண்மை.

இந்த ஊழலையும், மதுக்குடியையும் தொடர்ந்து 1987 முடிய வளர்த்தெடுத்தது எம்.ஜி.ஆர். தலைமை யிலான அ.இ.அ.தி.மு.க. அதனை 1991க்கும் 2016 க்கும் இடையில், இமயமலை உச்சி அளவுக்கு வளர்த் தெடுத்தது செல்வி ஜெ. ஜெயலலிதா தலைமையிலான அ.இ.அ.தி.மு.க.

**ஊழல், தனி உடைமை உரிமை உள்ள வரை யில் ஒழியாது.**

**முதலாளித்துவப் பொருளாதாரம், ஆட்சியின் கொள்கையாக இருக்கும் வரை, ஊழலின் ஊற்றுக் கண் அடைபடாது.**

இந்த உண்மையை, இன்று இந்தியாவிலுள்ள 126 கோடி மக்களில் எத்தனைக் கோடிப் பேருக்கு, யார் புரிய வைத்தார்கள்?

தமிழ்நாட்டிலுள்ள ஏழரைக் கோடி மக்களுள் எத் தனை இலக்கம் பேருக்கு, எவர்கள் புரிய வைத் தார்கள்?

இவற்றைப் புரிய வைக்காமல் 2011 வரையில் தி.மு.க., அ.தி.மு.க. இவற்றின் நிழலில் பதவி, பணம், சுகங்களைத் துய்த்தவர்கள், இன்று புதிய அறிவு தோன்றிய புத்தர்கள் போல் மாறி, ஊழல் ஒழிப்பு - மது ஒழிப்பு என்று கூரை மேல் நின்று கூவியது எப்படிச் சரியாகும்? அதற்கு என்ன பயன் கிடைக்கும்? எந்தக் குறிக்கோளும் இல்லாத - இந்தக் கட்சிகளின் நிழலில் நின்ற மதவாதக் கட்சிகளும், சாதிவாதக் கட்சி களும், ஈழ விடுதலை பேசும் கட்சிகளும், தமிழுக்கு உயிரைவிடுவோம் என்னும் கட்சிகளும்-இந்த இரண்டு ஊழல் திராவிடக் கட்சிகளையும் எப்படி ஒழிக்க முடியும்?

**"முண்டனுக்கு இரண்டு ஆள்" என்பது பழ மொழி; முதுமொழி.**

**இரண்டு முண்டர்களுக்கும் ஈடுகொடுக்க நான்கு முரட்டு ஆள்கள் இருந்தார்கள். ஆனால் நான்கு பேர்களும் - நான்கு மூலைகளில் தனித்தனியாக நின்றார்கள். ஏன்? ஏன்?**

ஊழலின் உச்சத்தில் நிறை முண்டன் கட்சி, இன்று வெற்றி குவித்துவிட்டது. ஊழலைத் தொடக்கி வைத்த கட்சி இன்று தோற்றுவிட்டது.

தமிழகக் "குடிமகன்களுக்கு", இனி நல்ல கொண் டாட்டம்!

தாலியை அறுக்கப் போகும் தமிழ்த் தாய்மார் களுக்கு, இனி துன்பந்தரும் திண்டாட்டம்!

தமிழ்நாட்டு 2016 சட்டமன்றத் தேர்தல் தரும் பாடம் இது.

**"பணம் பத்தும் செய்யும்" என்பது ஒரு கண்டு பிடிப்பு அல்ல. ஒரு வேட்பாளரைத் தேர்வு செய்து,**

**அவருடைய தேர்தல் செலவுக்கும் பெட்டி நிறை யப் பணம் தரும் ஒரே கட்சி அ.இ.அ.தி.மு.க. மட்டுமே. அடிமைகளாக இருக்கும் ஆளும் வகுப்பு நிருவாகிகள், காவல்துறையினர்; மற் றும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஆகி யோரின் துணையுடன் ஒரு வாக்குக்கு 250, 500, 1000, 2000 ரூபா என எல்லோருக்கும் பணம் தந்தது ஜெயலலிதா மட்டுமே.**

இவை நிற்க.

தமிழக மண் என்றும் அப்படியே இருக்கும்.

தமிழ் மக்களுக்குச் சோறு போட, 60 விழுக்காடு மக்கள் வேளாண்மை செய்வார்கள். வேளாண்மைக்கு வேண்டிய முதலாவது தேவை தண்ணீர்; இரண்டாவது தேவை கால்நடைகள் வளர்ப்பு; மூன்றாவது தேவை மின்வசதி; நான்காவது தேவை குறித்த நேரத்தில் அரசு தரும் வட்டியில்லாக் கடன்; அய்ந்தாவது தேவை வேளாண் விளைபொருட்களுக்குக் கட்டுபடியாகும் விலை.

எவர் ஆட்சியிலிருந்தாலும் - தமிழ்நாட்டு வேளாண் மக்கள் 6 கோடிப் பேருக்கு இவை தேவை. வேளாண் மக்களின் இத்தேவைகளை நிறைவு செய்யப் பாடு படுவதும் - போராடுவதும் நம் எல்லோரின் முன்னும் இருக்கும் தலையாய பணி.

தாய்த்தமிழ் இன்றும் நாளையும் இனி எப்போதும் இருக்கும்.

ஆனால் தமிழன் ஒவ்வொருவனின் - ஒவ்வொ ருத்தியின் எல்லாத் துறைப் பயன்பாட்டிலும் தமிழ் முற்றாக இருக்க வேண்டும். இன்று இது இல்லை.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகப் படிப்பு வரையில் - எங்கும் எதிலும் எல்லாமும் தமிழ்வழி யில் இருக்க வேண்டும்.

**இதற்கு இளைஞர்களும், மாணவச் செல்வங் களும், எல்லாத் தமிழ் அமைப்புகளும் ஓரணி யில் நின்று உயிரைப் பணையம் வைத்துப் போராட வேண்டும்.**

**வேளாண்மையைக் காத்திட, தமிழ்வழியில் கல்வி வர வழிவகுத்துப் போராடுவோம், வாருங்கள் என, எல்லாத் தமிழரையும் கைகூப்பி அழைக் கிறோம்.**

**1.6.2016** **- வே. ஆனைமுத்து**

## வடக்கலூர் அகரம் தி. கோவிந்தன் துணைவியார் செங்கமலம் அம்மாள் மறைந்தார்



முருக்கன்குடி என் மாமன் மு.வீரமுத்து-சின்னம்மாள் இளைய மகளும், உடன் பயின்ற தோழர் வடக்கலூர் அகரம் தி.கோவிந்தன் துணைவி யாருமான செங்கமலம் அம்மாள் தம் 85ஆம் அகவையில், 15.5.2016 ஞாயிறு காலை 6.15 மணிக்குத் தம் இல்லத்தில் மறைவுற்றார் என்பதை அறிவித்திட வருந்துகிறோம்.

முருக்கன்குடியிலும் வடக்கலூர் அகரத்திலும் எனக்கு எண்ணற்ற மாமன் மகள்கள். எல்லோரிட மும் நான் பழகுவதோ விளையாடுவதோ இல்லை. முருக்கன்குடிக்குப் போகும் போதெல்லாம் செங்கம லத்திடம் மட்டும் குறும்பு செய்வேன். காட்டில் பெண்கள் நிலக்கடலை ஆயும் போது, அவர் அருகில் உட்கார்ந்து கடலையை உறித்து வயிறாரத் தின்பேன்; கொன்னிக்காட்டிவிட்டுப் புறப்பட்டு விடுவேன்.

நான் வடக்கலூர் அகரத்தில் பயின்றேன்; தி. கோவிந்தன் என் உடன் பயின்றவர்; இருவரும் வள்ளலார் பக்தர்கள்; ஒன்றாக இரவில் உறங்குவோம்.

தி. கோவிந்தன் - செங்கமலம் திருமணத்தை நான் தான் நடத்தி வைத்தேன்.


2015இல் தி. கோவிந்தன் மறைந்தார். அவருடைய படத்தை நான் திறந்து வைத்தேன்.

எதிர்பாராத தன்மையில், 11.4.2016 திங்கட் கிழமை வடக்கலூர் அகரத்துக்குச் சென்றிருந்த நான், செங்கமலத்துடன் கட்டிலில் அமர்ந்து அளவளா வினேன். அவர் அன்பின் உறைவிடம்; பண்பின் இருப்பிடம்; பொறுமையின் வடிவம்.

அந்தச் செங்கமலம் இன்று இல்லை.

வாழ்க செங்கமலம் புகழ்!

**- வே. ஆனைமுத்து**



# என் 92ஆம் பிறந்த நாள்! நிலையும் நினைப்பும்!

எதிர்வரும் சூன் 21 அன்று நான் 91 அகவையை முடித்து 92இல் அடியெடுத்து வைப்பேன்.

இப்போதைய தமிழகத்திலேயே 100 அகவையைத் தாண்டியவர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். எனவே, 92 என்பது பெரிது அன்று.

என் பெரியார் கொள்கை வாழ்வு 28.10.1944இல் தொடங்கியது. அதிலிருந்து 20 ஆண்டுகள் கழித்து 1964இல் தான், நான், தன் இயக்கத்துக்கு இன்றியமையாதவன் எனத் தந்தை பெரியார் நினைத்தார்.

அவரின் ஒப்புதலோடு, அன்னாரின் எழுத்துக்களையும் சொற்பொழிவுகளையும் தொகுத்து, அவர் மறைந்த 6 மாத காலத்தில், ''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'' என்ற பெயரில் 3 பெருந் தொகுதிகளை, திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் சார்பில், 1-7-1974 இல் திருச்சியில் வெளியிட்டேன். இதற்கு, ஆசிரியர்கள் ந. கணபதி, வே. காசிநாதன் துணை மிகப் பெரியது.

**பெரியார் தொண்டர்களும், தமிழ்ப்பெருமக்களும், அன்றையத் தமிழக அரசினரும் பேரார்வத்துடன் அந்நூற்றொகுதியை அன்று வரவேற்கவில்லை.**

1980இல் 1500 தமிழக அரசுக் கிளை நூலகங்களுக்கு அரசு அந்நூற்றொகுதிகளை வாங்கியது. அதன் பிறகு தான், பெரியார் தொண்டர்கள் பலரும், தமிழ்ப் பெருமக்களும், பெரியாரியல் ஆய்வறிஞர்களும் அத்தொகுப்பின் அருமையையும் பயன்பாட்டையும் அறிந்தனர்.

**1992க்குப் பிறகு அப்படிப்பட்ட தொகுப்பு வேண்டும் என்று தமிழ் மக்கள் பெரிதும் விரும்பினர்.**

1993 முதல் முயன்று, 2010 மார்ச்சு 23 அன்று, 1974 பதிப்புடன் மேற்கொண்டு, 60 விழுக்காடு சேர்த்து, உயர்ந்த பரிசுப் பதிப்பாக, ''பெரியார் ஈ.வெ. இராமசாமி - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை''யின் சார்பில், 9300 தெமி 1/8 பக்கங்களைக் கொண்ட 20 தொகுதிகளாக ''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'' நூற்றொகுப்பு வெளியிடப் பெற்றது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களும், சூலூர் பாவேந்தர் பேரவைத் தோழர்களும், கோவைப் புதூர் தோழர்களும் வேலைக்காரத் தேனீக்கள் போல் பறந்து, பறந்து உழைத்து 2900 தமிழ்ப் பெருமக்களிடம் நூல் முன்பதிவு செய்து, 1 கோடியே 5 இலட்சம் ரூபாவை அறக்கட்டளை வங்கிக் கணக்கில் சேர்த்தனர். விசுவ கரும சங்கத்தினரும், வண்ணத்தார் சங்கத்தினரும் ஆர்வத்துடன் உதவினர்.

நூல் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அச்சிடப்பட்ட 3000 படிகளும் 30 நாள்களில் தீர்ந்து போயின.

மீதப்பட்ட தொகையைக் கொண்டும், கடன் பெற்றும் உடனேயே 2000 தொகுப்பு மறுபதிப்புச் செய்தோம். அரசுக் கிளை நூலகங்களுக்கு வாங்குவாரில்லை. கடனில் தத்தளித்தோம்.

**தமிழக அரசினர், கைநிறையக் கையூட்டுப் பெற்றுக்கொண்டு, 2014இல், ''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'' 1000 படிகள்; ''டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு'' 1000 படிகள் அரசு நூலகங்களுக்கு வாங்கிக் கொண்டனர்.**

இந்த இக்கட்டான பணிகளுக்கிடையேதான், அரசமைப்புச் சட்டத்திலுள்ளபடி, ''சமுதாயத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இந்திய மய்ய அரசுக் கல்வியிலும், வேலையிலும் 1956லேயே தரப்பட்டிருக்க வேண்டிய இடஒதுக்கீடு ஏன் தரப்படவில்லை'' என, முதன்முதலாக 1975இல் நான் கவலைப்பட்டேன். 1975, 1976இல் இந்தியக் காங்கிரசு அரசுக்கு எழுதினேன். விடையே இல்லை.

1977இல் ஜனதாக் கட்சி அரசு அமைந்தது. 29.4.1978 முதல் 2015 மார்ச்சு வரையில் இந்த ஒரு பணியை மட்டும் முன்வைத்து, நானும், சீர்காழி மா. முத்துச்சாமி, சேலம் தாதம்பட்டி எம். இராஜு, சேலம் அ. சித்தய்யன் ஆகியோரும்; பின்னாளில் தோழர்கள் து. தில்லைவனம், சங்கமித்ரா, வாலாசா வல்லவன், ஆவடி க. நாகராசன், கலச. இராமலிங்கம் ஆகியோரும் இடையறாது வடநாட்டுக்குச் சென்றோம். 1978 முதற்கொண்டு, பீகார் ராம் அவதேஷ் சிங், வாழப்பாடி கூ. இராமமூர்த்தி ஆகியோரின் பேரொத்துழைப்புடன் ''மண்டல் குழு'' என்பது 1-1-1979இல் அமைக்கப்பட எல்லாம் செய்தோம்.

இது இன்றும் முழுமையாக நிறைவேறவில்லை.

**பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், முற்பட்ட வகுப்பினரிடையே - 100 விழுக்காடு இடங்களும் விகிதா**

**சாரம் பங்கீடு செய்து தரப்படும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தும் வரையில் நாமும், எல்லா ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களும் தொடர்ந்து இதற்காகப் போராட வேண்டும்; போராடுவோம்!**

ஆயினும், என்னுடன் தொடர்ந்து மனமாரப் பணி யாற்றும் எல்லாத் தோழர்களும், இனிய நண்பர்களும் “பெரியார் வாழ்க்கை வரலாறு” என்னால் எழுதி முடிக்கப்பட்டு, விரைவில் வெளியிடப்பட வேண்டும் எனப் பெரும் நெருக்கடி தருகின்றனர். அவர்கள் அனைவரின் உணர்வுகளையும் நான் மிகவும் மதிக் கிறேன்; மிகச் சரியானது எனவும் உணருகிறேன்.

**இது கருதி, 2016இல் மீதமுள்ள 6 மாத காலத்திலும், 2017இல் ஆகத்து வரையிலும் வட இந்தியப் பயணத்தை மேற்கொள்ளுவதை உறுதி யாகத் தவிர்ப்பேன்.** இந்த 14 மாத காலத்தில் உறுதியாக பெரியார் வரலாறு இரண்டாம் தொகுதி, பெரியார் வரலாறு மூன்றாம் தொகுதி இவற்றை எழுதி முடித்து, என் உற்ற தோழர்களின் பார்வைக்கு மூன்று தொகுதிகளையும் ஒப்படைத்து விட்டு, 2017 செப்டம்பர் - அக்டோபரில் நான் தில்லி, அலிகர், லக்னோ, பாட்னா, சிலிகுரி முதலான இடங்களுக்குப் போவேன். இதில் நான் உறுதியாக உள்ளேன்.

என் முதுமைக்கு உரிய இயலாமையும் என்னைத் துரத்துகிறது.

எப்போதும் 4 மாடிகள் வரையில் மடமடவென ஏறுவேன்; இப்போது மூன்றாவது மாடிக்கு ஏறவே திணறுகிறேன்.

பேருந்திலும், தொடர் வண்டியிலும் 20, 30 கிலோ சுமையுடன் ஏறுவேன்; இறங்குவேன். இதற்கு இப் போது தடுமாறுகிறேன்; பிறர் துணையை நாடுகிறேன்.

எப்போதும் ஒரு மணிநேரம் மிக விசையாக நடப்பேன்; இப்போது அரைமணி நேரம் நடந்தவுடன் அயர்வுறுகிறேன்.

உணவு அளவைக் குறைக்க நேரிடுகிறது.

இவை முதுமையின் விளையாட்டுக் கோலங்கள். இவற்றைத் துணிவுடன் எதிர்கொள்வேன்.

**21.6.2016இல் 92இல் அடியெடுத்து வைக் கும் நான், 95 அகவை வரை நலமாக வாழ விரும்புகிறேன்; அல்ல, அல்ல ஆசைப்படுகிறேன்.**

**என் ஆசை நிறைவேறிட என் குடும்பத்தினர் ஒத்துழைப்பர்.**

**என் கட்சித் தோழர்களும், தமிழ்ப் பெரு மக்களும் மனமார ஒத்துழைக்க அன்புடன் வேண்டுகிறேன்.**

**1-6-2016** **- வே. ஆனைமுத்து**

## தமிழ் மாநிலம் அமைந்த நாளைத் தூக்கிப்பிடித்த

# நா. அருணாசலம் மறைந்தார்



பழைய தஞ்சை மாவட் டம் திருக்கண்ணபுரத்தில் 12.05.1939இல் பிறந்த தோழர் நா.அருணாசலம், அடிப்படையில் பெரியார் கொள்கைப் பற்றாளர்.

அவர் 23.5.2016 திங்கட் கிழமை, சென்னையில் தம் இல்லத்தில் 77ஆம் அகவை யில் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தோழர் நா.அருணாசலம் தமிழ்நாட்டு அரசு வருவாய்த்துறையில் வட்டாட்சியராக இருந்தார். அப் போதே “அடையாறு மாணவர் நகலகம்” (Adayar Students' Xerox) என்ற பெயரில் ஒளிப்படம் எடுத்துத்தரும் தொழிலகத்தைப் பல இடங்களில் அமைத்து, நல்ல வருவாய் ஈட்டினார். அதனை ஒட்டி அரசுப் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றார்.

1956இல், இந்தியா மொழிவாரியாக மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டபோது, 01.11.1956இல் தனித் தமிழ் மாநிலம் ஒரு தனி ஆட்சிப் பகுதியாக அமைந்தது. அப்படித் தமிழகம் அமைந்த “நவம்பர் 1-ஆம் நாளை”த் தமிழக அரசு கொண் டாடியிருக்க வேண்டும்; எண்ணற்ற வகையில் உள்ள எல்லாத் தமிழ் அமைப்புகளும் கொண்டாடியிருக்க வேண்டும்.

எவரும் செய்யாத அந்த அரிய செயலை, அவர் மட்டுமே தம் சொந்தச் செலவில் ஒரு பெருவிழாவாகப் பல ஆண்டுகள் எடுத்தார். இடையில் அவரும் செய்ய முடிய வில்லை; வேறு எவரும் செய்யவுமில்லை.

**கருநாடக அரசு “நவம்பர் 1” என்ற நாளை ஒரு பெருவிழா நாளாக ஊர்தோறும் கொண்டாடுகிறது.**

அவர் நல்ல தமிழ் உணர்வாளர். அதன் வெளிப் பாடாக, தமிழ்ச் சான்றோர் பேரவை, தந்தை பெரியார் தமிழிசை மன்றம் இவற்றை நிறுவினார். 1995இல் “நந்தன்” என்ற தமிழ்க்கிழமை இதழைத் தொடங்கி நடத்தினார். அது செல்வாக்கோடு பரவி, ஓய்ந்தது.

அவர் தமிழ் வழிக் கல்வியின் காப்பாளராகவும் போராளியாகவும் திகழ்ந்தார். சென்னை மாநகரில் தமிழ்வழிக் கல்விக்காக ஒரு பெரும் பேரணியை நடத்தி, “ஒரு நூறு தமிழறிஞர்கள் சாகும் வரை உண்ணாநோன்பு” நோற்கும் எழுச்சியூட்டும் நிகழ்ச்சியை முன்னின்று நடத்தினார்.

அத்தகைய தமிழினப் போராளி நா. அருணாசலம் அவர்கள் மறைவு என்பது தமிழர்க்கும், அவர்தம் குடும்பத் தார்க்கும் பேரிழப்பாகும். அவருடைய குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

வாழ்க நா. அருணாசலம் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# நம்மைப் பற்றி நாம் சிந்திப்போம்!
# நம்மை நாம் வளர்த்தெடுப்போம்!

நமக்கென்று ஒரு தனி இயக்கத்தை நம் தோழர்களில் முன்னோடிகளாக இருந்தவர்களை வைத்து, 8.8.1976இல் தொடங்கினோம். சீர்காழியில்தான், தோழர் மா. முத்துச்சாமி இல்லத்தில், என்னை விட மூத்தவர்களும், இளையவர்களும் இருந்து, ஒருநாள் முழுவதும் கலந்து பேசி நம் இயக்கத்தை உருவாக்கினோம். 8.8.2016இல், 40ஆம் ஆண்டை நம் இயக்கம் நிறைவு செய்யும்.

1. பெரியார் இயக்கம் ஓர் அரசியல் இயக்கம் என்பதை அன்றே நாம் உறுதியுடன் புரிந்திருந்தோம்.
2. பெரியார் விரும்பிய சுயமரியாதை - சமதர்ம அரசை நிறுவுவதே நம் இறுதி இலக்கு என்பதையும் நாம் உறுதி செய்தோம்.
3. இடைக்காலமாக - உடனடி வேலைத் திட்டமாக இன்றைய அரசமைப்புச் சட்டத்திலுள்ள வகுப்பு வாரி உரிமையையாவது வென்றெடுப்போம் என முடிவெடுத்து, அதற்கான இணக்கமான திட்டங்களை வகுத்து, 1978 முதல் 2015 வரையில், 37 ஆண்டுக்காலம் அதிலேயே பெரிதும் தோய்ந்து விட்டோம்.

அந்த ஒரு வேலைத் திட்டத்தைப் பற்றிய ஒரு தெளிவை நாம் பெற்றோம்; தமிழக மக்களுக்கு எடுத்துச் சொன்னோம். வடஇந்திய மக்களுக்கு எடுத்துச் சொன்னோம்.

இதில் நாம் மலைக்கத்தக்க அளவு சாதனைகளைக் குவித்தோம் என்பது மாபெரும் உண்மை.

**அப்படி என்னதான் சாதித்தோம்?**

1. இந்திய அரசமைப்பின்படி, இந்தியா முழுவதிலுமுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு மய்ய அரசு வேலையிலும், கல்வியிலும் இடஒதுக்கீடு ஏன் தரப்படவில்லை என, இந்தியக் குடிஅரசுத் தலைவரிடம் 8.5.1978இல் முதன்முதலாகக் கோரிக்கை வைத்தோம்.
2. இந்தியா ஒரே நாடு என்று இருக்கிறது. தென்னிந்தியாவில், மாநில அரசுகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இருக்கிற இடஒதுக்கீடு, வடஇந்தியாவில் மாநில அரசுகளில் ஏன் தரப்படவில்லை என்பதை பீகாரில் தோழர் ராம் அவதேஷ் சிங்குடன் இணைந்து, பீகார் அரசிடம் கேட்டோம். அதற்காக பீகார் முழுவதும் 17-9-1978 முதல் 17-10-1978 முடிய தொடர்ந்து பரப்புரை செய்தோம்; 19-10-1978 முதல் 31-10-1978 வரை பீகார் தலைநகரான பாட்னாவில் "சிறை நிரப்பும் போராட்டம்" நடத்தினோம்; 10,000 பேர் சிறைப்பட்டனர்.

அந்தப் பெரிய உழைப்பு மூலம், உடனடியாக, இரண்டு வெற்றிகளைக் குவித்தோம்.

முதலாவது வெற்றியாக பீகார் மாநில அரசு 10.11.1978இல் பீகார் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து ஆணை வெளியிட்டது. அதைத்தொடர்ந்து எல்லா வடஇந்திய மாநிலங்களும் முதன்முதலாகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு அளித்தன.

இரண்டாவது வெற்றியாக, இந்திய அரசு, 1.1.1979இல் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழுவை அமைத்தது.

மூன்றாவதாக, தமிழ்நாட்டில் நாம் குவித்த வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்கது.

தந்தை பெரியார் 1971இல், பிற்படுத்தப்பட்டோருக்கு இருந்த 25 விழுக்காடு இடஒதுக்கீட்டை 33 விழுக்காடாக உயர்த்தித்தர, அன்றைய தி.மு.க. அரசிடம் கோரினார்.

அதற்கென தி.மு.க. அரசு சட்டநாதன் குழுவை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரையை ஆய்வு செய்து, தி.மு.க. அரசு 31 விழுக்காடு ஒதுக்கீட்டைப் பிற்படுத்தப்பட்டோருக்கு 1972இல் வழங்கியது.

இதற்கிடையே, 1977இல் அமைந்த அ.தி.மு.க. அரசு, பிற்படுத்தப்பட்டோருக்கு மட்டும் பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்து, "ரூ.9000 ஆண்டு வருமானம் பெறுகிற பிற்படுத்தப்பட்டோரின் பிள்ளைகள் இடஒதுக்கீட்டை அனுபவிக்க முடியாது" என அநியாயமான ஓர் ஆணையைப் பிறப்பித்தது.

தமிழகத்திலுள்ள தி.க., தி.மு.க., காங்கிரசு, இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகளும் மற்றவர்களும் அ.தி.மு.க. அரசின் ஆணையை இரத்துச் செய்யக் கோரிப் பெரிய அளவில் போராடினர்.

**ஆனால், நாம் என்ன செய்தோம்?**

நாம் இரண்டு கோரிக்கைகளை அ.தி.மு.க. அரசிடம் முன்வைத்தோம்.

1. பிற்படுத்தப்பட்டோரில் பொருளாதாரத்தில் வசதியுள்ள சாதியினர்களில் பலர், கல்வி அறிவே பெற்றிருக்கவில்லை. அவர்களில் முதல் தடவையாகக் கல்வி பெற்றவர்கள் வேலைக்குப் போக

வோ, மேல் படிப்புக்குப் போகவோ தடை போடு வது அநியாயம். எனவே அநியாயமான அரசு ஆணையை இரத்து செய்க என்று கோரினோம்.

2. தமிழ்நாட்டில் தமிழ்நாட்டு அரசுக் கணக்குப்படி, பிற்படுத்தப்பட்டோர் 67 விழுக்காடு உள்ளனர். அவர்களுக்குத் தரப்படும் 31 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 60 விழுக்காடாக உயர்த்தி ஆணை யிடுங்கள் எனக் கோரினோம்.

நாம், அ.தி.மு.க. முதலமைச்சரிடம் 19.8.1979இல் இக்கோரிக்கைகளை முன்வைத்தோம். அன்றே அவர் எதிராகப் பேசினார். அவருக்குப் புரிய வைத்திட 3 மாதம் முயன்றோம்; வெற்றி பெற்றோம். தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோருக்கு 31 விழுக்காடாக இருந்த இட ஒதுக்கீட்டை 50 விழுக்காடாக உயர்த்தி, 24.12.1979 இல் அ.தி.மு.க. அரசு ஆணையிட்டது.

**இந்தியா முழுவதிலும், தமிழகத்தில் மட்டுமே பிற்படுத்தப்பட்டோர் 50 விழுக்காடு இடஒதுக்கீடு பெற்றிட, நாம் மட்டுமே காரணம் ஆவோம்.**

மய்ய அரசில், 27 விழுக்காடு இடஒதுக்கீடு தர வேண்டும் என்கிற மண்டல் குழு பரிந்துரையை, காங்கிரசு அரசின் உள்துறை அமைச்சர் கியானி ஜெயில் சிங், 1982 ஏப்பிரலில் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். இதற்கும் நாமே காரணம்.

1982 முதல் 1989 வரை ஆட்சி செய்த இந்திரா காந்தியோ, இராஜீவ் காந்தியோ அந்தப் பரிந்துரையை அமல்படுத்தவில்லை.

நானும், ராம் அவதேஷ் சிங்கும் இந்திராவிடமும், இராஜீவிடமும் இதுபற்றிக் கோரிக்கையை வைத்தோம்.

1961இல் பிரதமர் நேரு அவர்கள் புறக்கணித்தது போலவே, அவருடைய மகளும் புறக்கணித்தார்; பெயரனும் புறக்கணித்தார்.

இடையில், நம் ஒடுக்கப்பட்டோர் பேரவைத் தலைவர் ராம் அவதேஷ் சிங் 1986 முதல் 1992 வரை தில்லி மாநிலங்கள் அவையில் உறுப்பினராக இருந்தார். அவரும் நானும் இராஜீவ் காந்தியிடம் 1987 இல் அளித்த கோரிக்கை விண்ணப்பத்தின் பேரில், ஒருநாள் இரவு 12 மணி வரை மக்கள் அவையில் மண்டல் பரிந்துரை பற்றி விவாதம் மட்டுமே இராஜிவ் காந்தி நடத்தினார்; நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

1990இல் பிரதமராக வந்த வி.பி. சிங் காலத்தில் நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் நாள்தோறும் ராம் அவதேஷ் சிங் மண்டல் பரிந்துரை பற்றி வினாத் தொடுத்தார்.

**அப்போது நடந்த நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய அன்றையக் குடி அரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், மண்டல் பரிந்துரை அமலாக்கம் பற்றி எதுவுமே குறிப் பிடாததால், குடிஅரசுத் தலைவர் தொடர்ந்து உரையாற்ற முடியாதபடித் தடுத்து நிறுத்திவிட் டார், ராம் அவதேஷ் சிங். அவருடைய கோரிக் கையை உன்னிப்பாகக் கவனித்த ஒரே காரணத் தால்தான், பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக் காடு இடஒதுக்கீடு தர வேண்டியதன் முதன்மை யை பிரதமர் வி.பி. சிங் புரிந்துகொண்டார். அத்துடன் அவர் காலத்தில் துணைப் பிரதமராக இருந்த தேவி லால் என்கிற ஜாட் வகுப்புத் தலை வரின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டிய நெருக் கடியும்-வி.பி. சிங், இதுபற்றி உடனே முடிவெடுக் கக் காரணமாக அமைந்தது.**

**6.8.1990 அன்று, பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசு வேலையிலும் பொதுத்துறை வேலை யிலும் மட்டும் 27 விழுக்காடு இடஒதுக்கீடு வி.பி. சிங் அளித்தார். கல்வியில் இடஒதுக்கீடு அளிக்க வில்லை.**

**இந்திய அரசு வரலாற்றில், 1961 மே மாதத் தில், இந்திய அரசு அமைச்சரவையைக் கூட்டி, "காகா கலேல்கர் பரிந்துரைப்படி பிற்படுத்தப் பட்டோருக்கு இந்திய அரசு மய்ய அரசு வேலை யில் இடஒதுக்கீடு தரமுடியாது என்று முடிவு செய்தும்; 1961 ஆகத்தில், "மாநில அரசுகளும் பிற்படுத்தப்பட்டோருக்கு", சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு தரக்கூடாது என்று மாநில முதல்வர் களுக்கு மடல்கள் எழுதியும் பண்டித நேரு செய்த துரோகம்" தோற்கடிக்கப்பட்ட நாள் தான், 6.8.1990.**

**இந்த மாபெரும் சாதனைக்குக் கால்கோளிட்ட தும், இதைச் சாதித்ததும் மா.பெ.பொ.கட்சியும், நம் ஒடுக்கப்பட்டோர் பேரவையுமே.**

இதுவே உண்மை வரலாறு.

நமக்கு, இவை மட்டுமே போதுமா?

போதாது! போதாது! போதாது!

இவ்வளவு சாதனைகளுக்கும் தொடர்ந்து பங்களிப் புச் செய்த நம் செயல் மறவர்களான முன்னோடிகளில் 35 பேர்களுக்கு மேற்பட்டோர் மறைந்துவிட்டனர்.

இந்நிலையில், நம் அடுத்தகட்ட முழுவீச்சுப் பணி கள் நம் இயக்கத்தையும், நம் "சிந்தனையாளன்" இதழையும் உயிரை விட்டேனும் வலிமைப்படுத் துவது முதன்மையாகும்.

நம் சாதனைகளில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது எல்லாம் இடஒதுக்கீடு பற்றியவையே.

**இவற்றைப் பற்றித் தமிழக மக்களிடம் சொல்ல நாம் தவறிவிட்டோம் என்கிற குற்ற உணர்வு நம்**

**தோழர் ஒவ்வொருவருக்கும் வந்தாக வேண்டும். இது மட்டுமா?**

இந்தியாவில் ஒரு மாநில அரசாக மட்டுமே இருக்கிற தமிழ்நாடு-ஓர் அடிமைகள் நாடு என்பதை நாம் தமிழ்ப் பெருமக்களுக்கும்-குறிப்பாக இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் உணர்த்தித் தீரவேண்டும்.

இந்திய அரசுக்கு அடிமையாக இருப்பதை நம் மக்களுக்கு உணர்த்தாமல், தமிழ்நாட்டுத் தமிழர் களை அடிமைகளாக வைத்திருக்கிற இந்திய அரசு - தமிழீழத் தமிழரின் விடுதலைக்கு இதுகாறும் உதவ வில்லை என்பதுடன், இனியும் உதவாது என்பதை நம் இளைஞர்களுக்கு நாம் புரிய வைக்க வேண்டும்.

"ஈழ விடுதலை" என்பதை விதந்து பேசுவதை மட்டும் செய்கிற தமிழ்நாட்டுத் தலைவர்களும், தேசிய இன விடுதலையில் நாட்டம் உள்ளோரும், தமிழக மக்கள் இந்திய அரசுக்குப் பச்சை அடிமைகளாக இருக்கிற போது, நம் சொல்லுக்கு ஆதிக்கவாத இந்திய அரசு எப்போதும் இணங்காது - செவி சாய்க்காது என்பதை உணர வேண்டும்; இதை எல்லோரும் உணரச் செய்வோம்.

இந்திய வல்லரசை எதிர்க்கிற தமிழர்கள் - தமிழ் நாட்டிலிருக்கிற தமிழ் மக்கள் ஏழு கோடிப் பேர் எனக் கொண்டாலும், இந்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுத்து, இவர்களில் ஒரு கோடிப் பேருக்கு மேல் சாகத் துணிய வேண்டுமே! இந்திய அரசுப் படை யினரால் நசுக்கப்படுவதை எதிர்த்துப் போராடுவது என்றால், அது சாவுதானே! சாவை முத்தங்கொடுப்பது தானே! ஆனால், தமிழர் - மறத் தமிழர் - மண் ணெண்ணெயை ஊற்றித் தீவைத்துக் கொண்டு சாகிற மறவர்களை அல்லவா நாம் உருவாக்கியிருக்கிறோம்! இது முறையா? இது சரியா? என, ஏன் தமிழர் தலைவர்கள் சிந்திக்கக் கூடாது?

**தமிழருக்கு இன்று உயிரான உரிமை, தமிழ் நாட்டில் கல்வியில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரையில் தமிழ் வழியிலேயே கல்வி தரப் பட வேண்டும் என்பதே. இதற்கு இந்திய அரசு தடையாக இல்லை.**

இந்த அடிமைத் தமிழ்நாட்டில் இதைச் சாதித்திட, சில நூறு பேர் துமுக்கிக்கு இரையானால், வெற்றி பெற்றுவிடுவோமே!

அதைவிடுத்து நாள் கணக்கில் விளக்க உரைகள் ஆற்றுவதும், நூற்றுக்கணக்கில் மாநாடுகள் நடத்துவ தும் மட்டுமா தமிழைப் பயிற்று மொழியாக்கும்? ஆக்காது.

**நாம்-மா.பெ.பொ.க. தோழர்கள் தமிழ்நாட் டில் இந்த ஒற்றைக் கோரிக்கையை உடனே தூக்கிப் பிடிப்போம்!**

இக்கோரிக்கைக்கு வலிமை சேர்த்திட, நம் ஒரே ஊடகமான "சிந்தனையாளன்" மாத இதழை - 4,000 படிகளிலிருந்து, 40,000 படிகளாக உயர்த்திட ஒரு நூறு நாள்கள், 2016 சூன் - சூலை - ஆகத்து வரை, உரிய பணிகளை மேற்கொள்வோம்.

தமிழகத்தைச் சுற்றிச் சுற்றி வருவோம்! எல்லா மாவட்டங்களிலும் "சிந்தனையாளன்" - ஆண்டுக் கட்டண உறுப்பினர்கள், பத்தாண்டுக் கட்டண உறுப் பினர்கள், வாழ்நாள் புரவலர்கள் என, 40,000 தமிழ்ப் பெருமக்களிடம் அணுகிப் பணம் திரட்டுவோம்.

நம் இதழ், 40,000 படிகள் தமிழ்ப் பெருமக்களி டம் பரவினால், 400 ஊர்களில் கட்சிக் கிளைகள் தோன்றிவிட்டது என்று பொருள்!

நம் இறுதி இலக்கு 40,000 படிகள்! நம் உடனடிச் சாதனையாக 20,000 படிகள்!

**நம்மை நாம் ஆய்வு செய்வோம்!**
**நம்மை நாம் வளர்த்தெடுப்போம்!**

**- வே. ஆனைமுத்து**

## "மகிழினி" தோற்றம்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் மாணவர்-இளைஞரணி முன்னணித் தோழரும், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டி வட்டம், கீழப்பெருமழை அ. சோமசுந்தரம்-இலலிதா இணையரின் மகனுமாகிய தோழர் சோ. அண்ணாதுரை-இராகினி இணையர் 26.01.2015 இல் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து தலைமையில் சுயமரியாதைத் திருமணம் ஏற்றனர். இவ்வாழ்விணையருக்கு 04.05.2016 புதன்கிழமை காலை 9.00 மணி யளவில் பெண் மகவு பிறந்துள்ளது. இக்குழந் தைக்கு "**மகிழினி**" எனப் பெயர்சூட்டி மகிழ்ந்தனர். மகிழினி தோற்றத்தின் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதி உருவா 1000 வழங்கப்பட்டது.

# அம்பேத்கர் பிறந்தநாள் விழாவையொட்டி தலித்துகளின் கதறல்

**- ஆனந்த் டெல்தும்ப்டே**

அம்பேத்கரின் 125ஆவது பிறந்த நாளை மாபெரும் அளவில் மற்றவர்கள் கொண்டாடவிருந்த நேரத்தில், மனிதக்கழிவை அகற்றும் வேலை செய்யும் தாழ்த்தப்பட்டவர்களில் ஒருபகுதியினர் தில்லியில் திரண்டனர். அசாம் மாநிலத்தில் திப்ருகர் எனும் இடத்திலிருந்து நான்கு மாதங்களுக்குமுன் புறப்பட்ட இவர்கள் 3500 கிலோ மீட்டர் நடந்து, தில்லியை அடைந்தனர். இந்த நடைப்பயணம் "பீம் யாத்திரா" என்று அழைக்கப்பட்டது. மனிதக்கழிவை அகற்றும் பணி செய்யும் இத்தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் 30 மாநிலங்களில் 500 மாவட்டங்களில் 3500 கிலோ மீட்டர் தொலைவு நடந்து, 2016 ஏப்பிரல் 13 அன்று தில்லி ஜந்தர் மந்தரை அடைந்தனர்.

தலித் மக்களின் இப்பேரணியை "சபய் கர்மச்சாரி அன்டோலன்" (Safai Karmachari Andolan - SKA) அமைப்பு நடத்தியது. இந்தியாவில் துப்புரவுப் பணியில் ஈடுபடும்போது ஆண்டுதோறும் 22,000 பேர் மாண்டு போகின்றனர். எனவே இப்பேரணியில் "எங்களைக் கொல்லாதீர்" என்று முழக்கமிட்டனர். 2016 மார்ச்சு மாதத்தில் மாநிலங்கள் அவையில் தருண்விஜய் என்கிற பா.ச.க. உறுப்பினர் ஆண்டு தோறும் 22,000 துப்புரவுப் பணியாளர்கள் இறப்ப தாகக் கூறினார். பல சிறுவர்கள் தங்கள் கண்களில் நீர்மல்க, துக்கம் தொண்டையை அடைக்க, தங்கள் தந்தையரும் உறவினர்களும் துப்புரவுப் பணியின் போது நச்சு வாயுவால் தாக்குண்டு மடிந்த கொடிய நிகழ்ச்சிகளைக் கூறினர் என்று தருண்விஜய் தன் உரையில் குறிப்பிட்டார். இவ்வாறு அவர் பேசுவது கொடிய முரண் கூற்றாக இருக்கிறது. ஆளும் வர்க்கத்தினரால் இப்போது அம்பேத்கர் வானளாவிய உயர்ந்த தலைவர் என்று போற்றப்படுகிறார். ஆனால் அம்பேத்கர் எந்த மக்களுக்காக வாழ்ந்தாரோ - போராடினாரோ அம்மக்கள் தாங்கள் உயிர் பிழைத்திருப்பதற்கான அடிப்படைத் தேவைகளை வழங்குமாறு மன்றாடும் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

**பரவி வரும் போலித்தனம்**

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தீண்டாமையை ஒழித்துவிட்டதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால் தீண்டாமைக்கு ஊற்றுக்கண்ணாக உள்ள காரணிகள் மாற்றப்படவில்லை. தில்லிக்குப் பேரணியாகச் சென்ற மனிதக் கழிவை அகற்றும் பணி செய்வோர் தீண்டப்படாதவர்களுள், கொடிய தீண்டாமைக்கு இலாக்காகும் பிரிவினராக இருக்கின்றனர். **அவர்கள் சாதி இந்துக்களுக்கு மட்டும் தீண்டப்படாதவர்களாக இல்லை; மற்ற தீண்டப்படாதவர்களுக்கும் தீண்டப்படாதவர்களாக இருக்கின்றனர்.**

தீண்டாமை குறித்து காந்தியின் கருத்து பிற்போக்குத்தனமாக இருந்தபோதிலும், மனிதக் கழிவை அகற்றும் தலித்துகளின் உள்சாதியான 'பங்கி' (Bhangi) தான் தலித்துகளின் பிரதிநிதி என்று கூறினார். மேலும்



தன்னை ஒரு 'பங்கி' என்றும் கூறிக்கொண்டார். மனிதக்கழிவை அகற்றுவோர் குடியிருந்த பகுதியில் தங்கியதன் மூலம் அவர்கள்பால் தான் கொண்டுள்ள உண்மையான ஈடுபாட்டை வெளிப்படுத்தினார்.

மனிதனின் மாண்பை இழிவுபடுத்துகின்ற மனிதக் கழிவை அகற்றும் பணியைச் சட்டப்படி ஒழித்து, இப்பணியில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டியது, காந்தி பெயரால் ஆட்சி நடத்தும் அரசின் முதன்மையான கடமையாகும். ஆனால் அரசுகளோ இதற்காகக் குழுக்களையும் ஆணையங்களையும் அமைப்பதுடன் தம் பொறுப்பைத் தட்டிக் கழித்து வருகின்றன. இந்தக் குழுக்களும் ஆணையங்களும் மனிதக்கழிவை அகற்றுவோரின் கொடிய அவலங்கள் குறித்துப் பக்கம் பக்கமாக அறிக்கைகளை அளிக்கின்றன. ஆனால் கடந்த 46 ஆண்டுகளில் இந்த இழிநிலையை ஒழித்திட உருப்படியாக ஏதும் செய்யவில்லை.

மனிதக்கழிவை மனிதர் அகற்றும் நிலையை ஒழிப்பது என்பதற்கான குரல் 1949 முதல் இன்று வரை ஒலித்து வருகிறது. 1949இல் பம்பாய் மாகாண அரசு, மனிதக்கழிவை அகற்றுவோரின் வாழ்நிலையை ஆராய்வதற்கும், அந்நிலை அகற்றுவதற்குமான வழிமுறைகளைக் கூறுவதற்கும் என, வி.என்.பார்பே தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு அதன் அறிக்கையை 1952இல் அளித்தது. 1955இல் நடுவண் அரசின் உள்துறை அமைச்சகம் அக்குழுவின் பரிந்துரைகளை எல்லா மாநில அரசுகளுக்கும் அனுப்பி, அவற்றைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டது.

1957ஆம் ஆண்டு நடுவண் அரசின் உள்துறை அமைச்சகம் மனிதக்கழிவை மனிதர் அகற்றும் இழிநிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு திட்டத்தை வகுத்தளிப்பதற்காக என்.ஆர். மல்கானி தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு 1960இல் அறிக்கையை அளித்தது. நடுவண் அரசும் மாநில அரசுகளும் இணைந்து, படிப்படியான முறையில் மனிதக் கழிவை மனிதர் அகற்றும் நிலையை ஒழித்திட, ஒரு திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும் என்று மல்கானி குழு பரிந்துரைத்திருந்தது. இப்பரிந்துரைகள் மீதும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இச்சிக்கல் குறித்து ஆராய நடுவண் அரசு 1965 இல் மற்றொரு குழுவை அமைத்தது. வீடுகளில் உலர் கழிவறைகள் (Dry-latrine) இருப்பதால். அவற்றிலிருந்து மனிதக் கழிவுகளை அன்றாடம் அகற்றும் பணியைப் பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்றனர்; எனவே வீடுகளில் உலர் கழிவறைகளை ஒழிக்க வேண்டும் என்று இக்குழு பரிந்துரைத்தது. இப்பரிந்துரையும் குப்பைக் கூடையில் போடப்பட்டது. 1968-69இல் தேசியத் தொழிலாளர் ஆணையம், மனிதக்கழிவை மனிதர் அகற்றுவோர். அவர்களது பணிநிலைகள், வாழ்க்கை நிலைமைகள் ஆகிவற்றை நெறிப்படுத்தும் வகையில் ஓர் ஒருங்கிணைந்த சட்டத்தை இயற்ற வேண்டும் என்று பரிந்துரைத்தது. 1969இல் காந்தியாரின் நூற்றாண்டின் போது உலர் கழிவறைகளைத் தண்ணீர் பீய்ச்சியடித்து மனிதக் கழிவை அகற்றும் கழிப்பறைகளாக மாற்றுவதற்கான ஒரு சிறப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் தோல்வியுற்றது.

1980இல் நடுவண் அரசின் உள்துறை அமைச்சகம், உலர் கழிப்பறைகளை நவீன கழிப்பறைகளாக மாற்றவும், கையால் மலம் அகற்றுவோரையும் அவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் வேறு நல்ல பணிகளில் அமர்த்திடவும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1985இல் இத்திட்டம் உள்துறை அமைச்சகப் பொறுப்பிலிருந்து நலவாழ்வுத் துறைக்கு மாற்றப்பட்டது. 1991இல் திட்டக்குழு இத்திட்டத்தை இரண்டாகப் பிரித்தது. அதன்படி ஊரக மேம்பாடு மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகங்கள் உலர்கழிப்பறைகளை நவீன கழிப்பறைகளாக மாற்றும் பொறுப்பை ஏற்க வேண்டும். நல்வாழ்வுத்துறையிடம் (1999 மே மாதம் இத்துறையின் பெயர் சமூகநீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது). மலம் அகற்றுவோரின் மறுவாழ்வு பொறுப்பு வழங்கப்பட்டது. 1992இல் நல்வாழ்வு அமைச்சகம் மலம் அகற்றுவோரை அப்பணியிலிருந்து விடுதலை செய்து மறுவாழ்வு அளிப்பதற்கென ஒரு தேசியத் திட்டத்தை அறிவித்தது. அதனால் ஒரு பயனும் உண்டாகவில்லை.



**கொடிய புறக்கணிப்பு**

அரசமைப்புச் சட்ட விதிகள் 14, 17, 21 மற்றும் 23 ஆகியவற்றின் அடிப்படையில் மனிதக்கழிவை மனிதர் அகற்றும் நிலையை ஒழித்திட முடியும். எடுத்துக்காட்டாக 1955இல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின் (இதற்குமுன் இது 1955ஆம் ஆண்டைய தீண்டாமைக் குற்றங்கள் தடுப்புச் சட்டம் என்று அழைக்கப்பட்டது) பிரிவுகள் 7A மற்றும் 15A ஆகியவற்றுக்கு அரசமைப்புச் சட்டத்தின் விதி 17இன்படி செயல்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டது. இதன்படி மனிதக்கழிவை அகற்றுவோரை அப்பணியிலிருந்து விடுதலை செய்வதற்கும், மனிதக்கழிவை அகற்றுவோரைத் தொடர்ந்து அப்பணியில் ஈடுபடுத்துவோரைத் தண்டிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டது.

**எனவே, இதன் பின்னணியில் மனிதக்கழிவை அகற்றுவோர்க்கு மாற்று வேலைகளில் அமர்த்தல் மற்றும் உலர் கழிப்பறைகளைக் கட்டுதல் தடைச் சட்டம் என்பதை 1993இல் தனியாக**

**இயற்றியிருக்கத் தேவையில்லை எனக் கருத இடமுண்டு. இச்சட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் 1993 சூன் 5 அன்று ஒப்புதல் வழங்கினார். ஆனால் 1997 வரை இந்திய அரசிதழில் (Gazette) இச்சட்டம் வெளியிடப்படவில்லை. 2000 ஆண்டு வரையில் எந்தவொரு மாநில அரசும் இதை ஒரு சட்டமாக அறிவிக்கவில்லை.**

**மனிதக்கழிவை மனிதர் அகற்றும் நிலையை ஒழிப்பதில் தொடர்ந்து அக்கறை காட்டாமல் புறக்கணித்துவரும் அரசுகளின் போக்கால் எரிச்சலுற்ற மனிதக்கழிவை அகற்றும் வேலையைச் செய்வோரின் பிள்ளைகள், மனிதக்கழிவை மனிதர் அகற்றுவதை ஒழிக்கும் சங்கம் (SKA) என்பதை ஏற்படுத்தினர். 1994ஆம் ஆண்டு இச்சங்கமும், குடியுரிமைச் சங்கங்களாலும், மனிதக்கழிவை அகற்றுவோர் சமூகத்தைச் சேர்ந்த ஏழு பேரும் சேர்ந்து 2003 திசம்பரில் இதுகுறித்து ஒரு பொதுநல வழக்கை உச்சநீதி மன்றத்தில் தொடுத்தனர். சட்டப்படி நடவடிக்கை எடுக்காததால் அரசுகள்மீது கண்டன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பொதுநல வழக்கில் கோரியிருந்தனர். 12 ஆண்டுகள் நடந்த இந்த வழக்கு விசாரணையின்போது மாநில அரசுகள் தெரிவித்த மறுப்புகளை இச்சங்கத்தினர் (SKA) விரிவான புள்ளிவிவரங்களை நீதிமன்றத்தில் அளித்து அரசுகளின் பொய்யைத் தோலுரித்துக் காட்டினர். இறுதியில் 2014 மார்ச்சு 27 அன்று மனிதக்கழிவை அகற்றுவோர் சங்கத்தின் கோரிக்கைக்கு ஆதரவான தீர்ப்பை உச்சநீதி மன்றம் வழங்கியது.**

மனிதக்கழிவை அகற்றும் பணியின்போது (சாக்கடைக் கால்வாய் உள்ளிட்ட) இறக்கும் துப்புரவுப் பணியாளர்களின் வாரிசுக்கு ரூ.10 இலட்சம் இழப்பீடாக வழங்க வேண்டும். 1993 முதல் துப்புரவுப் பணியின்போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் ரூ.10 இலட்சம் வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. 'பீம் யாத்ரா' வெளியிட்ட ஆவண அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள-துப்புரவுப் பணியின்போது இறந்த 1268 பேரில் 18 பேருக்கு மட்டும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டில், கழிவுகளைத் துப்புரவு செய்யும் பணியில் மனிதர்களை ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கான மற்றொரு சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது. ஆனால் நடப்பில் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. 1993ஆம் ஆண்டின் சட்டத்திற்குப் பின் மாநில அரசுகள் தங்கள் மாநிலத்தில் மனிதக் கழிவுகளை மனிதர் அகற்றும் நிலை இல்லை என்று அடாவடித்தனமாக மறுத்து வந்த நிலையில், 2011ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அறிக்கையின்படி, இந்திய அளவில் 7,94,000 பேர் மனிதக்கழிவை அகற்றும் பணியில் இருக்கின்றனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தை மீறுவதில் அரசுத் துறைகளே முதலிடம் வகிக்கின்றன. தொடர் வண்டிகளில் உள்ள கழிப்பறைகள் நவீனப்படுத்தப்படவில்லை. இந்தியாவில் பயணிகள் தொடர் வண்டி ஏற்பட்ட போது இருந்த நிலையிலேயே அவை இன்றும் இருக்கின்றன (தொடர் வண்டி ஓட்டுநருக்குக்கூட கழிப்பறை வசதி இல்லை என்பது கூடுதலான செய்தி). எனவே தொடர் வண்டியில் உள்ள கழிப்பறைகளிலிருந்து மனிதர்களின் மலம் தண்டவாளப் பகுதியில் கீழே விழுகிறது. இம் மலத்தைத் துப்புரவுப் பணியாளர்கள் அகற்றுகின்றனர்.

தலைமை அமைச்சர் நரேந்திரமோடி "தூய்மை இந்தியா திட்டத்தின்" கீழ் 2019ஆம் ஆண்டிற்குள் மனிதக்கழிவை மனிதர் அகற்றும் நிலை ஒழிக்கப்படும் என்று ஆரவாரத்துடன் முழங்கினார். இந்தியாவில் 'புல்லட்' இரயில்கள் பறக்கும் என்று கூறுகிறார். ஆனால் தொடர் வண்டிகளில் தற்போதுள்ள கழிப்பறைகளை உயிரிக்கழிப்பறைகளாக (Bio-Toilets) மாற்றப்படுவதற்கான காலக்கெடு குறித்துக் கோடிட்டுக் கூடக் காட்டவில்லை.

**ஈடுபாடு இல்லாமை ஏன்?**

**பீம் யாத்ராவின் முடிவில் மனிதக்கழிவை மனிதர் அகற்றல் ஒழிப்புச் சங்கம் எழுப்பிய வினாவுக்கு, நடுவண் அரசு 19.4.2016 அன்று அளித்த பதிலில், மனிதக்கழிவை அகற்றுவோர் எண்ணிக்கை குறித்து மாநில அரசுகளிடமிருந்து விவரங்களைப் பெற முடியாததால், நடுவண் அரசே இந்தக் கணக்கெடுப்பை நடத்த எண்ணியிருப்பதாக கூறியுள்ளது. இவ்வாறு நடுவண் அரசு கூறுவதன் நோக்கம், இன்னும் ஒரு பத்தாண்டுகளுக்கு மனிதக்கழிவை அகற்றுவோர் நடத்தும் போராட்டத்தைத் தள்ளி வைக்கச் செய்வதற்கான முயற்சியே ஆகும். உலக அரங்கில் முதன்மையான ஆற்றலாக விளங்கிட விரும்புகின்ற இந்த அரசு, மனிதக்கழிவை மனிதர் அகற்றும் களங்கத்துடன் இருக்க விரும்புவது ஏன்?**

இது ஒன்றும் எளிதில் விடைகாண முடியாத வினா அன்று! இந்தியாவில் தேர்தல் களத்தின் அடிப்படையில் தான் அரசியல் முனைப்புகள் இருக்கின்றன. சிறிய



*கையால் மலம் அள்ளுவதை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பரிக்கும் மகளிர்*

எண்ணிக்கையினராக உள்ள மனிதக்கழிவை அகற்றுவோர், ஒவ்வொரு நகரத்திலும் பெரும்பான்மையினராக உள்ள சமூகத்திடமிருந்து மட்டுமின்றி, தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து ஒதுக்கப்பட்டு இழிந்த வாழ்நிலையில் தனியாக வாழ்கின்றனர். எனவே இவர்கள் எந்தவொரு அரசியல் கட்சியின் வாக்கு வங்கித் திட்டத்திலும் புறக்கணிக்கத்தக்க நிலையினராகவே உள்ளனர். முன்பு தீண்டாமை தேசிய அளவில் ஒரு களங்கமாகக் கருதப்பட்டது போல, மனிதக் கழிவை அகற்றல் என்பது குறித்த விவாதம் எழும்போதெல்லாம், அரசுக்கு ஒரு சங்கடமான நிலை ஏற்படுகிறது.

தீண்டாமையைப் போலவே மனிதக்கழிவை மனிதர் அகற்றுவது என்பதும் நிலப்பிரபுத்துவக் கலாச்சாரத்துடன் பிணைக்கப்பட்டுள்ள ஒன்றாகும். இவற்றை நீக்கிட முயன்றால், பெரும்பான்மை சமூகத்தின் மனக்கசப்பை எதிர்கொள்ள நேரிடும். மனிதக்கழிவை மனிதர் அகற்றும் நிலையை ஒழிப்பதில் ஆளும் வர்க்கம் ஆர்வம் காட்டாமல் இருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இதில் தலித்துகள் நாட்டமின்றி இருப்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. முன்னணியில் உள்ள தலித் இயக்கங்கள் மனிதக் கழிவை அகற்றும் இழிநிலையை ஒழித்திட வேண்டுமென்று தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

தலித் இயக்கத்தின் முதன்மையான உத்தி பிரதிநிதித்துவ அரசியல் என்பதாகவே இருந்துவருகிறது. தலித்துகள் அரசியலில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்பதற்காக டாக்டர் அம்பேத்கர் போராடினார். அதில் வெற்றி பெற்ற பின், அரசு வேலைகளிலும் தலித்துகளுக்கு இடஒதுக்கீடு பெற்றுத்தந்தார், தலித் அரசியல்வாதிகள் தங்கள் சமூகத்தினரின் அரசியல் உரிமைகளைப் பேணிக் காப்பார்கள் என்றும், அரசு வேலைகளில் அமர்வோர் உழைக்கும் தலித் மக்களின் நலன்களுக்குக் காவல் அரணாகத் திகழ்வார்கள் என்றும் அம்பேத்கர் எதிர்பார்த்தார், உழைக்கும் தலித் வெகுமக்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்கும் இடஒதுக்கீட்டு முறைக்கும் நேரடியான தொடர்பு இல்லை.

**எனவே இடஒதுக்கீடு என்பது மட்டுமே தலித் இயக்கத்தின் ஒரே குறிக்கோளானது. எனவே உழைக்கும் தலித் மக்களின் பிரச்சனைகளிலிருந்து இது விலகி நிற்கிறது. கடந்த எழுபது ஆண்டுகளில் நடுத்தர வர்க்கமாக உயர்ந்த தலித்துகள் வெகுமக்களாக - உழைப்பாளிகளாக உள்ள தலித் மக்களிடமிருந்து தங்களை முற்றிலுமாக அந்நியப்படுத்திக் கொண்டனர்.**

**ஆகவேதான், பீம் யாத்ராவில் அம்பேத்கர் எழுச்சியூட்டும் மாபெரும் தலைவராக முன்னிறுத்தப்பட்ட போதிலும், பீம் யாத்ராவில் “அம்பேத்கரிய வாதிகள்” பங்கேற்கவில்லை. முற்போக்குச் சிந்தனை கொண்ட சிலர் தனிப்பட்ட முறையில் மனிதக்கழிவை மனிதர் அகற்றுவதை ஒழிப்பதற்கான பீம் யாத்ராவில் கலந்துகொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். ஆனால் தங்களை அம்பேத்கரிய வாதிகள் என்று பறைசாற்றிக் கொள்வோர் எவரும் இதில் கலந்து கொள்ளவில்லை.**

(நன்றி : Economic and Political Weekly, 2016 மே 7. தமிழாக்கம் : **க. முகிலன்**)

# காஷ்மீரைப் பாருங்கள்
# நம்மால் அறியப்பட்ட காஷ்மீர்!
# நாம் அறிய வேண்டிய காஷ்மீர்!
# ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பும், இந்திய அரசமைப்பும்

10

**பிரதமர் ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டார்!**

ஆசாத் காஷ்மீர் - பாக்கித்தான் நிருவாகத்தின் கீழ் இருந்தது. அவர்களிடையே ஒரு ஒப்பந்தம் மட்டுமே இருந்தது. அந்த ஒப்பந்தம் என்ன கூறியது?

1. ஆசாத் காஷ்மீரின் பாதுகாப்பு;
2. அயலுறவுக் கொள்கை;
3. அய்.நா. அவையில் தொடரும் வழக்கு மற்றும் விவாதங்கள்;
4. ஜம்மு-காஷ்மீர் குறித்து மற்ற நாடுகளில் செய்யப்படும் பரப்புரை;
5. மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு தொடர்பான விவகாரங்கள்;
6. இடம்பெயர்ந்த அகதிகளின் உணவு, போக்குவரத்து உள்ளிட்ட பிற தேவைகள்.

இவற்றை பாக்கித்தான் அரசு கவனித்துக் கொள்ளும்.

ஆசாத் காஷ்மீரிடம் உள்ளாட்சி விவகாரங்களும் பிற நிருவாக அதிகாரங்களும் இருக்கும்.


முஸ்லீம் மாநாட்டுக் கட்சிக்கு-அரசியல் விவகாரங் களை நடத்திச் செல்லும் பணி மற்றும் பிரிந்திருக்கும் ஜம்மு-காஷ்மீரையும் அதன் மக்களையும் 'ஒன்றுபட்ட காஷ்மீர்' நோக்கி ஒருங்கிணைக்கும் பணி இவை ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்தியாவுடன் இருக்கும் காஷ்மீரில், ஷேக் அப்துல்லா தலைமையில் ஒரு சீரான அரசமைப்பு நிர்வாகத்தைக் கவனிப்பதற்கான நிருவாகம் இருந்தது.

ஆசாத் காஷ்மீரில் நிர்வாகத்திலிருந்தவர்கள் பெரும் பாலும் சிறீநகரிலிருந்து இடம்பெயர்ந்து வந்த அதி காரிகள்தான். அவர்களே அங்கே உயர் அதிகாரிகளாக இருந்தார்கள்.

இந்த நிலையில், பாக்கித்தான் அரசு, ஆசாத் காஷ்மீரில் குடிஅரசுத் தலைவராக இருந்த இப்ராகிம் கான் என்பவரைப் பதவி நீக்கம் செய்தது. இதனால் அங்குப் புதிய சிக்கல் தோன்றியது. அது என்ன?

அவர், பூஞ்ச் பகுதியைச் சேர்ந்த 'சூடான்' இனத்தைச் சேர்ந்தவர். எனவே பூஞ்ச் பகுதி மக்கள் பாக். நடவடிக் கையை எதிர்த்தனர். "எங்கள் இனத்தைச் சேர்ந்தவர் பதவியில் இருக்கக்கூடாது என்றால், எங்களை ஆளும் தகுதி உங்களுக்கு இல்லை" என்று கூறிப் போராட் டங்களை நடத்தினர்.

ஆசாத் காஷ்மீர் பகுதியில் நிலவளமோ, வருவாய்க்கு வழிசெய்யும் மற்ற ஆதாரங்களோ இல்லை என்பது பின்னாளில் தான் மக்களுக்குப் புரிந்தது. ஏற்கெனவே அங்கு நடப்பில் இருந்த ஜமீன்தாரர் பாணி நில வுடைமை மாறி, ஷேக் அப்துல்லா பாணி நிலச் சீர்திருத்தங்கள் ஆசாத் காஷ்மீரிலும் தொடங்கின. ஆனால் அவை மட் டுமே வருவாய் தரப் போதுமானதாக இல்லை.



**ஷேக் அப்துல்லா**

மேலும் போதுமான பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், பிற வாழ்க் கை வசதிகள் ஏதுமின்றி மக்கள் மிகவும் துன்பப் பட்டனர். தங்களுடைய பெரும்பாலான தேவைகளுக்குப் பாக்கித்தான் அரசை நம்பியே இருந்தனர்.

**ஆனால், "காஷ்மீர் முழுவதும் தனக்கே வேண்டும்" என்பதில் நாட்டம் கொண்டிருந்த பாக்கித்தான் அரசு ஆசாத் காஷ்மீருக்கு மட்டும் முன்னேற்றம் தரும் நடவடிக்கைகளை மேற் கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை.** மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தினால் முழு காஷ்மீரும் தன்வசம் வந்துவிடும் என்று நம்பிய பாக்கித்தான், அதில் தான் அவசரம் காட்டியது. அதனால்தான், ஆசாத் காஷ்மீரில் வாழும் மக்களின் தேவைகள் பற்றி அக்கறை கொள்ளவில்லை. அந்த மக்களும், "முழு காஷ்மீரும் நம்மோடு வந்து சேரட்டும்; அதுதான் நமக்கு விடிவு தரும்" என்று மடத்தனமாக நம்பினர்.

இந்நிலையில் ஷேக் அப்துல்லா ஆசாத் காஷ்மீரை அலட்சியமாக நினைத்தாலும், அங்கிருந்த மக்களுடனும், தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்புடன் இருப்பதைக் கைவிடவில்லை.

இத்துடன் இந்தியத் தலைவர்கள், காங்கிரசுக் கட்சி, அதன் கொள்கைகள், நடவடிக்கைகள் இவற்றை விமர்சனம் செய்து பேசி வந்தார். பல நேரங்களில் நேருவையும் விமர்சித்தார். மேலும், "இந்தியா என் றைக்கும் தனது இந்து மத வாதங்களைக் கைவிடாது; பெருவாரி மக்களான இந்துக்களைத் திருப்திப்படுத்த

வேண்டியிருப்பதால், காங்கிரசுக் கட்சியால் நடு நிலைமையில் இருக்க முடியாது'' என்றும் கூறத் தொடங்கினார், அப்துல்லா.

ஒரு கட்டத்தில், ''இந்தியாவுடன் சேர்ந்திருப்பதுதான் காஷ்மீர் மக்களான நமக்குப் பாதுகாப்பு என்று நான் சொன்னது உண்மைதான். ஆனால், இப்போது, படித்து வேலையற்ற இளைஞர்கள் எல்லாம் பாக்கித்தானில் நடப்பதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தியாவில், படித்த இந்துக்களுக்கு அரசு வேலையில் மிகப் பெரிய வேலை வாய்ப்புகள் இருக்கையில், அங்கு முஸ்லீம்களுக்கு மட்டும் அது எட்டாக் கனியாக இருக் கிறது. சில இடங்களில் முஸ்லீம்களுக்குத் தடையே கூட இருக்கிறது'' என்று, மேடைகளில் பேசத்தொடங்கினார். அதற்கு எடுத்துக்காட்டாக, முஸ்லீம்களுக்கு அஞ்சல் நிலை யங்களில் வேலை தரப்படவில்லை என்று குறிப்பிட்டுக் கூறினார்.

இந்த நேரத்தில்,

1. 'வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்ட ஷேக் அப்துல்லா, அங்கு பாக்கித்தான் அதிகாரிகளைச் சந்தித்தார்' என்ற செய்தியும் கசிந்தது.
2. 1953 மே மாதத்தில், டேட்லி ஸ்டீவென்சன் என்ற அமெரிக்கரை ஷேக் அப்துல்லா சந்தித்தது, பெரிய குற்றமாக இந்திய அரசால் கருதப்பட்டது. ஏன்?

இந்த ஸ்டீவென்சன்தான், ''காஷ்மீர் சிக்கலுக்குச் சரியான தீர்வு என்றால், அது இந்தியா - பாக்கித்தான் இரண்டையும் சமநிலையில் வைத்து விட்டுத் தனி நாடாகக் காஷ்மீர் இருப்பதுதான்'' என்று சொன்னவர்.

காஷ்மீர் சிக்கலில் தாங்கள் தலையிடுவதில்லை என்று அமெரிக்கா சொல்லி வந்தாலும் - அமெரிக்காவின் மறைமுக ஆதரவு ஷேக் அப்துல்லாவுக்கு இருக்கிறது என்று இந்தியா நம்பியது.

3. 1953 சூலை 13 அன்று, ''தியாகிகள் தினம்'' என, மறைந்த அப்துல் காதர் நினைவாக, ஜம்மு-காஷ் மீர் மக்கள் கொண்டாடினர். அவ்விழாவில் பேசிய ஷேக் அப்துல்லா, ''பாக்கித்தான் அல்லது இந்தியா என இரண்டில் ஒரு கூடுதல் இணைப்பு நாடாக ஜம்மு-காஷ்மீர் நாடு இருக்க வேண்டிய கட்டாயம் எங்களுக்கு இல்லை'' என்றே பேசினார்.

மேலும் ஷேக் அப்துல்லாவின் நிலச்சீர்திருத்தங்களுக்கு ஆரம்பத்தில் இருந்த ஆதரவு இப்போது இல்லை. ஏன்?

அதிகாரத்தில் இருந்தவர்களும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் தங்களின் பெயர், பதவி போன்றவற்றைப் பயன்படுத்தி, சட்டத்தை வளைத்து, பெரும் பரப்பு நிலங்களை அவர்கள் கைப்பற்றிக் கொண் டார்கள். எல்லா மட்டங்களிலும் ஊழலும் கைக்கூலியும் ஊடுருவின நிருவாகக் கோளாறு தலைவிரித்து ஆடியது.

மறுபுறம் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்குள்ளேயே இருந்த ஷேக் அப்துல்லாவின் அரசியல் எதிரிகள் - குறிப்பாக இந்து அரசியல் வாதிகள், ''ஷேக் அப்துல்லா, ஒரு கட்சி ஆட்சியை நடத்துகிறார். மன்னரை வெளியேறச் சொல்லிப் போராட்டம் நடத்திய காலத்தில், சனநாயக ஆட்சியைக் கொண்டு வருவோம் என்ற அவர், இப் போது எதிர் கருத்துகளுக்கும் மற்றக் கட்சிகளுக்கும் இடந் தராமல், சனநாயகம் என்பதையே சிரிப்புக்கு இடமாக்கி விட்டார்'' என்று குற்றஞ்சாட்டினர்.

4. இதற்கிடையில், ஷியாம் பிரசாத் முகர்ஜியின் சாவுக்குப் பின்னர், ஷேக் அப்துல்லாவுக்கு எதிராக நடந்த போராட்டங்களும் அவருக்குக் கேடு சூழும் நிலையை உண்டாக்கின.

**இவற்றின் காரணமாக, ஷேக் அப்துல்லா மீது தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, அவருடைய அரசு கலைக்கப்பட்டு, பிரதமர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். தொடக்கத்தில் மிகுந்த மரியாதை யுடன் அவரிடம் நடந்துகொண்ட இந்திய அரசு, இப்போது அவர் பேரில் நடவடிக்கை எடுக்கவும் கைது செய்யவும் அஞ்சவில்லை.**

**1953 ஆகத்து 8 அன்று ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டார்.**

கைது செய்வதில் நேரு நெருக்கம் காட்டவில்லை.

மாறாக, அன்று ஜம்மு-காஷ்மீரின் குடிஅரசுத் தலை வராக இருந்த கரண் சிங்கே, அப்துல்லாவைக் கைது செய்யும் பணியை நிறைவேற்றினார்.

ஷேக் அப்துல்லாவின் நெருங்கிய சகாவாக இருந்த பக்ஷி குலாம் முகமது, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் பிரதமராக 9.8.1953 அன்று அமர்த்தப்பட்டார்.

ஷேக் அப்துல்லா கைது பற்றி காஷ்மீர் பள்ளத்தாக்கு மக்களிடம் நிலவிய கருத்து வேறு.

தொடக்கத்தில் ஷேக் அப்துல்லாவின் கோரிக்கையை ஏற்று எல்லா அனுமதிகளையும் தந்துவிட்டாலும், அதன் பின்னர் மற்ற தரப்பினரும், எதிர்க்கட்சிகளும் எழுப்பும் கேள்விகளுக்கு விடை சொல்ல முடியாத நிலை, பிரதமர் நேருவுக்கு. சில சலுகைகளைத் திரும்பப் பெற வேண் டிய நிலையும் நேருவுக்கு ஏற்பட்டது. ஷேக் அப்துல்லா சிறை வைக்கப்பட்டதால், மற்ற அரசியல் தலைவர் களை அச்சுறுத்தி அடக்கி வைப்பதையும் நேருவினால் செய்ய முடியும்.

**இந்த இரண்டு நிலைமைகளையும் பயன்படுத்தி இந்திய அரசமைப்புச் சட்டத்திலும், ஜம்மு-காஷ் மீர் அரசமைப்புச் சட்டத்திலும் தாங்கள் செய்ய எண்ணிய மாற்றங்களைச் செய்து கொள்ள ஏற்ற சூழ்நிலையை இந்திய அரசினர் உண்டாக்கிக் கொண் டார்கள் என்று வெளிப்படையாகக் காஷ்மீர் பள்ளத் தாக்கு மக்கள் கூறினர்.**

இதுவே உண்மை.

**இனி ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம் பற்றி விரிவாகக் காண்போம்!**

**(தொடரும்)**

# கூட்டாட்சியியலுக்குக் குழி பறிக்கும் மருத்துவ நுழைவுத் தேர்வு

- குட்டுவன்

இந்திய அரசமைப்புச் சட்டம் அரைக்கூட்டாட்சி சட்டமாகத்தான் உருவானது. இந்த அரைக் கூட்டாட்சி முறைமையையும் கருவிலேயே சிதைக்கும் செயல்கள் கடந்த 66 ஆண்டுக்காலமாக அரங்கேறி வருகின்றன. 1950ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தில் கல்வி, பொதுச் சுகாதாரம், வேளாண்மை போன்ற மக்களுடன் நேரடியான தொடர்புடைய பல அதிகாரங்கள் மாநிலப் பட்டியலில் இணைக்கப்பட்டன. கல்வியும், பொதுச் சுகாதாரமும் மாநிலப் பட்டியலில் இடம் பெற்றதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் பல அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. இட ஒதுக்கீடு கொள் கையும் பின்பற்றப்பட்ட காரணத்தினால் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் அனைத்துப் பிரிவினரும் மருத்துவர் களாக உயர்ந்தனர். இன்றைக்கும் மருத்துவ வல்லுநர்களாகத் தமிழகத்திலும் இந்தியாவிலும் வலம் வருபவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினரே என்பது குறிப்பிடத்தக்கது.

இடஒதுக்கீடு கொள்கை நீதிக்கட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு 1927லிருந்து கல்வி, வேலை வாய்ப்புகளில் வழங்கப்பட்டு வந்ததன் காரணமாகத் தமிழ்நாடு மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் முதன் மூன்று இடங்களில் 1980 முதல் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. மருத்துவத் துறையில் பல அரிய சாதனைகளைத் தமிழ்நாடு படைத்துள்ளது. தொடக்க சுகாதார மையங்கள் அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையாக இருந்து வருகிறது. தாய்மையடைந்தவர்கள் மகப்பேறுக்காக அரசு மருத்துவமனைகளில் தான் சேர்ந்து வெற்றிகரமாகச் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்று அகில இந்திய அளவில் பல வல்லுநர் குழுக்கள் குறிப்பிட்டுள்ளன. 98 விழுக்காடு குழந்தை பெறுவது அரசு மருத்துவமனை களில்தான் என்பதையும் இக்குழுக்கள் சுட்டி வருகின்றன. ஊட்டச்சத்து அளித்து குழந்தைகளுக்குச் சத்துணவைப் பள்ளிகளில் வழங்கி குறைபாடுகள் இல்லாமல் குழந்தைகள் தமிழ்நாட்டில்தான் வளர்ந்து வருகிறார்கள் என்பதை அமர்த்தியா சென் குறிப்பிட்டுள்ளார். மேலும் வளர்ந்த ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாகவும் அதற்கு மேலாகவும் மருத்துவ வசதிகள் மக்களுக்குத் தமிழ்நாட்டில்தான் வழங்கப்படுகின்றன என்பதையும் சுட்டியுள்ளார். குஜராத் மாநில முதல்வராக பிரதமர் மோடி மூன்று முறை பதவி வகித்த போதும் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி முறையாக வழங்காத காரணத்தினால் அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் அம்மாநிலத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆங்கில வார ஏட்டிற்கு அண்மையில் அளித்த பேட்டியில், சென் குறிப்பிட் டுள்ளார். தமிழ்நாடு தடுப்பு ஊசி வழங்குவதில் ஏறக்குறைய 100 விழுக்காடு வெற்றியடைந்துள்ளது. குழந்தைகளுக்கு வரும் போலியோ என்கிற இளம் பிள்ளைவாத நோயை தமிழ்நாடு முற்றிலும் ஒழித்து விட்டதாக இந்திய அரசு அறிக்கையில் ஒப்புக்கொள் ளப்பட்டுள்ளது.

இதற்கு முதன்மையான காரணம் தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரிகள் அதிக எண்ணிக்கையில் இருப்பதே ஆகும். 2007 ஆண்டிற்குப் பிறகு மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வைக் கலைஞர் ஆட்சியில் நீக்கிய பிறகு ஊர்ப்புறங்களில் படிக்கும் ஏழை எளிய



மாணவர்கள் 30 விழுக்காட்டிற்கு மேல் இடம் பெற்று வருகின்றனர் என்பது சமூக நீதிக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டின் வழியாகச் சமூக நீதி வெற்றி பெறுவதைத் தடுப்பதற்கும் கடந்த 66 ஆண்டுகளாக பல சதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சமத்துவ நெறிக்கு இட ஒதுக்கீடு முறை எதிராக அமைந்துள்ளது என்று கூறி, 1950ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் இடம் பெறாத இரு பார்ப்பன மாணவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தனர். 'சண்பகம் துரைராசன் வழக்கு என்று இதனைக் குறிப்பிடுவார்கள். உயர் நீதிமன்றம் இடஒதுக்கீட்டைக் கடைபிடிக்கக் கூடாது என்று உத்தரவிட்டது. அன்றைய காங்கிரசு அரசு உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.ஆர்.தாஸ் என்பவர் மத, இன மற்றும் சாதி (Religion, Race, Caste) அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வது இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள பிரிவு 29(2)இல் தடை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு, வகுப்புவாரி அரசு ஆணை செல்லாது என்ற தீர்ப்பினை அறிவித்தார்.

தமிழர்களின் உரிமைப் பட்டயமான இந்த ஆணை செல்லாது என்று அறிவிக்கப்பட்டதால், திராவிடர் இயக்கப் பெருந்தலைவர் பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் போராட்டக் களத்தில் இறங்கினர். காங்கிரசுத் தலைவர் காமராசரும் திராவிட இயக்கத் தலைவர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தார். முதலில் மறுப்பு தெரிவித்த பிரதமர் நேரு இந்திய அரசியல் சட்டத்தில் 1951ம் ஆண்டு முதலாவது திருத்தத்தைக் கொண்டு வந்தார். சமூகத்திலும் கல்வியிலும் பார்ப்பனரல்லதார்க்கு நீதிக் கட்சி வழங்கிய உரிமையும்; காங்கிரசு ஆட்சி முதன் முதலாக பிற்படுத்தப்பட்டோர்க்கு 1947இல் வழங்கிய இடஒதுக்கீடும் தமிழ்நாட்டில் நிலை நிறுத்தப்பட்டன. போராடிப் பெற்ற இந்த அரசியல் சட்டத்திருத்தத்தின் வழிதான் மருத்துவக் கல்லூரிகளில் 69 விழுக்காட்டு இடஒதுக்கீட்டை மாணவர்கள் பெற்று சாதனை படைத்து வருகின்றனர். இடஒதுக்கீடு கொள்கை தகுதியைத் தகர்த்து வருகிறது என்று குறை கூறுபவர்கள் மருத்துவப் படிப்பிற்கான தகுதிகாண் தேர்வு மதிப்பெண்களைத் திட்டமிட்டே மறைத்து வருகின்றனர்.

மருத்துவச் சேர்க்கைக்கான பொதுப்பட்டியலில் (Open Competition) 200-199 மதிப்பெண் பெறுகின்றனர். பிற்படுத்தப்பட்டோர் 199-198; மிகப்பிற்படுத்தப்பட்டோர் 198-197; தாழ்த்தப்பட்டோர் 196-194; பழங்குடியினர்; 190-188; மதிப்பெண்கள் என உச்ச மதிப்பெண்கள் பெற்றுத்தான் மருத்துவக் கல்லூரிகளில் இடம் பெற்று வருகின்றனர். தமிழ்நாட்டில் அரசியல் குறுக்கீடுகள் ஊழல் இல்லாமல் வெளிப்படையாக நடைபெற்று வருவது இந்த மருத்துவச் சேர்க்கைத்தான் என்பதை அனைவரும் அறிவர். படிப்படியாக ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் மருத்துவத்துறையில் உயர்ந்து வரும் நிலையைச் சிதைக்க முற்படுவது இந்திய ஒருமைப்பாட்டையே குலைக்கும் செயலாகும். பிற்படுத்தப்பட்டோர்; மிகப் பிற்படுத்தப்பட்டோர்; தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின மாணவர்கள் மீது பாராங்கல்லைத் தூக்கித் தலையில் போடுவதற்கு ஒப்பானதாகும்.

நடுவண்அரசு நடத்தி வரும் மருத்துவத்திற்கான நுழைவுத் தேர்வு முழுக்க முழுக்க மாநிலங்களின் உரிமைகளையும் ஏழை எளிய மக்களின் கல்வி உரிமைகளையும் பறிக்கின்ற மிக பயங்கரமான பாதகச் செயலாகும். இந்த மருத்துவ நுழைவுத் தேர்வில் புதுதில்லியில் உள்ள (AIIMS) அகில இந்திய மருத்துவக் கழகப் பட்டப்படிப்பு முதுநிலைப் பட்டப்படிப்பு, சண்டிகாரில் உள்ள நடுவண் அரசின் மருத்துவக் கல்லூரியின் முதுநிலைப் பட்டப்படிப்பு, பாண்டிச்சேரியில் உள்ள ஜவகர் லால் நேரு மருத்துவக் கல்லூரி நடத்தும் பட்டப்படிப்பு முதுநிலை பட்டப்படிப்பு ஆகியவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மாநில அரசுகள் நடத்தும் மருத்துவக் கல்லூரிகளுக்கு நுழைவுத் தேர்வு தேவையென்றால், இத்தேர்விலும் நடுவண் அரசின் ஆணவப் போக்கும் மாநில அரசுகளைக் கீழ் நிலைகளில் நடத்தும் சர்வாதிகாரப் போக்கும் இணைந்துள்ளன என்பதே உண்மை. புது தில்லியில் ஆட்சி செய்யும் கெஜ்ரிவால் போன்றவர்கள்கூட தில்லி மாநிலத்திற்கு உரிமையைக் கோரி மாநிலத்திற்கான சட்டவரைவினை வெளியிடுகிறார்கள். ஆனால் புது தில்லியில் உள்ள நடுவண் அரசின் மருத்துவக் கல்லூரிக்கு ஏன் நுழைவுத் தேர்வு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று அவர் கேட்கவில்லை. இதற்கு காரணம் கெஜ்ரிவாலும் ஆதிக்கச் சக்திகளின் கைக்கூலியாகச் செயல்பட்டு இடஒதுக்கீடு கொள்கையை எதிர்ப்பதே ஆகும்.

உச்ச நீதிமன்றம் 1996ஆம் ஆண்டு ஒரு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 24.8.2001 அன்று அளித்த தனது தீர்ப்பில்- அகில இந்திய மருத்துவக் கழகம் (AIIMS) முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான தேர்வில் நடத்திய தில்லுமுல்லுகளைச் சுட்டிக் காட்டியுள்ளது. அதன்படி தில்லி உயர் வகுப்புப் பிரிவினைச் சார்ந்த உயர் அலுவலர்கள் தங்கள் பிள்ளைகளுக்கே அனைத்து இடங்களையும் ஒதுக்கிக் கொண்டார்கள். அந்தக் கல்வி நிறுவனத்தில் உயர் மருத்துவப் பட்டப்படிப்பில் 33 விழுக்காட்டு இடங்களை

யும் தங்களுக்கே ஒதுக்கிக் கொண்டார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. அகில இந்திய மருத்துவக் கழகம் 1956இல் குறிப்பிட்டுள்ள (AIIMS Act, 1956) உயர் குறிக்கோள்களுக்கு மாறாக, தகுதி திறமைகளை முழு மையாகப் புறக்கணித்தும் தொடர்ந்து பல ஆண்டுகள் இந்த உயர் பட்டப் படிப்புகளை உயர் வகுப்பினர் பெற்ற தையும் இந்தத் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது. அதன்படி 33 விழுக்காட்டு அளவிற்கு AIIMSஇல், AIIMS படித்த மாணவர்களுக்கே ஒதுக்கிக் கொண்டு, மொத்தமுள்ள 120 இடங்களில் 40 இடங்களை AIIMS மாணவர்கள் பெற்றார்கள். அதாவது நுழைவுத் தேர்வு எழுதிய AIIMS மாணவர்கள் 40 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த உயர்வகுப்பு மாணவர்கள் நுழைவுத் தேர்வில் தாழ்த் தப்பட்ட மாணவர்களைவிடக் குறைந்த மதிப்பெண் களைப் பெற்றாலும் தனி ஒதுக்கீட்டில் இவர்கள் 100 விழுக்காடு அளவில் இடம் பெற்றனர். இவர்களைவிட நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற தாழ்த் தப்பட்ட மாணவர்கள் உயர் மருத்துவப் படிப்பில் சேர இடம் தரப்படவில்லை என்பதைப் பல புள்ளி விவரங் களோடு தனது தீர்ப்பில் உச்சநீதி மன்றம் சுட்டிக்காட்டி யுள்ளது (Supreme Court of India, Civil Appellate Jurisdiction, Civil Appeal No.736 of 1996). தகுதி திறமை என்ற பெயரில் எப்படியெல்லாம் தில்லுமுல்லுகளை 1978ஆம் ஆண்டு முதல் செய்து பல நூற்றுக்கணக்கான உயர் பட்டப் படிப்புகளைப் பெற்றுள்ளார்கள் என்பதையும் இத்தீர்ப்பின் மூலம் உணர முடிகிறது.

சமூக நீதிக் கொள்கையில் முழு நம்பிக்கையை வைத்திருக்கும் பாமகவின் மருத்துவர் அன்புமணி ராமதாசு 2009இல் நடுவண் அரசில் பொதுச் சுகா தாரத்துறை அமைச்சராகப் பணியாற்றிய போது, அகில இந்திய மருத்துவக் கழகத்தின் (AIIMS) 2009 ஆண்டிற்கான நுழைவுத் தேர்விற்காக வெளியிடப்பட்ட விளம்பரத்தில் இடஒதுக்கீடு கொள்கை முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டது. இந்த விளம்பரத்தைக் கண்ணுற்ற இக்கட்டுரையாசிரியர் "முரசொலி" நாளிதழில் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு இடையூறா? என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதினார். இதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற மருத்துவர் அன்புமணி விளம்பரத்தைத் திரும்பப் பெற்று மீண்டும் இடஒதுக்கீட்டுடன் கூடிய விளம்பரத்தை வெளியிடச் செய்தார். 2005இல் இதே துறையில் நடுவண் அரசு நடத்திய மருத்துவ நுழைவுத் தேர்விற்கான கேள்வித்தாள்கள் திட்டமிட்டே சிலரின் நன்மைக்காகச் சிலரால் வெளியிடப்பட்டன என்பதை மருத்துவர் நா.எழிலன் நடுவண் அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாசிடம் ஆதாரங்களை அளித்து சிபிஐ விசாரணை வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த வழக்கில் ஆந்திர மாநிலத்தின் மூத்த மருத்துவப் பேராசிரியர் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டனர். இதே போன்று 1999இல் வாஜ்பாய் பிரதமராக இருந்த போது சுஷ்மா சுவராஜ் அமைச்சராகவும், திமுகவைச் சார்ந்த ஆ.ராசா இணை அமைச்சராகவும் இருந்தபோது பீகார் மாநிலத்தில் நடுவண் அரசு நடத்திய மருத்துவ நுழைவுத் தேர்வின் கேள்வித்தாள்கள் தேர்வுக்கு முன்பாகவே வசதி படைத்த மாணவர்களுக்குக் கிடைத்தன. அப்போதும் சிபிஐ விசாரணை நடைபெற்று மீண்டும் பீகார் மாநிலத்திற்கு மட்டும் மறுதேர்வு நடைபெற்றது.

**இது போன்று அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே அமைப்பு, பொது நுழைவுத் தேர்வை நடத்தும் அதிகாரக் குவிப்பால் பல மோசடிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தமிழ்நாட்டில் நுழைவுத் தேர்வு நடந்த போதும் 2007க்குப் பிறகு நுழைவுத் தேர்வுகள் இல்லாமல் 12ஆம் வகுப்பு மதிப் பெண்கள் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றபோதும் ஒரு சிறிய தவறு கூட நடைபெறவில்லை என்பதுதான் உண்மையாகும். இதற்கு முதன்மைக் காரணமாக அமைவது தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் தங்கள் மதிப்பெண்களைத் தமிழ்நாட்டு அரசால் வெளியி டப்படும் சேர்க்கைப் பட்டியலோடு ஒப்பிட்டு, மாநில அரசிடமிருந்து தீர்வினைக் காண முடியும். ஏற்கெனவே தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்து வக் கல்லூரிகளில் நடுவண்அரசு 15 விழுக்காடு அளவில் இடங்களைப் பெற்று, தாங்கள் நடத்தும் தேர்வின் வழியாக அகில இந்திய அளவில் மாணவர்களை இடம் பெறச் செய்கிறது. இத் தகைய அகில இந்திய ஒதுக்கீட்டை ஒருங்கிணைந்த ஆந்திர மாநில அரசும் மகாராட்டிர அரசும் ஏற்றுக்கொள்ளாமல் தங்கள் மாநில மாணவர் களையே மருத்துவப் படிப்பில் சேர்க்கின்றன.**

**நடுவண் அரசின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் அகில இந்திய மருத்துவ வாரியம் (All India Medical Council) மாநில அரசுகள் நடத்தும் கல்லூரிகளுக்கும் தனியார் நடத்தும் கல்லூரி களுக்கும் அங்கீகாரம் செய்வதற்கு உரிமையைப் பெற்றுள்ளது. மாநில அரசு நடத்தும் கல்லூரி களுக்குக் கடுமையான விதிமுறைகளைப் பின் பற்றிப் புது மருத்துவக் கல்லூரிகளைத் தொடங் குகிற போது பல விதிகளைக் காட்டி அனுமதியை மறுக்கும் அல்லது தள்ளிப்போடும் அணுகு முறையைப் பின்பற்றி வருகிறது. ஆனால் தனியார் கல்லூரிகளுக்குப் பணத்தைப் பெற்றுக் கொண்டு**

**இந்த வாரியம் அனுமதியை அளித்து வருகிறது. இவ்வாரியத்தின் தலைவராக இருந்த கேத்தன் தேசாய் வீட்டில் 1500 கோடி ரூபாய் பணமும் ஒன்றரை டன் தங்கமும் பிடிபட்டது. இன்றுவரை அவர் சிறைக்குச் செல்லாமல் உலக அளவில் உள்ள மருத்துவக் குழுவில் போட்டியிடுவதற்கு முயன்று வருகிறார் என்பதை ஊடகங்கள் வெளிப்படுத்தி வருகின்றன. இப்படிப்பட்ட கொடுஞ் செயல்களைக் கடும் தண்டனை வழியாகத் தடுக்காமல், வெளிப்படையான, கேவலமான ஊழலை உயர்த்தி பிடிக்கும் நடுவண் அரசு, மாநில அரசுகளின் உரிமைகளில் தலையிடுவது வெட்கம் கெட்டச் செயலாகும். மேலும் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் நடுவண் அரசின் நுழைவுத் தேர்வின் வழியாக மாணவர்களைச் சேர்க்க முற்பட்டால் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் 46 விழுக்காட்டு அளவு இடங்களை விட்டுக் கொடுக்க நேரிடும் என்று குறிப்பிடப்படுகிறது.**

ஏழை எளியோர் நோயினால் பாதிக்கப்பட்டு இறப்பதும் நோய்களின் சுமையோடும் பொருளாதார நலிவோடும் வாழ்வதையும் சுட்டிக்காட்டி இந்திய மக்களின் நல வாழ்விற்காகப் புதிய பொதுச் சுகாதாரக் கொள்கையை நடுவண் அரசு வெளியிட வேண்டும் என்று பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கே.எஸ். ஜேக்கப் என்ற ஆய்வாளர் (மார்ச் 19-2016EPW) இதழில் இந்தியாவில் மருத்துவக் கல்வி அரசியல் என்ற கட்டுரையைத் தீட்டியுள்ளார். இக்கட்டுரையில் இந்தியா வினுடைய மருத்துவக் கல்வி முறை திறமையையும் தேவையானவர்களுக்குத் தேவையான மருத்துவ சேவையை வழங்குவதில் முழுஅளவில் தோற்றுவிட்டது என்று குறிப்பிட்டுள்ளார். தரமான ஆசிரியர்கள், தரமான கற்றல் முறை, ஆய்வை ஊக்குவித்தல் மாநில அளவில் உள்ள உண்மைகளை அறிந்து கொள்ளாமல் இருத்தல் போன்ற காரணங்களையும் சுட்டியுள்ளார். அகில இந்திய மருத்துவ வாரியம் (All India Medical Council) ஊழல் காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டு தற்காலிக அமைப் பாக இயங்குவதும் தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஊக்குவிக்கும் போக்கும் கண்டனத்திற்குரியது என்றும் குறிப்பிட்டுள்ளார். புரையோடிப்போன அரசியல் ஊழ லோடு மருத்துவ ஊழலும் இணைந்து மருத்துவக் கல்வியைத் தரைமட்டமாக ஆக்கிவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். மோடி அரசால் 2015இல் வெளியிடப் பட்ட புது மருத்துவக் கொள்கை புதிதாக முற்போக்கான அணுகுமுறைகளை அளிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தியா, பொது மருத்துவத் துறைக்காக மொத்த நாட்டு உற்பத்தியில் 3 விழுக்காட்டு அளவிற்குக்கூட பொதுச்செலவினை மேற்கொள்ளாத நிலையில் திறன்படச் செயல்படும் மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளையும் மருத்துவ அமைப்பு முறைகளையும் இந்தத் தேசிய நுழைவுத் தேர்வுமுறை சிதைத்துவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் சிறந்த நெறி என்று இந்தியாவின் முதலாவது பிரதமர் நேரு குறிப்பிட்டார். நடைமுறையில் வேற்றுமை என்பது பல மொழிகள் பல இனங்கள் பல பண்பாட்டு முறைகள் பல மருத்துவ முறைகள் என் பதைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சான்றாக தமிழ் சித்த மருத்துவம் தமிழ்நாட்டில் அரசின் சார்பில் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது. ஆங்கில மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கை முறைபோன்றே சித்த மருத்துவக் கல்லூரிகளுக்கும் மேனிலைப் பள்ளி மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தாம்பரத்தில் பல நூறு கோடி ரூபாய் மதிப்பில் தேசிய சித்த மருத்துவக் கல்லூரியும் செயல்படுகிறது. தமிழ்நாட்டில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார மையங்களில் சித்த மருத்துவ முறையைப் பின்பற்றி நோய்களுக்கான மருந்துகளும் வழங்கப்படுகின்றன. மறைந்த மருத்துவ மேதை தெய்வநாயகம் ஆங்கில மருத்துவமுறையில் சிறந்த வல்லுநராக இருந்த போதும், சித்த மருத்துவ முறையைப் போற்றினார். சித்த மருத்துவத்தின் வழியாகக் கொடிய உயிர்க் கொல்லி நோயான எய்ட்சு நோயைக் கட்டுப்படுத்துவதில் பல சிகிச்சை முறைகளைப் பின்பற்றி வெற்றி காணப்பட்டது. கொடிய காய்ச்சல்களான சிக்குன்குனியா, பன்றிக்காய்ச்சல், டெங்கு நோய்களுக்கு நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச் சாறு போன்ற சித்த மருத்துவ முறைகள் பின்பற்றப்பட்டுத் தமிழ்நாடு வெற்றியும் கண்டு வருகிறது. ஆங்கில மருத்துவ உற்பத்திக் குழுமங்கள் நிலவேம்பு மாத்திரைகளையும் பப்பாளி இலைச் சாற்றினையும் உற்பத்தி செய்து பல கோடி இலாபத்தை ஈட்டியுள்ளன. எதிர்காலத்தில் ஆங்கில-சித்த மருத்துவ முறைகளை உயர் ஆய்வின் வழியாக இணைத்து ஆங்கில மருத்துவப் பட்டப்படிப்பில் ஒரு பாடத்திட்டமாக இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைப் பல மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்து வருகின்றனர். இதற்குத் தமிழ் மொழியை அறிந் திருப்பதும் கற்றிருப்பதும் அவசியமாகிறது. இவ்வாறு பன்முகத் தன்மையை உள்ளடக்கிய மருத்துவக் கல்வி முறையை அகில இந்தியஅளவில் தேர்வு நடத்தி, மருத்துவ அறிவைச் சிதைக்கும் செயல் இந்திய ஒற்று மையைக் குலைக்கும் ஒரு பயங்கரவாதச் செயல் என்றே இதைக் குறிப்பிடலாம்.

**கட்டுரைத் தொடர்-40**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

**சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் பெரியார் ஈ.வெ.ரா.வின் முழக்கம்**

13.11.1938ஆம் நாள் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ரா. ஆற்றிய உரை வருமாறு :

‘‘தலைவர் அவர்களே! தாய்மார்களே!

இத்தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில், உங்கள் முன்னால் பேச சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி உண்மையிலேயே பெரு மகிழ்ச்சியடைகிறேன். சமுத்திரம் போல் பெண்கள் கூடியுள்ள இந்தக் கூட்டத்தைப் பார்க்க என் மனமே ஒருவித நிலை கொள்ளா மகிழ்ச்சியடைகிறது.

இவ்வளவு பெரிய ஒரு பெண்கள் கூட்டம் சென்னையில் வரும் என நான் நினைக்கவில்லை. சென்னையைப் பற்றி நான் சில சமயங்களில் பரிகாசமாய் நினைப்பதுண்டு. என்னவென்றால் சென்னை மூடநம்பிக்கைக்கு இருப்பிடமானது என்று நான் சொல்லுவதுண்டு. இதை நான் அடிக்கடி பத்திரிகை யிலும் எழுதி வந்திருக்கிறேன். சென்னையிலுள்ள எனது சில தோழர்களுக்கு நீங்கள் மூடநம்பிக்கையை விடுங்கள், பகுத்தறிவுடன் வாழுங்கள் என்று கூறுகின்ற காலத்தில், அவர்கள் ‘நீங்கள் சொல்வதெல்லாம் சரி என்றும், அவற்றை அப்படியே ஒப்புக்கொள்வதாகவும், ஆனால் தங்கள் வீட்டில் உள்ள பெண்கள் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்களே என்றும், உங்களை இழித்துக் கூறி உங்கள் மீது பழியைப் போட்டதை நான் பல தடவை கேட்டிருக்கிறேன்.’ அதனால்தான் வெளி ஜில்லாக்களைப்போல் சென்னையில் பகுத்தறிவியக்கக் கொள்கைகள் அவ்வளவு அதிகமாக இல்லையோ என்றும் கருதுவதுண்டு, ஆனால் இன்று இப்பெண்கள் மாநாட்டையும், இன்றுள்ள உணர்ச்சியையும் ஊக்கத்தையும், இங்கு நடந்த உபந்யாசங்களையும் தீர்மானங்களையும் பார்க்கும்போது, எனக்கு ஒரு புதிய எண்ணம் தோன்றுகிறது. அதாவது சென்னை பெண்மக்கள் ஆண்களைவிட எந்த வகையிலும் பின்னடைந்தவர்களல்ல என்பதைக் காட்டுகிறது.

இங்கு நான் அநேக வயது சென்ற பெண்களைக் காண் கின்றேன். அவர்களது ஊக்கம் எனக்குப் பெரியதொரு வெளிச்சத்தையும் தைரியத்தையும் கொடுக்கிறது. சென்னை தாய்மார்களுக்கு இப்படிப்பட்ட உணர்ச்சி ஏற்பட்டதற்கு முக்கிய ஆதாரம் எனது பழம்பெரும் தோழராகிய கனம் ஆச்சாரியாருடைய பெருங்கருணையே ஆகும். இதற்காக அவருக்கு நான் உள்ளம் நிறைந்த நன்றி செலுத்துகிறேன். பின்னும் இக்கிளர்ச்சியும் உணர்ச்சியும் மேலும் மேலும் வளர வேண்டுமானால் இன்றைய அடக்குமுறை ஆட்சியை இதுபோலவே குறைந்தது இன்னும் ஒரு வருடத்திற்காவது நடத்தி உதவ வேண்டுமென்று



எனது அருமைத் தோழர் ஆச்சாரியாரை மற்றுமொருமுறை வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உண்மையில் இன்றைய தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாட்டில் பெண் கள் பிரதிநிதித்துவம் வழிந்தோடுகின்றது. அநேக பிரபல பெண்கள் கூடியிருக்கிறீர்கள். பல அருமையான தீர்மானங்களையும் செய்தீர்கள்.

ஆனால் நான்கு நாட்களுக்கு முன்பு உலகந்தெரியாத சில பெண்கள் கூடிக்கொண்டு இந்திய மாதர் சங்கம் என்னும் பேரால் ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டு இந்நாட்டு மக்களபிப்பிராயத்துக்குத் நேர் மாறாக இந்தியை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றனர் என்பதாகத் தெரிகிறது. இதற்கு நமது எதிரிகள் பத்திரிகைகள் பிரமாதமாகப் பெருக்கி விளம்பரப்படுத்தியிருக்கின்றன. அது எதற்காகச் செய்யப்பட்டது என்றால், இம்மாநாடு கூடப் போவது தெரிந்து இம்மாநாட்டுத் தீர்மானங்களை அசட்டை செய்யச் செய்வதற்காகவும், இங்கு செய்யப்படும் தீர்மானங்கள் சரியான பிரதிநிதித்துவம் பெற்றதல்லவென்று கருதும்படி செய் வதற்காகவும், நமது சுயமரியாதைக்குக் கேடு சூழவும் கூட்டப்பட்ட ஒரு சூழ்ச்சி மாநாடு ஆகும். நம்மிடையில் (தமிழர்களிடத்து) ஒற்றுமை இல்லாததால் அவர்கள் யாரோ அகவிலை அறியாத இரண்டு பெண்களைக்கொண்டு நம்மைக் கேலி செய்யவும், தாழ்வாக நினைக்கவும் இடம் உண்டாக்கப் பார்க்கிறார்கள்.

வடமொழிச் சார்புடையது - ஆரியக் கலைகளுக்காக இருக்கிறது என்றும் அவர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட இந்தி என்கின்ற ஒரு மொழியை நம் குழந்தைகளுக்குப் புகட்டி நம்மக்கள் தம் மானத்தை மாசுபடுத்தும் ஒரு சூழ்ச்சியை எதிர்ப்பதற்காக நாம் இங்கு கூடினோம். நம்மில் பல கருத்துக்காரர்களிருக்கலாம். சைவ வைணவ மதக்காரர்களிருக் கலாம், முஸ்லிம், கிறித்துவர்கள் இருக்கலாம், மேல்சாதி, கீழ்

சாதிக்காரர்கள் என்பவர்களிருக்கலாம், எந்த மதத் தையும், சாதியையும் நம்பாதவர்களுமிருக்கலாம்.

எனவே நம்மில் ஒருவருக்கும் தீங்கு வராத நிலையில் ஒரு குறிப்பிட்ட கொள்கைக்காக நாம் ஒன்றுசேர்ந்து பாடுபட வேண்டுவது இன்றியமையாத தாகும். நம் தாய்மொழி மீதுள்ள பற்று காரணமாகவே நம் மானத்துக்கு ஏற்றவைகள், உணர்ச்சிகள் காரண மாகவே நாம் இன்று ஒன்றுகூடியுள்ளோம். உண்மை யிலேயே ஒருவனுக்கு நாட்டுப்பற்று உண்டானால் - மொழிப்பற்று உண்மையில் ஏற்படுமானால் அதனை கனம் ஆச்சாரியார் அடக்க நினைப்பாரானால் அது ஒரு நாளும் முடியாத காரியமாகும். அதற்கு மாறாக பற்றும், உணர்ச்சியும் வளரத்தான் செய்யும். மேலும் அவர் கடினமான அடக்குமுறைகளைக் கையாளுவாரானால் அதனால் தமிழர்கள் மனங்கொதிப்படையுமானால் அது எங்குபோய் நிற்கும் என்பதைச் சொல்வதற்கில்லை. அது தமிழர்களிடத்திலும் ஏன் ஹிட்லருணர்ச்சியை உண்டாக்காது எனக் கேட்கிறேன். எதற்காக இந்த அடக்குமுறை?

இன்று 400 பேர் சிறை சென்றதைப் பாராட்டி நீங்கள் தீர்மானம் நிறைவேற்றிய போது உண்மை யிலேயே எனக்குப் பரிகாசமாயிருந்தது. ஆண்கள் சிறை செல்வதில் அதிசயம் ஒன்றும் இல்லையே! ஆண்கள் சென்றதைப்பற்றி நீங்கள் பாராட்டிவிட்டால் நீங்கள் வீரப்பெண்மணிகள் என்று அர்த்தமா? நீங்கள் 400 பேர் சிறை சென்று அதை ஆண்கள் அல்லவா பாராட்ட வேண்டும்? நீங்கள் ஏன் செல்லக்கூடாது? இது கனம் ஆச்சாரியார் கோவில் பிரவேச விஷயத்தில் திருவிதாங்கூர் ராஜாவைப் பாராட்டி விட்டு தோழர் எம்.சி. ராஜாவை ஏமாற்றிவிட்டது போலல்லவா இருக் கிறது (சிரிப்பு). இன்று ஒரு அம்மையார் என்னிடம் வந்து தான் சிறைக்குப் போகத் தயார் என்றார். அந்தப் பேச்சு எனக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

ஆனால் அது நாளைக்குத் தெரியப் போகிறது. அக்காலம் அதாவது, தமிழ்ப் பெண்களை சிறைசெல் லும் காலம் வந்தால்தான் நமக்கு நன்மையுண்டாகும். மாநாட்டுத் திறப்பாளர் முற்காலப் பெண்களின் வீரத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசினார். நான்கூட அப்போது அக்காலத்தில் ஒரு பெண்ணாய்ப் பிறந்திருந் தோமா என்று கூட நினைத்தேன், அவ்வளவு பெருமை யாய்ப் பேசினார். ஆனால் பழம் பெருமைப் பேசிப் பயனென்ன? இது பார்ப்பனர் பேசுவதுபோல்தானே இருக்கிறது. இன்றைய பெண்களைப் பற்றியும் அவர்கள் கடமையைப் பற்றியும் பேசினால்தான் நீங்கள் உரிமை பெறலாம்-நன்மை அடையலாம். பெரியவர்கள் தேடி வைத்த சொத்தைக் கொண்டு எவ்வளவு நாளைக்குப் பிழைக்கலாம்? நமது வாழ்வுக்கும் வகைக்கும், இன்னல்கலெல்லாம்-பெண்கள் முன்னேற்றத்திற்கும் வீரத்திற்கும்-இம்மாநாடு ஒரு வழி காட்டிவிட்டது.

பார்ப்பனர்கள் ஊர் பெயர் தெரியாத பெண்களைப் பிடித்துத் தங்களைப் பற்றியே தங்களுக்கு தெரியாத பெண்களைப் பிடித்தும் படம்போட்டு விளம்பரப்படுத்தி பட்டம் பதவி வாங்கிக்கொடுக்கின்றனர். உண்மையாக எத்தகைய கஷ்டங்களையும் அனுபவிக்கத் தயாராக உள்ள-நாட்டு நலனுக்குப் பாடுபடக்கூடிய பல பெண்கள் நம்மில் இருக்கின்றார்கள். ஆனால் நம் ஆண்கள் அவர்களை வெளியில் விடாது வீட்டிற்குள்ளேயே அடைத்து வைக்கின்றனர்.

நமது நண்பர்கள் கனம் ராமநாதனுக்கும் கனம் சுப்பரா யனுக்கும் பல ஊர்களில் எத்தனையோ பார்ப்பனப் பெண்கள் கார் ஓட்டினர். அதற்காக எந்தப் பெண்ணை அவர்கள் தள்ளிவிட்டனர்? யார்மீது அவர் கள் குறை கூறினார்கள்? பெண்களாகிய நீங்கள் தலை நிமிர்ந்து “எங்கள் உரிமையில் தலையிட்டால் நாங்கள் சும்மாயிரோம்” என்றால் என்ன? இதைவிட்டு அல்லிராணி, கண்ணகி, மாதவி முதலிய நமது பாட்டிமார்களைப் பற்றிப் பெருமை பேசுவதில் என்ன பலன் இருக்கிறது? ஆணுடன் பெண்களும் ஒத்துழைத்துப் போராட முன்வரவேண்டும். போராட்டத்தில் ஆணுக்கு ஒரு வேலை, பெண்ணுக்கு ஒரு வேலை என்று இல்லை. இருவரும் சமமே. ஆகவே ஆண்களைப் போல் பெண்களும் தமிழ்ப் போராட்டத்தில் இறங்கினால் கூடிய சீக்கிரம் தமிழ்நாடு தமிழனுக்கே ஆகிவிடும்.

நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஏன் சிறையை நிரப்பக் கூடாது? சிறை என்றால் பயமா? அதற்காக யாரையாவது அடிக்கவோ வையவோ வேண்டிய தில்லை. எந்தச் சட்டத்தையும் மீறவேண்டியதில்லை. காங்கிரஸ் பேரால் சட்டம் மீறியவர்கள் பிரதிநிதிகளாக சட்டப் பாதுகாப்பாளர்களாகி விட்டார்கள். ராஜத்து வேஷம் எனது மதம் என்றவர்கள் மகாத்மாக்களாகி விட்டார்கள். நாம் அப்படிக் கூடச் செய்ய வேண்டிய தில்லை. தமிழ் வாழ்க! என்றால் சிறை பிடிப்பார்கள். இந்தி வீழ்க! தமிழ் வாழ்க! என்றால் போதும். உடனே ஆச்சாரியார் சிறைக்கு வா என அழைத்துக் கொள்வார் (கைதட்டல்). எனக்கு ஒரு பயம்! என்னவென்றால் எங்கே அவர் பின்வாங்கி விடுவாரோ என்று. முதலில் நான்கு பேர் போனால், பின்னால் அவர் பிடிக்கிறாரா என்று பார்த்து பிறகு 8, 10, 100, 1000 என்று போக வேண்டும். நமக்கு ஏற்படும் வேதனைக்கோ, தொல் லைக்கோ எல்லையில்லை. இந்நிலையில் நீங்கள் சொல்வதைக் கேட்காது - நாட்டுக்குப் பாடுபடாது ஆண் கள் உங்கள் கிட்ட வருவார்களானால் ரோஷம் இருக்கும் இடம்பார்த்து அவர்களைக் குத்தவேண்டும். வீட்டிற்குள்ளே அனுமதிக்கக் கூடாது. கதவை மூடிவிட

வேண்டும். இதேபோல் அநேக நாடுகளில் பெண்கள் தங்கள் கணவர்களை இடித்துப் திருத்தியதாகச் சரித்திரம் கூறுகின்றது. அநேக ஆண்கள் நீங்கள் சிறைக்குப் போவதைக்காண பயப்படுகிறார்களாம். அவர்களைத் திருத்த வேண்டுமானால் நீங்கள் ஏதாவதொரு ஊருக்குப்போவதாக வீட்டில் சொல்லிவிட்டு அவர்கட்குத் தெரியாது சிறைக்குப் போய்விட வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களும் பின்வந்துவிடுவார்கள். நம்மில் சாதி மத உயர்வுகளையும், சுயநலத்தையும் மறக்கவேண்டும்.

இங்கு ஒரு தோழர் (பெயர் கூற ஆசைப்படவில்லை) ராமசாமி நாஸ்திகன் அவரோடு சேரலாமா என்று ஒருவரிடம் கூறினாராம். ராமசாமி எப்படிப்பட்டவனாயிருந்தாலென்ன? அவன் கூறுவது சரியா, தப்பா என்பதைத்தானே நீங்கள் ஆலோசிக்க வேண்டும். இப்பொழுது இங்கு நான் ஒரு கடை வைத்தால் நாஸ்திகன் என்று சாமான் வாங்க மாட்டீர்களா? அன்றி நான் ஏறின இரயில் வண்டியில் ஏறமாட்டீர்களா? அல்லது உங்கள் வண்டியில் தான் எனக்கு இடம்கொடுக்க மாட்டீர்களா? நான் நாஸ்திகனா அல்லவா என்று உங்களிடம் விளக்க வேண்டியதில்லை. ஏனெனில் இது சில காங்கிரஸ் பார்ப்பனர்களின் சூழ்ச்சி. அதைக்கேட்டு சில சோணகிரிகள் ஏமாறலாம்.

இன்று தேசிய மகாசபை என்று கூறப்படும் காங்கிரஸ் தலைவராக ராஷ்டிரபதி என்னும் பேரால் தோழர் ஜவஹர் லால் தலைவராயிருந்தார். அவர் தன்னை நாஸ்திகன் என்று சொல்லிக்கொள்கிற முறையில் எனக்கு சத்தியத்தில் - கடவுள் மீது நம்பிக்கையில்லையென்பதாகக் கூறி கோர்ட்டில் சத்தியப் பிரமாணம் கூற மறுத்திருக்கிறார். இன்று அவருடைய வீரத்தைப் பற்றி சூரர், தீரர் என்று பாராட்டுகிறார்களே ஒழிய எந்தப் பார்ப்பனராவது பண்டித ஜவஹர்லால் நாஸ்திகர் என்பதற்காக அவரை வெறுத்தார்களா? ஆனால் எங்களிடத்து இவ்விழிகுணம் கிடையாது.


ஜஸ்டிஸ், சுயமரியாதை முதலிய கட்சிகளிலிருந்தாலும், நாம் என்ன செய்தால் வாழ முடியும் என்பதை யோசிக்க வேண்டும். ‘‘காடு வா வா என்கிறது; வீடு போ போ என்கிறது’’. எனக்கு மட்டிலும் இதிலென்ன அத்துணை அக்கறை? சென்ற 25 ஆண்டுகளாகப் பார்க்கிறேன் : பார்ப்பனர்கள் நாடோறும் நம்மைப் பற்றி கேவலமாக - அகங்காரமாகப் பேசுகிறார்கள் - எழுதுகிறார்கள். ஒரு குரங்குப் பத்திரிகை, தோழர் சண்முகம் செட்டியாரைப் பற்றி செக்குப் போட்டு செக்கு ஆட்டுகிற மாதிரி படம் போட்டு இழிவுபடுத்திற்று.

நம்மைக் கழுதை என்றும் நாய் என்றும் வயிற்றுச் சோற்றுக்காரர்களென்றும் கூறி வருகிறது. இதைப்பார்த்து உங்கள் இரத்தங் கொதிப்பதில்லை; கண் சிவப்பதில்லை. இந்நிலையில் வீணே ‘தமிழ் நாடு தமிழனுக்கு’ என்று கூற உங்கட்கு யோக்கியதை உண்டா? தமிழ்மொழி, கலை, நாகரிகம் காப்பாற்றப் பட நாடு வளர வேண்டுமானால், பெண்மணிகளாகிய நீங்கள் துணிந்து முன்வர வேண்டும். இதைக் கருதியே இம்மாநாட்டைக் கூட்டினீர்கள்; பல தீர்மானங்கள் நிறைவேற்றினீர்கள். பெண்கள் உண்மையில் வீரமுடையவர்கள்தான்; நினைத்ததை முடிக்கும் ஆற்றலுடையவர்கள்தான் என்பதை செயலில் காட்டவேண்டும். ஆனால் சிறைக்குச் செல்லும் ஆண்களை மட்டும் பாராட்டுவதுடன் நில்லாது, நீங்கள் சிறைச் செல்வதைப் பார்த்து ஆண்கள் பாராட்ட வேண்டிய நிலையை உண்டாக்க வேண்டும். இதற்குச் சிறிதும் பின்னிடலாகாது’’ (நீண்ட கைதட்டல்).

- விடுதலை, 19-11-1938

தொடரும்

## சுயமரியாதைச் சுடரொளி அரூர் பாவலர் மணிவேலன் மறைந்தார்




சுயமரியாதைக் கொள்கையாளரும், சாதிக் கலப்புத் திருமணத்தை நடத்திக் கொண்டவரும், தமிழறிஞரும், தமிழகம் அறிந்த கவிஞருமான அரூர் பாவலர் மணிவேலன் அவர்கள், தம் 84ஆம் அகவையில், அரூரில் தம் இல்லத்தில் மாரடைப்புக்கு ஆளாகி, 28.4.2016 செவ்வாய் மாலை 6.50 மணிக்கு மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னார் பல ஊர்களில் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். கடைசியில் அரூர் அரசு மேநிலைப் பள்ளியில் பணியாற்றும் போது பணி ஓய்வு பெற்றார். தமிழில் கவிதை நூல் களையும், பல உரைநடை நூல்களையும் எழுதி யுள்ளார்.

‘‘சிந்தனையாளன்’’ இதழிலும், பொங்கல் மலரிலும் கட்டுரைகள் எழுதி உதவினார்.

அப்பெருமகனாரை இழந்து வருந்தும் ஓய்வு பெற்ற ஆசிரியரான அவர்தம் அன்புத் துணைவியார், இருமகள்கள், மகன் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர்க்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் உரித்தாக்குகிறோம்.

**- வே. ஆனைமுத்து**



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா

**கடலூர் மாவட்டம், பண்ருட்டியில்**

# விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு மாநாடு & கியானி ஜெயில் சிங் நூற்றாண்டு விழா

## அழைப்பிதழ்

நாள் : **12.6.2016 ஞாயிற்றுக்கிழமை**

முற்பகல் 9.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை

இடம் : **இரங்கா மகால்**

சென்னை நெடுஞ்சாலை, பண்ருட்டி

காலை 9.30 மணி :

பேரவைக் கொடியேற்றுபவர் முனைவர் **ஆ. முத்தமிழ்ச் செல்வன்**

மாநிலச் செயலாளர், இளைஞர் மாணவர் அணி, மா.பெ.பொ.க.

**வே. ஆனைமுத்து**
புரவலர்–தலைவர்
94448 04980

**கலச. இராமலிங்கம்**
பொதுச் செயலாளர்
94446 07804

**அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் பேரவை**

7, நீலி வீராசாமித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

**குடும்பம், சுற்றம், தோழமை என உடன் கூட்டி வாருங்கள்**
**மனமுவந்து நன்கொடை தாருங்கள்!**

---

நிகழ்ச்சி 2 : 12.30 மணி முதல் 1.30 மணி வரை

## கியானி ஜெயில் சிங் நூற்றாண்டு விழா மற்றும் நூல் வெளியிட்டு விழா

தலைமை
**வே. ஆனைமுத்து**, புரவலர் - தலைவர்
அ.இ. ஒடுக்கப்பட்டோர் பேரவை

வரவேற்புரை
**கலச. இராமலிங்கம்**
பொதுச் செயலாளர், அ.இ.ஒ.பே.

கியானி ஜெயில் சிங் பற்றி வே. ஆனைமுத்து எழுதிய ஆங்கில நூலை வெளியிடுபவர் :
**திருப்பெருந்திரு. சீனந்தல் அடிகளார்**

முதற் படி பெறுபவர் :
மாம்பலம் **ஆ. சந்திரசேகர்**
நிறுவுநர், சந்திரசேகர் திருமண மண்டபம், மேற்கு மாம்பலம், சென்னை

படிகள் பெற்றுச் சிறப்பிப்போர்

வெள்ளையாம்பட்டு **சுந்தரம்**
தெலுங்கு தேவாங்கர் சங்கம், சென்னை

பொறிஞர் **இரா. சிவராமகிருட்டிணன்**
அ.இ.ஒ. பேரவை, குமரி மாவட்டம்

முனைவர் **சோ. கருப்பசாமி**
சாலியர் மகாசன சங்கம், சென்னை

**ஏ.ஜே. புருசோத்தமன்**
மாநில இணைச் செயலாளர்
அஞ்சல் துறை பி.வ. ஊழியர் நலச் சங்கம்

**ஜெ. பிரசாத்**
தொலைத் தொடர்பு பி.வ. ஊழியர் நலச் சங்கம், சென்னை

**மா. சமத்துவமணி**
செயலாளர், வள்ளுவர் மன்றம்
மறைமலைநகர்

பொறிஞர் **தி. துரைசித்தார்த்தன்**
துணைப் பொதுச் செயலாளர்
இளைஞர் மாணவர் அணி
மா.பெ.பொ.க.

**வே. இராசேந்திரன்**
இராணிப்பேட்டை பாரத மிகுமின்
நிறுவன, பி.வ. ஊழியர் நலச் சங்கம்

**கே.எம். முகமது அலி**
பொதுச் செயலாளர்
சென்னைத் துறைமுகக் கழக
பி.வ. ஊழியர் நலச் சங்கம்

**ஆர். செந்தாமரைக்கண்ணன்**
பொதுச் செயலாளர், இன்ஜின்
தொழிற்சாலை பி.வ. ஊழியர்
நலச் சங்கம், ஆவடி

சிறப்புரை - **Special Address**

**இராம் அவதேஷ் சிங்**, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்
தலைவர், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை

**RAM AWADHESH SINGH**, Ex. M.P.,
President, A.I.F.B.Cs, S.Cs, S.Ts & R.Ms

நன்றியுரை :
**கோ. விசுவநாதன்**
ஆசிரியர், "பஞ்ச சக்தி"

**நிகழ்ச்சி 1 : 10.00 மணி முதல் 12.30 மணி வரை**

## பிற்படுத்தப்பட்டோருக்கு : பதவி உயர்வில் இடஒதுக்கீடு கொடு! கிரீமிலேயர் ஆணையை நீக்கிடு!

தலைமை
**வே. ஆனைமுத்து**
புரவலர் - தலைவர்
அ.இ. ஒடுக்கப்பட்டோர் பேரவை

வரவேற்புரை
**சி. நடராசன்**
மாவட்டச் செயலாளர்
மா.பெ.பொ.க., காஞ்சிபுரம்

தொடக்கவுரை - Inaugural Address
**இராம் அவதேஷ் சிங்**, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்
தலைவர், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை
**RAM AWADHESH SINGH**, Ex. M.P.,
President, A.I.F.B.Cs, S.Cs, S.Ts & R.Ms

சிறப்புரையாற்றுவோர் :

**மா. ஞானப்பிரகாசம்**
சமூக நலத் தொண்டர்
திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

**கு. தனசேகரன்**
பொதுச் செயலாளர்
அ.இ. மய்ய அரசு பி.வ. ஊழியர்
நலச் சங்கங்களின் பேரமைப்பு, வேலூர்

**அ. இராசாமுத்து**
தலைவர், அ.இ. எண்ணெய், எரிவாயு
நிறுவன பி.வ. ஊழியர் நலச் சங்கம்

**வை. தண்டாயுதம்**
தலைவர், இராணிப்பேட்டை பாரத
மிகுமின் நிறுவன, பி.வ. ஊழியர் நலச்
சங்கம்

**மு. பிச்சைமுத்து**
செயலாளர், பெரியார் சமூகநீதிப் பேரவை
மறைமலைநகர்

**கி. குமார்**, தலைவர்
வருமானவரித் துறை
பி.வ. ஊழியர்நலச் சங்கம்
சென்னை

**முத்து. அன்பழகன்**
நாகை மாவட்டச் செயலாளர்
மா.பெ.பொ.க., சீர்காழி

**பா. மோகன்**
கடலூர் மாவட்டச் செயலாளர்
மா.பெ.பொ.க.,

**ஆறு. அண்ணல்**
நிறுவுனர், வன்னியர் வரலாற்று
ஆய்வு மையம், சென்னை

தீர்மானங்களை முன் மொழிபவர் :
**ந. கருணாகரன்**
அ.இ. ஒடுக்கப்பட்டோர் பேரவை,
திருச்சி கிளை

நன்றியுரை : **ஆ.கு. ஆறுமுகம்**
விழுப்புரம் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.,

**உணவு : பகல் 1.30 மணி முதல் 2.30 மணி வரை**

**புரட்சியாளர் அம்பேத்கர் இசைக்குழுவின் நிகழ்ச்சி : 2.00 முதல் 3 மணி வரை**

**நிகழ்ச்சி 3 : 2.30 மணி முதல் 7.00 மணி வரை**

## அனைத்து வகுப்புகளுக்கும் விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு கொடு! பிரதிநிதித்துவம் பெறாத வகுப்புகளுக்கு உள்ஒதுக்கீடு கொடு!

தலைமை
**வே. ஆனைமுத்து**
புரவலர் - தலைவர்
அ.இ. ஒடுக்கப்பட்டோர் பேரவை

வரவேற்புரை
**மோ.சி. சங்கர்**
வேலூர் மாவட்டச் செயலாளர்
மா.பெ.பொ.க.,

தொடக்கவுரை - Inaugural Address
டாக்டர் **தாவுஜி குப்தா**
துணைத் தலைவர், அ.இ.ஒ.பேரவை & முன்னாள் மேயர், லக்னோ
**Dr. DAUJI GUPTA**, Ex. Mayor of Lucknow
Vice-President, A.I.F.B.Cs, S.Cs, S.Ts & R.Ms

சிறப்புரையாற்றுவோர்:

**பி.எஸ். அரங்கநாதன்**
சட்ட ஆலோசகர்
த.நா.அனைத்து நகை வியாபாரிகள் சங்கம்

**அ. தண்டபாணி**
மாநிலத் தலைவர், தமிழ்நாடு மருத்துவச்
சமூகப் பாதுகாப்புச் சங்கம், விழுப்புரம்

**இரா. மங்கையர்செல்வன்**
நிறுவுநர், விடுதலை வேங்கைகள்

**வே. குப்புசாமி**, அமைப்புச் செயலாளர்
தமிழ்நாடு விசுவகர்ம நண்பர்கள் நலச்
சங்கம், வேலூர்

திருச்சி **சீ. இராமலிங்கம்**
உயர்மட்டக் குழு உறுப்பினர்
தமிழ்நாடு யாதவ மகா சபா

**பொ. சுப்பிரமணியன்**
மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.,
திருவண்ணாமலை

**மா. நாராயணசாமி**
மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.,
பெரம்பலூர்

**கோவிராமலிங்கம்**
மாநில மகளிர் அணிச் செயலாளர்
மா.பெ.பொ.க.

**டாக்டர் விமுனா மூர்த்தி**
நிறுவுநர், முற்போக்கு சமூக நீதிப்
பேரவை காஞ்சிபுரம்

**வி. சண்முகம்**, தலைவர்
சலவையாளர் முன்னேற்றச் சங்கம்
விழுப்புரம்

காஞ்சி **அமுதன்**
தமிழக இளைஞர் எழுச்சி இயக்கம்

வழக்குரைஞர் **க. லெனின் வினோபர்**
பெரியார் அம்பேத்கர் தொண்டு நிறுவனம்,
புதுதில்லி

**ச. இராதாகிருட்டிணன்**
மாவட்டத் துணைத் தலைவர்,
அ.இ. ஒடுக்கப்பட்டோர் பேரவை, திருச்சி

**நா. மதனகவி**
நகரச் செயலாளர்
மா.பெ.பொ.க., வாணியம்பாடி

நன்றியுரை : **ப. வடிவேலு**, மேலாளர், சிந்தனையாளன்

தொடர்புக்கு : **ஆ.கு. ஆறுமுகம்** 97884 21442
விழுப்புரம் மாவட்டச் செயலாளர்
மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

# மந்திரிமார்களுக்கு வேண்டுகோள்


- ஈ.வெ.ரா

என்னுடைய வாழ்நாளில் அரசாங்க மந்திரிகளில் பொப்பிலி அரசரைத் தவிர இன்றுவரை எந்த மந்திரிகளிடமும் நேரில் சென்றோ, எழுத்து மூலமாகவோ என் கழகத்துக்காவது, பொது நலத்திற்காவது எந்தவிதமான வேண்டுகோளும் செய்துகொண்டது இல்லை.

திருவாளர்கள் முத்தையா முதலியார், டாக்டர் சுப்பராயன் ஆகியவர்கள் மந்திரிகளாக இருந்த காலத்தில், அதாவது சுமார் 1928-29 ஆம் ஆண்டுகளில் அவர்களிடம் பொது விஷயங்களைப் பற்றி ஏதாவது கேட்டுக் கொண்டிருப்பேன். அவர்களும் 100க்கு 90க்கு மேற்பட்ட வேண்டுகோள்களை மதித்திருப்பார்கள். மற்றபடி, இதுவரை எந்த மந்திரிகளிடமும் என் சொந்த விஷயம் உள்பட எந்தக் காரியத்திற்கும் நெருங்கினது இருக்காது.

இப்பொழுது நான் மந்திரிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துக் கொள்ளவேண்டியவனாய் இருக்கிறேன். அதாவது, தமிழ்நாட்டிலே பாமர மக்கள் மொழியாகிய தமிழ் மொழியை அரசியல், சமுதாய இயல் காரியங்களில் அரசாங்கம் சிறிதும் இலட்சியம் செய்வதில்லை. இது தவிர, இந்தியை நுழைத்துப் பள்ளிக்கூடங்களிலும், பரீட்சைகளுக்கும் பாடமாக ஏற்பாடு செய்து, படிக்கும் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் தொல்லைகள் ஒருபுற மிருக்க, உத்தியோகத் தகுதியைக் கொண்டுவந்து புகுத்திப் பெரும்பாலான தமிழ் மக்களை உத்தியோகத் தகுதி அற்றவர்களாக ஆக்குவது மற்றொருபுறமிருக்க, இவையெல்லாம் போதாது என்று கருதியோ என்னமோ, தமிழ் எழுதப் படிக்கப் பேசத் தெரியாத மலையாளிகளையும், கன்னடியர் (மங்களூர்க்காரர்)களையும் தமிழ்நாட்டிலே மாகாணத் தலைமை உத்தியோகம், ஜில்லா தலைமை உத்தியோகம் மற்றும் கெஜட் பதிவு அதிகாரிகள், கெஜட் பதிவு இல்லாத அதிகாரிகள், கமிஷனர்கள் முதலிய உத்தியோகங்களில் நியமிப்பது என்பது சர்வசாதாரணக் காரியமாக இருந்துவருகிறது.

ஜனநாயக நாடு, சுதந்திர நாடு, மக்கள் ஆட்சி என்கின்ற அலங்காரப் பெயர்களைச் சொல்லிக்கொண்டு நடைபெறுகிற ஆட்சியில் 100க்கு 80 பேர்களுக்கு மேற்பட்டுக் கல்வியறிவில்லாத பாமர மக்கள் நிறைந்திருக்கும் நாடு இது என்பதைச் சிறிதும் உணராமல், மேற்கண்ட மாதிரியான -நாட்டுமொழி தெரியாத அந்நிய மொழியாளர்களை அதிகாரிகளாக நியமிப்பதென்றால் குடிமக்கள் எந்த மொழியில் விண்ணப்பங்களையும் வேண்டுகோள்களையும் எழுதமுடியும்?



பெயரளவிலே, நாட்டில், நாட்டு மொழியை வளர்க்கிறோம், வளர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அகராதி, கலைக் களஞ்சியம், பள்ளிப் பாடப்புத்தகங்கள் முதலியவைகளின் பேரால் தமிழை நாசப்படுத்தினது மாத்திரமில்லாமல், தமிழ் தெரியாத அதிகாரிகளைக் கொண்டுவந்து வைத்து, அவர்களிடம் நீதி,நிர்வாக அதிகாரங்களைக் கொடுத்து நிர்வாகம் செய்யச் செய்வது என்றால், எந்தவிதத்தில் இந்த நாட்டில் இந்த நாட்டுமொழியை அரசாங்கம் ஆதரிக்கிறது என்று சொல்லமுடியும்? இங்கு, கன்னடியர்களுக்குக் கன்னட ஜில்லா ஒன்று இருக்கிறது. மலையாளிகளுக்கு மலையாள ஜில்லா ஒன்று இருக்கிறது. ஆதலால், அவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்த அளவில் உத்தியோகங்கள் கொடுத்து அவர்களை அந்தந்த ஜில்லாக்களில் உத்தியோகங்கள் போடுவதில் ஆட்சேபணை இல்லை. இப்படியிருக்க, இந்தக் கன்னடியர்களையும், மலையாளிகளையும் தமிழ்நாட்டிலே கொண்டுவந்து புகுத்துவதற்குக் காரணம் என்ன?

வெள்ளைக்காரன் ஆட்சியிலும், பார்ப்பனர்கள் ஆட்சியிலும் இதற்குக் காரணங்கள் இருக்கலாம். என்னவென்றால், பார்ப்பனர்களுடைய ஏகபோக ஆதிக்க நலத்திற்காகத் தங்களுக்குக் கிடைத்த உத்தியோகங்களைத் தவிர மீதி உத்தியோகங்களுக்குத் தமிழ், தமிழன்(திராவிட இன) உணர்ச்சி இல்லாதவர்களைப் போட்டால், தங்கள் நலனுக்கு எவ்விதக் குறைபாடும் ஏற்படாது என்று கருதி,அவர்கள் பெரிதும் தங்களுக்குக் கிடைக்காத இடங்களுக்கெல்லாம் கிறித்துவரையாவது, முசுலீம்களையாவது, அதுவும் முடியாவிட்டால் மலையாளிகளையாவது, கன்னடியர்களையாவது நியமிக்கச் செய்து வந்தார்கள். இவர்களுக்குத் தமிழர்(திராவிட) இன உணர்ச்சி ஏற்படுவதற்கு அவசியம் இல்லை. நியாயமும் இல்லை. ஆதலால், அந்தக் காலத்திற்கு அது அவர்களுக்கு நியாயமாகவும் சாத்தியமாகவும் இருக்கலாம்.

இப்பொழுது சென்னை அரசாங்க மந்திரி சபையில் ஒரே ஒரு கன்னட மந்திரியைத் தவிர மற்றவர்கள்

எல்லோரும் தமிழர்களாக-அதுவும் ஒரு ரெட்டி, ஒரு நாயுடு, ஒரு செட்டி கூட இல்லாத தனித்தமிழர்களாக இருக்கும்போது, இத்தனை மலையாளிகளும் இத்தனை கன்னடியர்களும் இந்த நாட்டில் எப்படி வரமுடிந்தது என்பது மிகவும் யோசிக்கத் தகுந்ததும் கண்டிக்கத் தகுந்ததும் ஆகும்.

**முசுலீம்களும், கிறித்துவர்களும், பார்ப்பனர் களும் மந்திரி சபையில் இல்லை என்றாலும் அதனால் அவர்களுக்கு ஒன்றும் முழுகிப் போகவில்லை. ஏனென்றால், இவர்கள் எல்லாரும் தங்கள் விகிதத்திற்கு மேல் அதிகமான அளவு - அதுவும் கிறித்தவர்களை எடுத்துக்கொண்டால் தங்கள் விகிதத்துக்கு மேல் 2,3 பங்கு அதிகமான அளவிலும்; பார்ப்பனர்களை எடுத்துக்கொண் டால் தங்கள் விகிதத்துக்குமேல் 5,6 பங்கு அதிகமாகவும் பதவி முதலிய சலுகைகள் அனு பவிக்கிறார்கள். இவர்களுக்கு மந்திரி பதவி இல்லை என்றால் அது தனிப்பட்டவர்களுக்கு ஏமாற்றமாய் இருக்கலாமே தவிர, அந்த மதத்தார்க்கு எந்த விதத்திலும் குறைவில்லை. தமிழர்களுக்கு மந்திரி பதவி மாத்திரம் தாரா ளமாக இருந்தும், அவர்கள் இனத்துக்கு இவர் களால் நியாயம் செய்யப்பட்டது என்று சொல்லு வதற்கு இடமில்லாமல் இருக்கிறது.**

நாட்டிலே இவ்வளவு தூரம் இன எழுச்சியும், நாட்டு எழுச்சியும், மொழி எழுச்சியும் ஏற்பட்ட காலத்திலும் இந்த மந்திரிகள் இவ்வளவு அலட்சியமாக இருந்து கொண்டு, தங்கள் வாழ்வின் வளப்பத்தையும், பெருமையையும் மாத்திரம் கவனித்துக்கொண்டு, தங்களுக்குச் சொந்தத்தில் வேண்டியவர்களுக்கு மாத்திரம் ஏதோ ஒருசில பதவியை அளித்துக்கொண்டு, காலம் தாழ்த்தி வருகிறார்கள் என்றால் - தமிழர் இனத் துக்கே இது அவமானமும் கேடும் ஆன காரியமாகும் அல்லவா? தமிழை வளர்க்கிற சர்க்கார், தமிழுக்கு நல்லது செய்யாவிட்டாலும் தமிழர்களுக்கு மொழித் துறையில் தொல்லையாவது கொடுக்காமல் இருக்க வேண்டாமா?

சிற்சில ஜில்லாக்களுக்கு, ஆட்சியில் தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவது என்று பரீட்சை பார்ப்பது என்று அனுமதித்து, உத்தியோகங்களுக்குக்கூட ஜில்லாக்களில் கூட மலையாளிகளையும், கன்னடியர் களையும் உத்தியோகங்களில் நியமிப்பதென்றால், இதைக் கவலை ஈனம் என்று சொல்லுவதா அல்லது சுயநல தாட்சண்யம் என்று சொல்லுவதா என்று புரியவில்லை. தமிழ்நாட்டில் தமிழன் பதவி வகிக்க வேண்டும் என்று கேட்பது ஒரு பெரிய காரியமாய் இருந்தால், எந்த விதத்தில் தமிழ் இராஜ்யம் தமிழர் ஆட்சியாய் இருக்கிறது என்று சொல்லமுடியும்?


உயர்திரு காமராசர் அவர்களை முதல்வராகக் கொண்ட சென்னை இராஜ்ய மந்திரி சபை இனியாவது இது விஷயத்தில் கவலை கொள்ளுவது பெருமைக் குரியதாகும். இது விஷயம் பற்றி எனது பிறந்தநாள் விழா அறிக்கையின்போது குறிப்பிட்டிருந்தேன். அதுமுதல் இதுவரையிலும் முன்னிருந்த நிலைமை வளர்ந்ததே தவிர, சிறிதாவது கவனித்ததாகக் கூடத் தெரியவில்லை.

**குறிப்பு: கொச்சி இராஜ்யத்திற்கு திரு ஆர்.கே சண்முகம் செட்டியார் அவர்களை திவானாகப் போட்ட காலத்தில், கொச்சியில் உள்ள மலை யாளிகள் எல்லோரும் ஒன்றுகூடி எதிர்த்தார்கள். அதே கொச்சி இராஜ்யத்தில் அநேகப் பார்ப் பனர்கள் திவான்களாய் இருந்த காலத்தில், யாதொரு பேச்சுமுச்சும் இல்லாமல் ஏற்றுப் பெருமை அடைவதாகக் காட்டிவந்தார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம்.**

விடுதலை அறிக்கை 22-04-1955

(ஆதாரம் - பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள் - இரண்டாம் பதிப்பு
தொகுப்பாசிரியர்.வே.ஆனைமுத்து)
தொகுதி - 3, அரசியல் - 1 பக்கங்கள் : 1171-1174

## பாவலர் தமிழேந்தி



பாவலர் தமிழேந்தி சீராக உடல்நலம் தேறி வருகிறார். நன்கு குண மடையும்வரை சென்னை யில் உள்ள தன் மூத்த மகள் வீட்டில் தங்கியிருப் பார். இனி அவர் முகவரி இதுவே.

**பாவலர் தமிழேந்தி**
மே/பா : **யு.அருவி**
46,கே.மோகனம் தெரு, சிலந்திக்குட்டை,
கொளத்தூர் முதன்மைச் சாலை,
சென்னை - 600 099.
(வில்லிவாக்கம் தொடர்வண்டி
நிலையம் அருகில்) **பேசி : 94445815832**

# பத்துத் தமிழர்களைச் சுட்டுக் கொன்றவர் இராசாசி! அதை ஏன் என்று கேட்காதவர் ம.பொ.சி.!

- வாலாசா வல்லவன்

(மே இதழ் தொடர்ச்சி...)

“நீதிபதி ம.பொ.சிக்கு 6 வார சிறைத்தண்டனை விதித்தார். அதுவரை எல்லைக்கிளர்ச்சியில் ஈடுபட்டவர் களுக்கு 2 வாரத்திற்கதிமாகத் தணிகையில் யாருக்கும் தண்டனை தரப்படவில்லை. எனக்குத்தான் அதிக தண்டனை”.... (மேற்கண்ட நூல் பக். 105)

ம.பொ.சி.யை வேலூர் சிறைக்கு அனுப்பவேண்டாம் என்று முதல்வர் கூறியதால், திருத்தணி சப்-ஜெயலில் ம.பொ.சி. தங்க வைக்கப்பட்டார். ஆமாம் அடைக்கப் படவில்லை. இதோ ம.பொ.சி.யே பேசுகிறார். “சப்-ஜெயிலில் வழக்கமான கைதிகளை அடைக்கும் காற்றோட்டம் இல்லாத இருட்டறையில் என்னை அடைக் காமல் சப்-இன்ஸ்பெக்டர் அலுவலகத்தைக் காலி செய்து அங்கு என்னை வைத்தனர். கட்டில், நாற்காலி, மின்விசிறி முதலியவற்றையும் கொண்டு வந்து வைத்தார்கள்”.

“சட்டத்திற்குட்பட்டு ம.பொ.சிக்கு எவ்வளவு வசதி களைச் செய்து தரமுடியுமோ, அவ்வளவையும் செய்து கொடுங்கள் என்று முதலமைச்சர் தங்களுக்குக் கட்டளையிட்டதாகப் போலீஸ் அதிகாரிகள் என்னிடம் கூறினர். இராசாசி என்னிடம் வைத்துள்ள அன்பை அறிந்து கொள்ள இந்த நேரம் எனக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது.” (மேற்கண்ட நூல் பக். 104)

இதே இராசாசி 1938-இல் ஹிந்தி எதிர்ப்புப் போராளிகளுக்கு ஆறுமாதம் முதல் 2 ஆண்டுகள் வரை தண்டனை கிடைக்கும்படி கிரிமினல் சட்டம் மூலம் நடவடிக்கை எடுத்தார். பெரியாரை பெல்லாரி சிறையில் அடைத்தார். ம.பொ.சி. செல்லப்பிள்ளை என்பதால் அவருக்கு மட்டும் உபசாரம் செய்துள்ளார்.

பிரதமர் நேரு அவர்கள் சித்தூர் மாவட்டம் தகராறுக் குரிய பிரதேசம் என்பதனை ஒப்புக்கொண்டு அதற்காக விரைவில் எல்லைக்கமிஷன் அமைக்கப்படும் என்று, இன்று பகலில் செய்தி நிருபர்களிடம் கூறியுள்ளார். இதைத் தங்களிடம் தெரிவித்து தங்கள் கருத்தை அறிந்து உடனே தமக்குத் தகவல் தருமாறு முதலமைச்சர் இராசாசியைக் கேட்டுள்ளார் என்று வி.ஆர். இராசரத்தின முதலியார் மகிழ்ச்சியோடு கூறினார். (மேற்கண்ட நூல் பக். 106)

நேருவின் அறிக்கை தமக்கு மனநிறைவைத் தந்ததாகக் கூறி அதே நாளில் ம.பொ.சி. சிறையிலிருந்து வெளியே வந்துவிட்டார். 6 வாரம் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டாலும் 5 நாளில் வெளியே வந்துவிட்டார்.இது ம.பொ.சி.யும் இராசாசியும் நடத்திய கபட நாடகம்தான். எப்படி என்றால் இது நடைபெற்றது 1953 சூலையில். நேரு அதன் பிறகு நான்காண்டு காலம் எல்லைக் கமிஷனை அமைக்கவே இல்லை என்பதை எண்ணிப் பார்க்கவும்.



ம.பொ.சி. கைது செய்யப்பட்ட மறுநாளே விநாயகம் தடை உத்தரவை மீற இருந்தார். தலைவர் ம.பொ.சி. கேட்டுக் கொண்டதால் போராட்டம் அன்றே நிறுத்தப் பட்டது. அதன்பிறகு இரண்டு ஆண்டுகள் எந்தப் போராட்டமும் நடைபெறாமல் ம.பொ.சி. தடுத்துவிட்டார். சென்னை மாகாண அரசின் தடை உத்தரவை மீறிப் பல இடங்களிலும் ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. சூன் 2-ஆம் தேதி அம்மையார்குப்பத்தில் 500 பேர், ஆர்.கே. பேட்டையில் 500 பேர் தடை உத்தரவை மீறி ஊர்வலம் நடத்தினர். சூன் 30-ஆம் தேதி நகரியில் சுமார் 4000 பேர் தண்டவாளத்தில் அமர்ந்து பம்பாய் எக்ஸ்பிரஸ் ரயிலை மறித்தனர். திருவாலங் காட்டுக்கும் மணவூருக்கும் இடையே ஜனதா எக்ஸ்பிரஸ் இரயில் நிறுத்தப்பட்டது. சித்தூரிலும் இரயில் நிறுத்தம். (மேற்கண்ட நூல் பக். 118) வடக்கெல்லைப் போராட்டத்தின் வீச்சைக் குறைத்து இராசாசியைக் காப்பாற்றவே ம.பொ.சி. இப்படி நாடகம் ஆடினார்.

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினர் 02.09.1953 அன்று கே.விநாயகம் தலைமையில் தில்லிக்குச் சென்று பிரதமர் நேருவைச் சந்தித்தனர். இந்தச் சமயத்தில் தில்லித் தமிழ்ச்சங்க விழாவில் கலந்து கொள்ள ம.பொ.சி.யும் தில்லி சென்றிருந்தார். அன்று ம.பொ.சி. தில்லியில் இருந்தபோதிலும், வடக்கு எல்லைப் போராட்டக்குழுவிற்குத் தலைவராக இருந்த போதிலும் நேருவைப் பார்க்கும் குழுவினருடன் அவர் உடன் செல்லவில்லை. (மேற்கண்ட நூல் பக். 121)

ம.பொ.சிக்கு வடக்கெல்லைப் போராட்டத்தில் எவ்வளவு அக்கறை இருந்தது! என்பது இதன் மூலம் தெரிகிறது. நேரு காங்கிரசை விட்டுத் தம்மை நீக்கி விடுவார் என்று பயந்து கொண்டுதான் ஒதுங்கிவிட்டார் என்பதே உண்மை. 1953 சூலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட எல்லைப்போரை மீண்டும் இரண்டு ஆண்டு கள் கழித்துத் திரு. கே. விநாயகத்தின் முயற்சியில்தான் மீண்டும் தொடர முடிவு செய்யப்பட்டது.

தமிழரசுக் கழக மாநாட்டில் பேசிய விநாயகம் ''நாங்கள் இறுதி முடிவுக்கு வந்துவிட்டோம். அதாவது இரண்டு வருடங்கள் காத்திருந்தும் எல்லைக்கமிஷன் அமைக்கப்படாததால் தற்காலிகமாக நிறுத்தி வைத்த எல்லைப் போராட்டத்தை மீண்டும் துவக்குவதென்று தீர்மானித்துவிட்டோம்'' (மேற்கண்ட நூல் பக். 152)

1955 ஆம் ஆண்டு ஆகஸ்டு 24 ஆம் தேதி முதல் சத்தியாகிரகம் நடைபெறவும், கே. விநாயகம் தளபதியாகவும் முடிவு செய்யப்பட்டது. அதற்குள் ம.பொ.சி. சென்னை மாநில நிதி அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். 1955 டிசம்பருக்குள் எல்லைச் சிக்கல் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

''நான் கொடுத்த மூன்று நிபந்தனைகளையும் அரசாங்கம் ஒப்புக்கொண்டுவிட்டதால், எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் காலவரம்பு வைக்கப்பட்டு விட்டதால், நாளை நடக்கவிருந்த சத்தியாகிரகப் போராட்டத்தை இவ்வாண்டு டிசம்பர் 31ஆம் தேதி வரை ஒத்தி வைத்து இருக்கிறேன்'' என்று ம.பொ.சி. அறிவித்தார். (மேற்கண்ட நூல் பக். 158-159)

1955 டிசம்பர் இறுதிநாள் முடிந்தும் வடக்கெல்லைப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் எட்டப்படாததால் வடக்கெல்லைப் போராட்டக்குழுச் செயலாளராகிய நான் (இந்நூலாசிரியர்), திருத்தணி வன்னியர் குல சத்திரத்தில் 1956 சனவரி 19 ஆம் தேதி காலை 9 மணிக்கு உண்ணாவிரதத்தைத் தொடங்கினேன். அதன் விளைவாகத் திருத்தணியில் கடைகள் அடைக்கப்பட்டன. ஊர்வலமும் நடத்தப்பட்டது. தலைவர் ம.பொ.சி.யிடமிருந்து கடிதம் வந்தது. அதில் உண்ணாவிரதத்தைத் தொடர வேண்டாம் எனக் கூறியிருந்தார். (மேற்கண்ட நூல் பக். 165)

பெரியோர் பலரின் அறிவுரையை ஏற்று உண்ணா விரதத்தை மறுநாள் காலை 9 மணிக்கு முடித்துக் கொண்டேன்.

தமிழக வடக்கெல்லைப் போராட்டம் வெற்றிபெறும் பொருட்டு டிசம்பர் 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று ''**வடக்கெல்லைப் பாதுக்காப்பு தினம்**'' கொண்டாடுமாறு தமிழ் மக்களை வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழு வேண்டிக் கொள்கிறது. சென்னையில் நடைபெறும் எல்லைப் போராட்டத்தில் கலந்து கொள்ளத் தொண்டர் படைக்குழு ஒன்று தணிகையிலிருந்து புறப்பட்டுச் சென்னை வரை கால்நடையாகவே செல்ல வேண்டும் என்றும், இப்படைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல திரு. ஈ.எஸ். தியாகராஜன் அவர்களை நியமிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (மேற்கண்ட நூல் பக். 176)

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினர் 1956 செப்டம்பர் 20ஆம் நாள் சுமார் 500 பேர் சென்னையிலிருந்து புறப்பட்டனர். தளபதி கே. விநாயகம் வந்து கலந்துக் கொண்டார். 12 மைல் நடந்து வந்த கே. விநாயகம் பகலுணவுக்குப் பின் சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டுச் சென்னை சென்று விட்டார். ம.பொ.சி. திருவள்ளூருக்கு வந்து நலம் விசாரித்துவிட்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டார்.... செப்டம்பர் 23 ஆம் தேதி கோடம்பாக்கம் வந்தவுடன் தளபதி விநாயகம் இன்முகம் காட்டி வரவேற்றுக் காலை மற்றும் பகல் உணவிற்கு ஏற்பாடு செய்திருந்தார். வடபழனி கோவில் மண்டபத்தில் ஓய்வெடுக்கவும் ஏற்பாடு செய்திருந்தார். நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு ம.பொ.சி. வந்து பார்த்தார்....

செப்டம்பர் 24 ஆம் தேதி தளபதி கே. விநாயகம் தலைமையில் 50 பேர் சட்டமன்றத்தை நோக்கி முழக்கங்கள் எழுப்பியவாறு (அப்போது சட்டமன்றம் கலைவாணர் அரங்கில் நடைபெற்று வந்தது) சென்றோம். அனைவரும் கைது செய்யப்பட்டனர். 25 ஆம் நாளும் மறியல் நடைபெற்றது. 26 ஆம் நாள் ம.பொ.சி. மறியலில் கலந்து கொண்டார். 29 ஆம் தேதி வரை மறியல் நடைபெற்றது. அனைவருக்கும் 15 நாள் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால் மறுநாள் 30 ஆம் தேதியே அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இது எங்களுக்குச் சற்று ஏமாற்றமாகவே இருந்தது. ம.பொ.சி. அவர்கள் எங்களிடம் மீண்டும் போராட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார். இது எங்களுக்கு ஓரளவு ஆறுதல் அளித்தது. (மேற்கண்ட நூல் பக். 180-181)

இதை எழுதியவர் வடக்கெல்லை போராட்டக்குழுவின் செயலாளர் திருத்தணி கோல்டன் திரையரங்க உரிமையாளர் கோல்டன் ந.சுப்பிரமணியம், நூல் ஞுரு ''தணிகை மீட்பும் வடக்கெல்லைப் போராட்டமும்''.

ஒவ்வொரு முறையும் வடக்கெல்லைப் போராட்டக் குழுவினர் போராடும் போதெல்லாம் அதைத் தடுப்பதிலேயே ம.பொ.சி. குறியாக இருந்துள்ளார். வடகெல்லைப் பிரச்சினை தொடர்ந்து இருந்துகொண்டே இருந்தால் தான், ம.பொ.சி. க்கு அரசியல் கட்சி நடத்த ஆட்கள் இருப்பார்கள் என்ற காரணத்தினால் பிரச்சினை விரைவில் தீர்ந்துவிடாமல் பார்த்துக்கொண்டார். 1956ல் இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்கள் பிரிந்த போதும் தமிழகத்தின் வடக்கெல்லையைப் பற்றிய குறிப்பு எதுவும் பசல் அலி ஆணையத்தில் இல்லாமல் போனதற்கு ம.பொ.சி., - இராசாசி கூட்டுறவே காரணம். அதனால் 1960 வரை இப்பிரச்சினை இழுத்துக் கொண்டே சென்றது.

ஆந்திரப் பிரிவினை தொடர்பான மசோதா சென்னை சட்டமன்றத்தில் 14.07.1953 முதல் 27.07.1953 வரை 14 நாள்கள் நடைபெற்றது. அதில் பேசிய பெரும்பான்மையான தமிழகப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் முதலமைச்சர் இராசாசியின் ஆந்திர ஆதரவுப் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளனர். சட்டமன்ற விவாதங்கள் 1000 பக்கங்களுக்கு மேல் உள்ளது. **சென்னை சட்டமன்ற மேலவையிலும் 20.07.1953 முதல் 25.07.1953 வரை 5 நாட்கள் நடைபெற்றது. ம.பொ.சி. ஒருவரைத் தவிர வேறு யாரும் இந்த மசோதாவை வரவேற்கவில்லை. எண்பதுக்கும் மேற்பட்ட திருத்தங்கள் செய்யப்பட்டு, இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த உண்மையை**

**ம.பொ.சி.யோ, கோல்டன் சுப்பிரமணியமோ எழுதவில்லை.**

தில்லி நாடாளுமன்றத்திலும், ஆந்திரப் பிரிவினை மசோதா 13.08.1953 முதல் 27.08.1953 வரை 15 நாட்கள் நடைபெற்றது. 18.08.1953 அன்று நாடாளு மன்றத்தில் பேசிய திருக்குறள் முனுசாமி ''சென்னை மாகாண சட்ட மன்றத்தால் ஆந்திராவுக்குப் புதிய தலைநகரை உருவாக்க 2.30 கோடி கொடுக்க வேண்டும் என்ற விதி நிராகரிக்கப்பட்டது. ஆனால் இந்த மசோதாவில் அது சேர்க்கப்பட்டுள்ளது. இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். மேலும் ஆந்திரா பிரிந்து எஞ்சிய சென்னை மாகாணத்திற்குத் திராவிடநாடு (அ) தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டவேண்டும்'' என்று பேசினார். ஆந்திராவில் சேர்க்கப்பட்டுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்பதற்காக ஒரு எல்லை ஆணையம் (கமிஷன்) அமைக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். (நாடாளுமன்ற விவாதங்கள் பக். 1030 - 1034 நாள் 18.08.1953)

தஞ்சாவூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளருமான ஆர். வெங்கட்ராமன் ''ஆந்திராவுக்குப் புதிய தலைநகரை உருவாக்கச் சென்னை மாகாண அரசு 2.30 கோடிக் கொடுக்க வேண்டும் என்ற விதியை நீக்கவேண்டும் (அ) அதை ஒரு கோடியாகக் குறைக்க வேண்டும்'' என்று வாதிட்டார். (நாடாளுமன்ற விவாதக் குறிப்புகள் பக். 1630 நாள் 26.08.1953)

மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் தொண்டு வ. வீராசாமி, ஆந்திர உயர்நீதிமன்றத்தைச் சென்னை யில் இருந்து உடனே ஆந்திரப் பகுதிக்கு மாற்றவேண்டும் என்று பேசினார் நாடாளுமன்ற விவாதங்கள் பக். 1273 நாள் 22.08.1953)


திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவினாசி லிங்கம் செட்டியார், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வி. இராமசாமி, திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் நடேசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி உள்ளிட்டோர், தமிழகத்திற்கு ஆதரவாக வாதாடி உள்ளனர். **ஆந்திரா பிரிவினை தொடர்பான நாடாளுமன்ற விவாதங் கள் 1000 பக்கங்களுக்கு மேல் உள்ளது. இதைப் பற்றியெல்லாம் ம.பொ.சி. ஒருவரிகூட எங்குமே எழுத வில்லை. கோல்டன் சுப்பிரமணியமும் எழுதவில்லை. ஆந்திரப் பிரிவினை வடக்கெல்லைப் பிரச்சினை என்பது கே. விநாயகம், ம.பொ.சி. இராசாசி, போன்றவர்களோடு முடிந்துவிட்டதைப் போல வரலாற்றை இவர்கள் பதிவு செய்துள் ளார்கள்.**

**தமிழகத்தின் தெற்கெல்லைத் தொடர்பாகவும் சட்டமன்ற, நாடாளுமன்ற விவாதங்கள் 1000 பக்கங்களுக்கு மேல் உள்ளது. இன்று வரை எல்லைப் போராட்டங்களைப் பற்றி நூல் எழுதிய வர்கள் யாருமே முழுமையாக இவற்றை ஆராய்ந்து பார்த்து எழுத வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ம.பொ.சி. தனக்கு மட்டுமே பெருமை வரவேண்டும் என்ற வகையில் 'எனது போராட்டத்தை' எழுதி யுள்ளார்.**

**வடக்கெல்லைப் போராட்டத் தளபதி கே. விநாயகம் தான் அந்தப் பகுதி மக்களைத் திரட்டிப் போராட்டத் தளபதியாகத் திகழ்ந்தார். ம.பொ.சி. அவ்வப்போது, கூட்டத்தில் பேசுவதற்கு மட்டுமே சென்றார். வடக்கெல்லைப் போராட்டத்தில் ம.பொ.சி. பெரிய தியாகம் எதுவும் செய்துவிட வில்லை என்பதே உண்மை.**

- முற்றும்

## பேரா. ச.முத்துக்குமரன் படத்திறப்பு விழா





*தமிழ்வழிக் கல்வி இயக்கம் மற்றும் தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் தனித்தமிழ் மீட்பு நூற்றாண்டு விழா; மற்றும் முன்னாள் துணை வேந்தரும் தமிழ்வழிக் கல்வி ஆர்வலருமான பேரா ச. முத்துக்குமரன் படத்திறப்பு விழாக்கள் 14.5.2016 காலை 10 மணிக்கு, சென்னை அம்பத்தூர் பெரியார் - ஈ.வெ.ரா. நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை கல்வி வளாகத்தில் நடைபெற்றன.*

*ந.க. தமிழ்ச்சிற்பி, அ.சி. சின்னப்பா தமிழர் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். தோழர் நா. கந்தன் பாடல்களைப் பாடினார். தோழர்கள் வே. ஆனைமுத்து, புலவர் கி.த. பச்சையப்பன், மா. பூங்குன்றன், சிவ. காளிதாசு, காஞ்சி அமுதன், கரு. அண்ணாமலை, க.பா. பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர். த. மணிசேகரன் நன்றியுரையுடன் விழாக்கள் நிறைவடைந்தன.*

# புரோகிதரும் திதியும் : தம்பியின் சீற்றம் - அய்யரின் ஓட்டம்

புரோகிதர் : ஓய், சுப்பிரமணிய முதலியாரே! நாளைக்கு 8ஆம் நாள் உங்கப்பாவுக்கு திதி வருகிறது. திதியை அதிகாலையிலேயே முடித்து விட்டால் நன்றாய் இருக்கும். ஏன் என்றால், நான் அன்று காலை 10 மணிக்கு நாயக்கர் வீட்டுக்குப் போக வேண்டும். அங்கு கர்ணபூஷண முகூர்த்தம். அல்லாமலும் அதிகாலையில் திதி செய்வது மிகவும் விசேஷமானது, முதலியார்!

சரி சுவாமி, அப்படியே ஆகட்டும். தாங்கள் மாத்திரம் அதிகாலையில் வந்துவிடுங்கள். நாங்கள் ஸ்நானம் செய்துவிட்டு சாமக்கிரியைகளோடு தயாராய் இருக்கிறோம் (முதலியார் தன் மனைவியை அழைக்கிறார்). அடீ!

அண்ணியார் : (பெரிய வீட்டுப் பெண்களை அண்ணியார் என்று தான் கூப்பிடுவது) ஏனுங்கோ?

முதலியார் : சாமி சொன்னதைக் கேட்டாயா?

அண்ணியார் : ஆமா, நானும் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன்.

முதலியார் : இன்னைக்கு எட்டாம் நாள் ஞாபகமிருக்கட்டும். காலமே நேரமே ஸ்நானம் செய்துவிட்டு சாமிக்குக் கொடுக்கும் சாமான்கள் எல்லாம் தாராளமாய் ரெடியாய் வைத்து இருக்க வேண்டும்.

தம்பி : (பக்கத்தில் இதைக் கேட்டுக் கொண்டிருந்த முதலியார் மகன் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறவர்) என்னப்பா என்னமோ சொன்னீங்களே, என்னத்திற்குத் தாராளமாய் ரெடியாய் இருக்க வேண்டும்?

முதலியார் : உங்க தாத்தாவுக்கு எட்டாம் நாள் திதி. சாமி காலமே எங்கேயோ போகணுமாமா. அதற்காகக் காலையிலேயே எல்லாம் தயாராய் இருக்க வேண்டும் என்று சொன்னேன். காலம் பஞ்சகாலம். சாமிக்குத் தாராளமாய்க் கொடுப்பமே! அவர் ஒரு 2, 3 மாதத்துக்கு ஆவது சாப்பிடட்டும்.

தம்பி : அதற்கு 'இந்த' ஆசாமி (அய்யர்) என்னத்துக்கு வந்தாரு? எதற்காகக் கொடுக்கிறது? யாருக்குப் பஞ்சம்?

முதலியார் : அடே அவர் சாமிடா! அப்படி எல்லாம் சொல்லாதே! மரியாதையாய்ப் பேசு!

தம்பி : என்னப்பா கோவிலிலே இருக்கிறதும் சாமி! இந்தத் தடிராயனும் சாமியா? அப்படின்னாக்க கோயிலிலே இருக்கிற சாமிக்குத்தான் என்ன மரியாதை இருக்கிறது? ஒரு நாயை முதலியாரே, முதலியாரே என்று கூப்பிட்டால் நமக்குக் கோபம் வராதாப்பா? அதுபோல் இந்தப் பிச்சை எடுக்கிற மனுஷனை சாமிண்ணு கூப்பிட்டால், கோயிலில் இருக்கிற சாமி கோபித்துக் கொள்ளாதா?

**- சித்திர புத்திரன்**

முதலியார் : என்னடா, அதிகப்பிரசங்கிப் பயலே? இப்படி ஆய்விட்டாயே. இதெல்லாம் எங்கடா படிச்சே? இந்த சுயமரியாதைக்காரப் பயல்களோட சேர்ந்து கெட்டுப் போய் விட்டாப்லே இருக்கிறதே. மட்டு மரியாதை, மனுஷாள் கினுஷாள் ஒண்ணும் இல்லாமேப் போச்சே. இனிமேல் இப்படியெல்லாம் பேசினால், பார்த்துக்கோ அப்புறம் என்ன நடக்கும் என்று!

(- ''குடிஅரசு'', 27.11.1943)

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **பா. ரஞ்சித்குமார்** |
| பிறந்தநாள் | : | 03-08-1986 |
| கல்வித் தகுதி | : | B.E., (ECE) |
| ஆண்டு ஊதியம் | : | ரூபா 7 இலட்சம் |
| சொந்த ஊர் | : | முருக்கன்குடி, பெரம்பலூர் மாவட்டம். |
| தந்தை | : | வீ. பாலுசாமி |
| தாய் | : | பா. திரிபுரசுந்தரி |
| அண்ணன் | : | திருமணம் ஆனவர். |
| **எதிர்பார்ப்பு** | : | **பட்டம் பெற்ற, வேலையில் உள்ள மணமகள்** |
| தொடர்புக்கு | : | 9047385119, 9443647775 9791008437 |

## மணமகன் தேவை

சுயமரியாதைக் குடும்பம்; கல்வியாளர் நெ.து. சுந்தரவடிவேலு தலைமையில் பேராசிரியர் மா. நன்னன், முனைவர் பொற்கோ வாழ்த்துரையுடன் இல்லறம் ஏற்ற இணையரின் மகளுக்குத் தகுந்த மணமகன் தேவை.

பிறந்த நாள் : 06.11.1979
பணி : சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர்.
தந்தை : விசுவகர்மா, ஓய்வுபெற்ற கூட்டுறவுத் துறைத்தணிக்கை அலுவலர்.
தாய் : வன்னியர், உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர்.

தொடர்புக்கு :
**தந்தை : 9444607804**
**தாய் : 9840594270**

# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

## விற்பனைக்கு உரிய நூல்கள் விலைப்பட்டியல்

| | நூல் | ரூபா. |
|---|---|---|
| 1. | தமிழ்த்தேசத் தன்னுரிமை | 10.00 |
| 2. | தீண்டாமை-நால்வருணம் ஒழிப்போம் | 20.00 |
| 3. | வர்க்க ஒற்றுமை ஏற்பட வழி என்ன? | 15.00 |
| 4. | தந்தை பெரியாரின் இறுதிச் சொற்பொழிவு | 15.00 |
| 5. | பெரியார் கொள்கைகள் வெற்றிபெற பெரியார் தொண்டர்கள் செய்ய வேண்டியது என்ன? | 15.00 |
| 6. | Federalism in India in Peril (ஆங்கிலம்) | 60.00 |
| 7. | அண்ணல் அம்பேத்கரை அறிவோம் | 15.00 |
| 8. | பொதுவுடைமைத் தத்துவங்கள் | 20.00 |
| 9. | இந்தி ஆதிக்கம் ஒழிய வழிதான் என்ன? | 10.00 |
| 10. | இராசீவ்காந்தி படுகொலை : உண்மைச் சதிகாரர்களை உடனே பிடியுங்கள் | 10.00 |
| 11. | பார்ப்பான் மாறவில்லை! மாறமாட்டான்! சூத்திரனும், ஆதி சூத்திரனும் மாறிவிட்டான்! | 20.00 |
| 12. | இந்தியாவில் இராமராச்சியம் : அடித்தளமிட்டார் வாஜ்பேயி! கட்டமைக்கிறார் நரேந்திர மோடி | 40.00 |
| 13. | அபாயச் சங்கு - தந்தை பெரியார் | 30.00 |
| 14. | மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி அரசியல் : குறிக்கோள் விளக்கம் | 10.00 |
| 15. | Restructure India into a Real Socialist Secular Democratic Republic | 2.00 |
| 16. | பகுத்தறிவுக் கொள்கை எப்போது வெல்லும்? | 35.00 |
| 17. | அதிரடிச் சிந்தனையாளரின் ஆயுதங்கள் | 10.00 |
| 18. | தன்னுரிமைத் தமிழ்த்தேச எழுச்சிமுரசு | 140.00 |
| 19. | தந்தை பெரியார் மறைவுக்குப்பின் பெரியார் கொள்கைகளுக்குக் குழிதோண்டிய திராவிடர் கழகம்: அசைக்கமுடியாத வரலாற்று ஆவணச் சான்றுகளுடன் | 65.00 |
| 20. | Babaseheb Dr. B.R.Ambedkar - 116th Birthday Multi-Lingual Souvenir | 150.00 |
| 21. | Historic Speeches of Savants of the Justice Party | 90.00 |

# பெரியார்-நாகம்மை அறக்கட்டளை வெளியீடுகள்

## *விற்பனைக்கு உரிய நூல்கள் விலைப்பட்டியல்*

| | நூல் | ரூபா. |
|---|---|---|
| 1. | பணம் பிடுங்கிப் பார்ப்பனர் | 30.00 |
| 2. | பெரியார் உழைத்தார்! பெரியார் வென்றாரா? | 10.00 |
| 3. | கலையும் நாடகமும் - தந்தை பெரியார் | 10.00 |
| 4. | மேல்நாடும் கீழ்நாடும் - தந்தை பெரியார் | 05.00 |
| 5. | ஆதிச்சநல்லூர் சிறப்பு: எதிர்காலத் திட்டங்கள் | |
| 6. | Periyar E.V.Ramasamy : His Life and Mission (ஆங்கிலம்) | 50.00 |
| 7. | நல்லாசிரியர் ந.கணபதி வாழ்வும் பணியும் | 100.00 |
| 8. | தமிழ் தமிழ்நாடு தமிழர் பண்பாடு - தந்தை பெரியார் | 30.00 |
| 9. | பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் பதிப்பாசிரியர் முன்னுரை | 150.00 |
| 10. | நோபிள் கோவிந்தராசுலு வாழ்வும் பணியும் | 100.00 |
| 11. | **பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் 9,300 பக்கங்கள் - 20 தொகுதிகள் பரிசுப் பதிப்பு** | 5,800.00 |

# பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | **திருச்சி வே.ஆனைமுத்து கருத்துக் கருவூலம் 22 தொகுதிகளில்** பரிசுப் பதிப்பு | 6,000.00 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வஞ்சிக்கப்பட்டனர் : எப்படி? யாரால்? - கலசம் | 20.00 |
| 3. | மாமன்னன் இராசராசனுக்கு ஏன் வேண்டும் மணிமண்டபம்? | 10.00 |
| 4. | பெரியாரின் அயல்நாட்டுப் பயணக் குறிப்புகள் | 125.00 |
| 5. | நீதியா? நியாயமா? அரசியல் சமூக பொருளாதாரக் கட்டுரைகள் - மு.நாகநாதன் | 160.00 |
| 6. | பெரியாரும் சமதர்மமும் - நெ.து.சு. | 25.00 |
| 7. | இந்தியப் பொருளாதாரம் இருளில் ஒளி - மு.நாகநாதன் | 200.00 |
| 8. | தமிழ் ஜப்பானிய ஒப்பாய்வு - டாக்டர் பொற்கோ | 30.00 |
| 9. | பெரியார் சாதித்ததுதான் என்ன? | 100.00 |
| 10. | ஓவியர் புகழேந்தியின் அதிரும் கோடுகள் | 75.00 |
| 11. | மண்டல்குழு பரிந்துரைகள், அரசமைப்புச் சட்டம், உச்சநீதிமன்றத் தீர்ப்பு, அரசாணைகள் | 300.00 |
| 12. | தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு - கவிஞர் கருணானந்தம் | 400.00 |
| 13. | பெரியாரும் பிறநாட்டு நாத்திக அறிஞர்களும் - செங்குட்டுவன் | 100.00 |

**மொத்தம் ரூ.300க்கு நூல்கள் வாங்குவோர், 25% கழிவு போக, மீதிப்பணத்தைப் பணவிடையில் (M.O.) (அ) வங்கி முறியாக (Bank Draft) அனுப்புங்கள். நூல்களை, எங்கள் செலவில் விடுத்து வைப்போம்.**

முகவரி : **சிந்தனையாளன்,** எண்.2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர். டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53. தொடர்புக்கு : **9444804980**

# ஜஸ்டிஸ் கட்சியின் பூர்வ ஞானம்

பிராமணரல்லாதார் மாபெரும் மக்கள் முன்னேற்றத்தைக் கருதி, ஆதியில் டாக்டர் நாயரும், சர். தியாகராயரும் ஜஸ்டிஸ் இயக்கத்தை உற்பவித்தார்களென்பது உலகமறிந்த விஷயம். அவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம், சமுதாயத்தில் சமத்துவமும், சரிசமமான உரிமையும் எல்லா வகுப்பினருக்கும் இருக்க வேண்டிய நீதி வழங்க வேண்டுமென்பதும், தாழ்ந்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற இலக்கியத்தையே எடுத்தெறிய வேண்டுமென்பதுமே. இவைதான் அவ்வியக்கத்தின் அடிப்படையான தத்துவங்களாகும். நாயரும், தியாகராயரும் அவ்வடிப்படையான கொள்கைகளுக்குச் சிறிதும் மாறுபாடின்றி வேலை செய்தும் வந்தார்கள். கஷ்டப்படும் மக்களும் ஒருவாறு கண் விழிப்படைந்தார்கள். மகாத்மா காந்தி நிர்மாணத் திட்டங்களும், ஜஸ்டிஸ் கொள்கைக்குப் பெரும்பாலும் ஒத்தேயிருந்தன. ஆனது பற்றி பிராமணரல்லாத பெருமக்கள் பெரும்பாலோர் ஜஸ்டிஸ் இயக்கத்தைத் தழுவினார்கள். நாயரும், தியாகராயரும் காலஞ்சென்ற உடனே அவ்வழி வந்த தலைவர்கள்பால் அரசியல் பளு அழுத்தியவுடன் சிறிது மாறுதலுண்டாகியது. எந்த மேலான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதோ, அதனைப்பற்றி முக்கிய கவனம் செலுத்தாமல், தவறிப்போய்விட்டது; இதனாலே தேச மக்கள் பேராதரவும் போய்விட்டதென்ற உண்மையை மறைக்க முடியாது.

ஒரு இயக்கம் வலுப்பட வேண்டுமானால் அதற்கு வேண்டிய சக்தியை சாதாரண ஜனங்களிடமிருந்தே பெறல் வேண்டும்; பெற்ற பின்பும் அத்தொடர்பு விட்டுப் போகாமல் தொட்டுக் கொண்டே நிற்கவும் வேண்டும்; இத்தொடர்பில்லா எவ்வியக்கமும் ஆட்டங்கொடுத்துத்தான் போகுமென்பதும் உண்மையே. இத்தத்துவத்தை ஜஸ்டிஸ் கட்சி சிறிது காலம் மறந்து மீண்டும் உணர்ந்திருப்பதாக அவர்கள் வார்த்தைகளிலிருந்து வெளிவந்துவிட்டது.

சென்னை சௌந்திரிய மஹாலில் கூடிய பிராமணரல்லாதார் மாபெருங் கழகத்தில் நிகழ்த்தப்பெற்ற முக்கியத் தலைவர்கள் சொற்பொழிவுகளில் ஜஸ்டிஸ் கட்சியின் பூர்வ ஞானம் வெளியாயிருக்கிறது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

பார்ப்பனரல்லாத பெருங்கிழவர் ஸ்ரீமான் பச்சையப்ப முதலியார் கல்லூரியில் ஆதித்திராவிட மக்களை விலக்கி வைத்திருக்கும் கொடுமையின் கூற்றை எதிர்த்துக் கோர்ட்டின் மூலம் தீர்ப்பு வாங்குவதற்கு பனகல் அரசர் பணஉதவி செய்ய முன் வந்துள்ளாரென்ற சமாச்சாரங் கேட்டு யார் தான் சந்தோஷமடையாதிருக்க முடியும்?

சர். ஏ.பி. பாத்ரோ, நாம் இயக்கத்தின் அடிப்படையான நோக்கத்தைக் கருதாமல் ராஜீயத்துறையில் அதிகக் கவனம் செலுத்தி விட்டோமென்றும், அது வருந்தத்தக்கதென்றும், சமுதாய முன்னேற்றமே ராஜீய முன்னேற்றத்திற்கு வழியாகுமென்றும், தாழ்த்தப்பட்டவரென்றும், தீண்டத்தகாதவரென்றும் கூறப்படும் கொடிய வழக்கங்களை உடைத்தெறிய வேண்டுமென்றும், பொது ஸ்தாபனங்களில் அவ்வகுப்பினரைச் சேர்த்துக்கொள்ள மறுப்பது மிகவும் வருந்தத்தக்கதென்றும், தென்னிந்தியாவின் சமுதாய இயல்பு மற்றப் பாகங்களைவிட மிகுதியும் மாறுபட்டிருக்கிறதென்றும், மக்களுக்குள் உயர்வு, தாழ்வும் ஏகபோக உரிமைக் குணமும், உடைத்தெறியப்பட்டு சமத்துவமும், சகோதரத்துவமும் தழைத்தோங்கச் செய்யப்பட்டாலன்றி வகுப்பு சம்பந்தமான நீதி வழங்கப்பட முடியாது என்றும், 1929இல் வரும் ராயல் கமிஷன் முன்பு கிராமவாசிகளின் நிலைமையிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழ்க்கையிலும் அனுதாபங் காட்டி உதவி செய்யக் கூடுமென்பதை விளக்க வேண்டுமென்றும், இன்னும் பல தெளிவான விஷயங்களையும் வெளியிட்டிருக்கிறார். இதுவே நாயர், தியாகராயர் கொள்கை; இதுவே மகாத்மா காந்தி கொள்கையும், தேசபந்து தாஸ் கொள்கையுமென்று கூடச் சொல்லலாம். **ஆகையால் ஜஸ்டிஸ் கட்சியின் பூர்வஞானம் பிரசவ ஞானமாய் மாறிப்போகாமல் அவர்கள் வேலையைத் துரிதமாய்ச் செய்வார்களென்று நம்புகிறோம்.**

தீண்டாமை என்ற கொடுமை அறவே ஒழிய வேண்டும்; சில ஆலயங்களில் சில வகுப்பினர் செல்லக் கூடாதென்ற வழக்கம் தொலைய வேண்டும். இவ்விரண்டுந்தான் தென்னிந்தியாவில் முக்கியமான குறைகள். இவை தீர்ந்தால் மற்றவைகளை மாசறக் களைந்து விடலாம். இவை சட்ட மூலமாகவோ, சமுதாயக் கூட்டுறவாலோ, எது சாத்தியமோ அதன் வழி நிவர்த்தி செய்ய ஜஸ்டிஸ் தலைவர்கள் வேலை செய்யத் தயங்குவார்களானால், அவர்கள் அடைந்த தோல்வியை மீண்டும் உயிர்ப்பிக்கவே வாய்ஞானம் படித்தார்களென்ற அபவாதத்திற்கிடமுண்டாகும். "நியாயமான கட்சி"யென்பதை நிலைநாட்ட வேண்டுமானால், தலைவர்களாவது திரிகரண சுத்தியுடையவர்களாயிருக்க வேண்டுமன்றோ? செய்தலரிதென்றால், எளிதில் ஏன் சொல்ல வேண்டுமென்ற கேள்விக்கிடமுண்டாகும். தலைவர்கள் முயற்சிக்கேற்ப ஜஸ்டிஸ், திராவிடன், குடிஅரசு முதலிய பத்திரிகைகளும் ஒத்துழைக்க வேண்டும்; சமயோசிதமான ஆலோசனையுங்கூற வேண்டும்; தென்னாட்டில் தீண்டாமை, ஆலயப் பிரவேசம் முதலிய சீர்திருத்தங்களைப் பற்றி நாம் பன்முறை எழுதி திராவிடன், குடிஅரசு முதலிய பத்திரிகைகளின் அபிப்பிராயங்களை வெளியிடக் கேட்டும், இன்னும் அவைகள் மௌனஞ்சாதிக்கின்றன. ஸர். பாத்ரோ, கனம் பனகல் அரசர் முதலிய தலைவர்கள் கருத்தும் திருத்தமாய் வெளியிடப்பட்டுவிட்டதால், இனியேனும் தத்தம் கருத்துகளைப் பொருத்தமாய்த் தெரிவிக்குமாவென்று பார்ப்போம்.

("நாடார்குலமித்திரன்",
தலையங்கம்-18-4-1927)

# மறு நிமிஷத்தில் சுயராஜ்யம்

நம் பாரத நாட்டு மக்களுக்கு சுயராஜ்யம் என்னும் திருமந்திரத்தை முதலாவது உபதேசம் பண்ணியவர் நம் பாரத திலகம் தாதாபாய் நௌரோஜியவர்களே. பாலகங்காதர திலகர் காலத்தில் படித்தவருள்ளத்தில் மட்டும் அத்திருமந்திரம் தடிப்பேறிக் கொண்டிருந்தது. என்றாலும் அவ்விரு கிழவர்களும் சுயராஜ்யத்திற்கு எல்லை குறிப்பிடவே இல்லை. மகாத்மா காந்திய வர்கள் சுயராஜ்யம் எனும் திருமந்திரத்தைக் கிராமாந் திரங்களுக்கே அதிகமாக உபதேசித்தார். அவருடைய சர்வ சீடர்களுடைய கவனமும் கிராமங்களின் மேலேயே நின்றன.

இவ்வாறின்னும் நான் சொன்னபடி கேட்டு நடப்பீர்களாகில் ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் என்றார் மகாத்மா காந்தி. ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் வந்தால் மறு நிமிஷத்தில் பிராமண ஆட்சி செத்துவிடுமென்று பயந்த ஓர் கூட்டத்தார், மகாத்மா காந்தி இயக்கத்தை சாகவைக்கச் சாதகமாயிருந்தார்கள்; இருக்கிறார்கள். இதனாலே மிக நெருங்கிவந்த சுயராஜ்யம் வெகு தூரத்திற்குப்போய் மறைந்துவிட்டது.

இப்போது தேச மகாசபைத் தலைவர் மகானு பாவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் சுயராஜ்யத் திருமந் திரத்தை வெகுசுலபமாய்ச் சொல்லிவிட்டார். சென்னை யிலிருந்து அஸ்ஸாமிற்குச் சென்றார்; அஸ்ஸாமி லிருந்து சென்னைக்கு வந்தார்; சென்னையிலிருந்து டில்லிக்குப் போனார். டில்லியிலிருந்து சென்னைக்கு வந்தார். திலகர் கட்டத்தில் கூட்டம் கூட்டினார். இனிச் செய்ய வேண்டியதென்னவென்றாலோசித்தார். காங்கிரஸ் நன்கு நடைபெற்று முடிந்தால் நமக்கு மறு நிமிஷத்தில் சுயராஜ்யம் வருமென்றுரைத்தார். கைதட்டிக் கரகோஷமாய் விட்டது. வந்துவிட்டது சுயராஜ்யம்.

கவர்ன்மெண்ட் சம்பந்தப்பட்ட எல்லாப் பட்டம் பதவிகளை விட்டொழித்தலும், கதர் கட்டலும், நூல் நூற்பதும், மது விலக்குவதும், தீண்டாமை தீர்ப்பதுமே காங்கிரஸ் வேலை என்றும்; இவையெல்லாம் சரிவர நடந்தால் ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் என்று சொன்னார் மகாத்மா காந்தி. இவைகளில் எதற்காவது லாயக்குள்ளவராக இப்போதேனும் இருக்கிறாரா ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார்? மறு நிமிஷத்தில் சுயராஜ்யம் வருமென்பதற்கு என்ன ஆதாரமிருக் கிறது? சட்டசபைகளால் ஒரு பிரயோசனமுமில் லையென்று முதலில் தெளிவாய்ச் சொல்லிவிட்டு, சட்ட சபையைவிட்டு விலகாமலிருந்து கொண்டே நான் சாகு முன்னர் தேசத்திற்கேதேனும் கூடுமான கிஞ் சித்துச் சேவை செய்ய நீங்கள் மறுபடி உதவிபுரிய வேண்டுமென்று மறுபடியும் உங்களை நான் கொஞ் சிக் கேட்டுக் கொள்கிறேன். இதன் அர்த்தமென்ன? தேசத்திற்குச் சாதகமான தீண்டாமை விலக்கு, மது விலக்கு, கதர் முதலிய திட்டங்களை நிறைவேற்ற முன்வரமாட்டேன்; தாஸ் திட்டமான கிராம நிர்மான வேலைக்கும் போகமாட்டேன்; சட்டசபை மட்டமா னாலும் திட்டமாய் விடமாட்டேன்; நீங்களெல்லோரும் என் வாயையே பார்த்துக் கொண்டே எனக்குதவி செய்துகொண்டேயிருக்க வேண்டுமென்பதா? பிரிட்டீஷ் ஆட்சியும் பிராமண ஆட்சியும் நிரந்தரமாய் என்றும் நின்று நிலவ வேண்டுமென்று கேட்டுக் கொள்வதா? வாசகர்களே கவனித்துக் கொள்ளட்டும்.

நாமிதுகாறும் சட்டசபையிலிருந்த அனுபோகத் தினால் காங்கிரசைப் பார்க்கிலும் சட்டசபை பெரிதல்ல வென்று சொல்லியவர், சென்னைச் சட்டசபையில் இரட்டையாட்சிக்கு பாதபூசை செய்து கொண்டிருக்கும் தமது சகாக்களைப் பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லவில்லை. தன்னையும் கதரையும் தீண்டா மையையும் பற்றிப் பேசவேயில்லை. "சட்டசபை மட்டந்தான் ஆயினும் அதில் நான் ஒட்டிக்கொண்டே யிருக்கிறேன். நீங்கள் எனக்குதவியாகவே இருங்க ளென்று" பொருள்படப் பேசிவிட்டார். சுயராஜ்யக் கட்சி யின் வேஷம் வர வர வெளிவருவதைக் கண்டேனும் தேச மக்கள் தெளிவடைவார்களாக!

**(- "நாடார் குல மித்திரன்", 18-4-1927)**

## தன்மான மறவர் தோழர் இராம. நாராயணன் மறைந்தார்

மாணவப் பருவம் முதல் தன்மானக் கொள்கை யாளராக வாழ்ந்தவரும்; தமிழகத் தலைமைச் செயலகத்தில் அலுவலராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற வரும், மா.பெ.பொ.க. ஆதரவாளரும் ஆன தோழர் **இராம. நாராயணன்** அவர்கள், தம் 68ஆம் அகவையில், சென்னை மருத்துவமனை யில் நீண்டநாள் மருத்துவம் செய்துகொண்ட நிலை யில், 10.4.2016 ஞாயிறு அன்று மறைவுற்றார் என்பதை அறிவிக்க மிகவும் வருந்துகிறோம். அன் னாரின் இழப்பால் வருந்தும் அவர்தம் குடும்பத்தார், தோழர்கள் ஆகி யோர்க்கு "சிந்தனையாளன்" ஆசிரியர் குழு சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*- ஆசிரியர் குழு*

# விக்கிரக வணக்கமும் மனிதன் தலைவிதியும்

திருநெல்வேலி பி.திரிகூடசுந்தரம் பிள்ளை அவர்கள் ரிவோல்ட் பத்திரிகையில் எழுதியதைத் தழுவி மொழிபெயர்த்தது.

கர்மத்தைப் பற்றியும் விக்கிரக ஆராதனையைப் பற்றியும் என்னதான் தத்துவார்த்தம் சொல்லுவதாயிருந்தாலும், இந்த இரண்டும் நமது தேசத்தின் முன்னேற்றத்திற்கு முக்கியமான முட்டுக்கட்டை யாயிருந்து வந்திருக்கின்றன. கர்மம் என்பது மனி தனைத் தன் முயற்சியோடு வாழ்க்கையில் பிரவேசிப் பதையே தடுத்து விடுகின்றது. அதோடு மாத்திரமல் லாமல் மனிதன் என்ன தான் முயற்சி செய்தாலும் நடப்பது நடந்தே தான் தீரும் என்கின்ற ஒரு எண் ணத்தை உண்டாக்கி மனிதனை சோம்பேறி நிலை யிலிருந்து அசைய விடாமல் செய்து விடுகின்றது.

விக்கிரக ஆராதனை மனிதன் அக்கிரமங்கள் செய்வதற்கு முதற்காரணமாயிருக்கின்றது. அன்றியும் மக்களில் படித்தவர்களும் படிக்காதவர்களும் எல்லோரும் ஒரே மாதிரியாகவே தாங்கள் என்னதான் அக்கிரமம் செய்தாலும் விக்கிரகங்களுக்கு வேண்டிய பூஜை ஆராதனை அபிஷேகம் உற்சவம் முதலியவைகளைச் செய்துவிட்டால் சகல குற்றங்களும் மன்னிக்கப்பட்டு என்றைக்கும் சவுக்கியமாக இருக்கலாம் என்கின்ற எண்ணம் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

நம்ம ஜனங்கள் தங்களுக்கு என்ன கஷ்டம் நேர்ந்தாலும் அவர்கள் தங்கள் முன் ஜென்மத்தின் கர்மம் என்று நினைத்து அதிலிருந்து தப்புவிக்க விக்கிரகங்களை வணங்குகிறார்கள். அதன் மூலம் கடவுள் தயவைத்தேடி கர்மத்தை மாற்றிக் கொள்ள முயற்சிக்கின்றார்கள். தங்களுக்கு ஏதாவது வியாதி வந்தாலுங்கூட அவைகள் தாங்கள் சுகாதார முறையைக் கவனிக்காததால் வந்தவை என்று எண்ணாமலும் இனி மேலாவது சுகாதார முறையைக் கைக்கொள்ளலாம் என்பதில் சிறிதும் கவலை எடுத்துக் கொள்ளாமலும் போன ஜன்மத்தில் தாங்கள் செய்த கர்மத்தின் பலன் என்றே நினைத்துவிடுகின்றார்கள்.

இந்த மாதிரி கர்மத்தை ஒப்புக்கொள்ளும்படியான கொடுமையான கொள்கையானது நமது அறிவையும் முயற்சியையும் கெடுப்பதோடு, அதனால் ஏற்படும் கஷ்டத்திலிருந்து விலகும் படியான மார்க்கத்தையும் அடைந்து வெறும் கடவுள் பாதத்தையே நம்பி சுக வாழ்வு முறைகளைக் கையாள முடியாமல் செய்து விடுகின்றது.

உதாரணமாக ஒரு ஊரில் காலரா ஏற்பட்டு விட்டதாக வைத்துக் கொள்வோம். காலரா என்கின்ற விஷபேதி வியாதி தண்ணீரிலிருந்து உண்டாகும் விஷப் பூச்சிகளால் உண்டாகின்றது என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம். எங்கெங்கு தண்ணீரைச் சுத்தமாக வைத்திருக்கக்கூடிய முறைகள் போதுமானபடி கையாளப்பட்டு வருகின்றதோ அங்கு காலரா வருவதில்லை. இதுவே சென்ற 25 வருஷ காலமாக இங்கிலாந்தின் அனுபவமாகவும் இருந்து வருகின்றது. ஆனால் நமது ஜனங்களுக்கு மாத்திரம் இந்த விஷயங்கள் அறிவிக்கப்படுவதுமில்லை; அறிவிக்கக் கவலை எடுத்துக் கொள்வதுமில்லை.

அதுமாத்திரமல்லாமல், இந்த உண்மையான விஷயங்களை அவர்கள் கவனத்துக்கு யாராவது கொண்டு வந்தாலும்கூட அவற்றை அவர்கள் அலட்சியமாய்க் கருதிப் பரிகாசம் செய்வதோடு கெட்ட தண்ணீர் சாப்பிடுபவர்கள் எல்லோருமா செத்துப் போகின்றார்கள். விதிமூண்டவர்கள் தானே சாகிறார்கள் என்று விதியில் தங்களுக்கு உள்ள நம்பிக்கையைப் பற்றி அந்த சமயம் பெருமை பேசிக்கொள்ளுகின்றார்கள். எம்.ஏ., பி.ஏ., பி.எல். பாஸ் செய்தால் அதிகமான 'பகுத்தறிவாளிகள்' என்று சொல்லும்படியான படித்த கூட்டத்தார்களும்கூட வியாதிகளை நீக்குவதற்கு மருந்துகளிலும் சுகாதார விதிகளிலும் நம்பிக்கை வைக்காமல் கடவுளிடமே நம்பிக்கை வைத்து இருக்கின்றார்கள்.

மேற்குலத்தார் என்று சொல்லப்படுகின்றவர்களும் கூட எந்தவிதமான வியாதிகளுக்கும் தங்களது முன் ஜன்ம கர்மத்தின் பலன் என்றே சொல்லிக் கொண்டு அவ்வியாதிகளைப் போக்குவதற்கு விருந்து, உற்சவம், மேளம், வேடிக்கை முதலானவைகள் செய்வதன் மூலம் கடவுளுக்கு இலஞ்சம் கொடுத்து மாற்ற முடியாத கர்ம பலனை அவரால் மாற்றச் செய்து தப்பித்துக் கொள்ள முயலுகின்றார்கள். மனிதர்கள் பொதுவாகவே, தலைவிதியை மீறி எவ்வளவு வேண்டுமானாலும் தப்பிதம் செய்யலாம் என்றும் அதனால் வரும்படியான ஆபத்திற்குப் பயப்பட வேண்டியதுமில்லை என்றும் ஆனாலும் நம் முன்னோர்கள் நடந்து வந்த பழக்கப்படியும் அவர்களது வாக்கியப்படியும் கடவுளுக்கு ஏதாவது சிறு இலஞ்சம் கொடுத்துவிட்டால் போதுமானது என்றும் அதனாலேயே கடவுளின் முழு ஆசிர்வாதமும் தங்களுக்குக் கிடைத்து விடுமென்றும் என்ன செய்தாலும் சாவு கூட கிட்ட நெருங்காதென்றும் கருதியிருக்கிறார்கள்.

கீழ்த்தர மக்கள் என்று சொல்லப்படுபவர்களும் இது போலவே தொத்து வியாதி முதலிய நோய்களுக்குத் தங்கள் கிராமத்திலுள்ள கிராம தேவதைகளின் இரத்த வெறியினால் ஏற்பட்ட கோபம்தான் காரணமென்று கருதி அதைத் திருப்தி செய்து சாந்தப்படுத்த பலி, மாமிசம், கள்ளு, சாராயம் முதலியவைகள் கொடுத்து வியாதிகளிலிருந்து தப்ப முயற்சிக்கிறார்கள்.

இதைப் பார்க்கின்ற மேல் குலத்தார்கள் என்பவர்கள் கீழ்க்குலத்தார்களை அவர்களின் இச்செய்கைகளுக்காக முட்டாள்கள் என்றும் காட்டுமிராண்டிகள் என்றும் கருதுவதில் மாத்திரம் குறைவில்லை. ஆனாலும் உண்மையிலேயே இவ் விஷயத்தில் மேல்குலத்தார் என்பவர்களுக்கும் கீழ்க்குலத்தார் என்பவர்களுக்கும் யாதொரு வித்தி யாசமும் இல்லை என்பதே நமது அபிப்பிராயம்.

**ஆகையினால் எனது அபிப்பிராயம் என்ன வென்றால், இந்தியர்களாகிய நாம் சமூக இயல், அரசியல், பொருளாதார இயல் ஆகியவைகளில் ஏதாவது முற்போக்கடைய வேண்டுமானால் மனிதத்தன்மையையே அடியோடு அழிக்கத் தக்கனதாக மேற்கண்ட இரண்டு விஷயங்களை யும் அதாவது விக்கிரகங்களை வணங்குவது என்கின்ற கொள்கையையும்; தலைவிதி கர்ம பலன், முன்ஜென்மத்தின் வரம், ஊழ்வினை என் பவைகள் போன்ற நம்பிக்கையையும் அடியோடு ஒழித்தாக வேண்டும் என்பதேயாகும். எனவே, “ரிவோல்ட்” பத்திரிகை இந்த விஷயத்தில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமாய் எதிர்பார்க் கின்றேன். இதுவே சுயமரியாதை இயக்கத்தினுடை யவும் முக்கிய கடமை என்று கருதுகின்றேன்.**

**மனிதன் தன்னுடைய மனிதத் தன்மைக்கு அதாவது அற்புதமான மனித சக்திக்கு, மதிப்புக் கொடுக்கும்படியாய்க் கற்பிக்கப்பட வேண்டும். முன் நாம் செய்த கர்ம பலனை நாமே அடைய வேண்டும் என்பது உண்மையானால், அதை அழித்துக் கொள்ளும் சக்தியும் நம்மிடம் உண்டு. கர்மம் என்கின்ற உணர்ச் சியை அழிக்கும் காரியத்தை நமது முயற்சியால்தான் நாம் செய்துகொள்ள முடியுமே தவிர, நம்முடைய தல்லாத வேறு எந்த சக்தியினாலும் திருமூர்த்தி என்பவர்களினுடைய சக்தியானாலும்கூட ஒன்றுமே செய்துவிட முடியாது என்பதையும் உணர வேண்டும். “தீமைகளோடு நாமே தான் போர் புரிந்தாக வேண் டும்; நம்மாலேயே அவைகளை வெல்லவும் முடியும்” என்ற மோதி என்கின்ற ஆங்கிலக் கவி வாக்கே நமது ஞாபகக் குறிப்பு வார்த்தையாக இருக்க வேண்டும்.**

(- “குடிஅரசு”, 10-02-1929)

## சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத் துறை நடத்திய பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் பன்முகம் பங்களிப்பு மற்றும் பேராசிரியர் லெ.ப.கரு.இராமநாதன்

### அவர்களின் 101ஆவது பிறந்தநாள் விழா

அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தராகவும் (பொறுப்பு) மற்றும் தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்று 101ஆவது பிறந்த நாள் கண்டு, நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழ் வித்தகர் பண்டிதமணி லெ.ப.கரு இராமநாதன் செட்டியார் அவர்களின் பிறந்த நாள் விழா 29.4.2016 வெள்ளிக்கிழமை அன்று சென்னைப் பல்கலைக்கழகப் பவள விழாக் கலையரங் கில் சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர் பொற்கோ அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தொடக்கத்தில் விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரையும் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் ஒப்பிலா. மதிவாணன் வரவேற்று உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து தலைமையேற்று உரையாற்றிய டாக்டர் பொற்கோ அவர்கள், பேராசிரியர் அவர்கள் ஆங்கிலம் மேலோங்கி இருந்த 1945 காலகட்டத்தில் தமிழுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் ஆக்கப்பூர்வ மாக செய்த அரும்பணிகளை அடுக்கடுக்காக எடுத்து விவரித்தார்.

ஐயா முத்தமிழ் வித்தகரின் மாணவர்கள் புலவர் பாண்டியன் அவர்களும், திரு. தி.வ.மெய்கண்டார் அவர்களும், பேராசிரியரின் சிறப்புகளை விவரித்து, சுருக்கமாகப் பேசினர்.

நிறைவாகப் பேசிய பேராசிரியர் பண்டிதமணி லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் பாராட் டுகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களின் பன்முகப் பங்களிப்பு என்னும் பொருள் பற்றி விளக்கமாக உரையாற்றினார்.

**நன்றியுரை ஆற்றிய முனைவர் இரகுராமன் அவர்கள், “101ஆவது வயதில் சென்னைப் பல் கலைக்கழகத்தில் உரையாற்றிய பெருமைக் குரிய முதல்வர் ஐயா முத்தமிழ் வித்தகர் அவர் கள் தான்” என்று குறிப்பிட்டார்.**

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பேராசிரியர் அவர்களும், ஆய்வாளர்களும், மாணவியர் மாணவர் களும் பெருமளவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

10.30 மணியளவில் தொடங்கிய கூட்டம் 12.30 மணியளவில் நிறைவுபெற்றது.

- **இளந்தமிழன்,** மே 2016

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



### இரா. சுரேந்தர் - பா. சுபா



திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், ஆலம் பாக்கம் ஊரைச் சேர்ந்த திருச்சி சுப்பிரமணியபுரத்தில் வசித்துவரும் வ. இராசேந்திரன்-இரா. சரசுவதி இணையரின் மகன் இரா. சுரேந்தருக்கும்; திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், எரகுடி ஊரைச் சார்ந்த, திருச்சி தீரன் மாநகரில் வசித்துவரும் பா. சாந்தி-மறைந்த மு. பாலசுந்தரம் இணையரின் மகள் பா. சுபாவுக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா, எவ்விதச் சடங்குகளும் இன்றி, 15.5.2016 ஞாயிறு காலை 10 மணிக்கு திருச்சி, புதுக்கோட்டை நெடுஞ்சாலை மாத்தூர் ரவுண்டானா அருகில் உள்ள ஆர்.ஏ.ஆர். திருமண மண்டபத்தில், வாலாசா வல்லவன் தலைமை யில் நடைபெற்றது. வ.லோகநாதன் வரவேற்புரை யாற்றினார். புலவர் கோ.சந்திரசேகர், கி.இராமஜெயம், இரா.மனோகர், கருணாகரன், மா.ஆறுமுகம், பயிசுபாஷா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் இருவரும் நன்றியுரை நவின்றனர். பகல் 12.30 மணிக்கு விழா நிறைவடைந்தது. சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### காஞ்சி கோபாலகிருட்டிணன்-செந்தாமரை வாழ்க்கை ஒப்பந்த வெள்ளி விழா

1991, சூன் மாதம் 9ஆம் நாள் (09.06.1991) காஞ்சிபுரம் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத் தில் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் தலை மையில் எனது பெற்றோர்கள்-காஞ்சிபுரம் மா.பெ.பொ. கட்சி தோழர் தீ.கோபாலகிருட்டிணன்-வே.ஆ. செந்தாமரை இணையர்க்கு வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க்கை ஒப்பந்த விழாவின் 25ஆம் ஆண்டு நிறைவு வெள்ளி விழாவை முன்னிட்டும் அவர்களின் மகன் கோ.விவேக் ஆந்திரா வங்கியில் பணியில் சேர்ந்ததை முன்னிட்டும் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500/- வழங்கி மகிழ்கின்றேன்.

### கலைவாணன் - நித்தியா

பெரிய காஞ்சிபுரம் வெள்ளக்குளம் தெருவில் வாழ்ந்துவரும் கு. இராசா-மலர்க்கொடி இணையரின் மகன் இரா. கலைவாணன் (எ) ஜெகனுக்கும், சின்ன காஞ்சிபுரம் எண்.7/2, நைனா தெருவில் வாழ்ந்து வரும் இர. உலகநாதன்-தமிழ்ச்செல்வி ஆகியோரின் மகள் உ. நித்தியாவுக்கும் தமிழ்த் திருமணம் 16.5.2016 திங்கள் காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதிசைவ வேளாளர் திருமணக் கூடத்தில் சிறப்புடன் நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## இந்தியாவின் கருப்புப் பணம் ரூ.12 இலட்சம் கோடி?

சர்வதேச அமைப்பில் வரி ஏய்ப்பு மற்றும் பணம் பதுக்கல் பற்றி அண்மையில் இத்தாலியின் மத்திய வங்கி புதிய ஆய்வறிக்கையை வெளி யிட்டுள்ளது. இந்த ஆய்வை 2013இல் சர்வதேசச் செலாவணி நிதியம் மற்றும் சர்வதேசத் தீர்வு வங்கி (Bank of International Settlements) வெளியிட்ட புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு மூன்று பொருளாதார அறிஞர்கள் மேற்கொண்ட னர்.

2013ஆம் ஆண்டின் அறிக்கைப்படி சர்வதேச அளவில் பணம் பதுக்கும் நடவடிக்கைகளில் இந்தி யாவின் பங்கு 2.5 விழுக்காடாக உள்ளது. அதா வது 15,200 கோடி டாலர் முதல் 18,100 கோடி டாலர்களாக உள்ளது. இது இந்திய மதிப்பில் ரூ.8.9 இலட்சம் கோடி முதல் ரூ.12 இலட்சம் கோடியாகும். பங்குகள், கடன் பத்திரங்கள் மற்றும் வங்கி வைப்பு கள் மூலம் பணப் பதுக்கல் நடக்கிறது.

உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சியிலிருந்து பணம் மறைக்கப்படுதல், நாட்டில் அறிவிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நிகராக மறைக்கப்படும் சொத்துகள் என இரண்டு விஷயங்களின் அடிப்படையில் இந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்படி மறைக்கப்படும் சொத்துக்களின் மதிப்பு சர்வதேச அளவில் ரூபாய் மதிப்பில் 33,000 கோடியாகும். இவ்வளவு பணத் தைப் பதுக்க அனுமதித்துவிட்டுத் தான் சில நூறு கோடி கருப்புப் பணத்தை மீட்டதை விளம்பரப் படுத்தி மக்களை ஏமாற்றுகின்றனர் அரசியல்வாதி கள்.

(- 'உண்மை' இதழ், மே 1-15, 2016)



# சுயமரியாதைச் சுடர் வேலூர் வெ.முனிரத்தினம்-முனியம்மாள் மகள் மண்டோதரி மாரடைப்பால் மறைந்தார்!

வேலூரில், ‘‘பால்காரர்’’ என்றால் வெ.முனிரத்தினம். அவர்கள் தான் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் கொண்ட ஒரே தலைவர் தந்தை பெரியார்தாம்.

வெ.முனிரத்தினம், 1940 முதல் சுயமரியாதைக் காரர். அதிகம் படிக்காதவர்; ஆனால் கூரிய சுய சிந்தனை உள்ளவர்.

வேலூரில் நகரமன்ற மண்டபத்தில் 1978 இல் மா.பெ.பொ.க. தொடங்கப்பட்டது. அன்று தொட்டு மா.பெ.பொ.க.வுக்கு அவரும் அவருடைய குடும்பத்தாரும் பல வடிவங்களில் ஆக்கம் சேர்த்தனர்.

வெ.முனிரத்தினம் ஓய்வறியாத உழைப்பாளர்; மிதிவண்டியிலேயே வேலூரை வலம் வருவார். வருந்தி உழைத்து செல்வம் சேர்த்து ஒருமாடி வீட்டை 1979இல் சமைத்தார். அவ்வில்லத்தைத் திறந்து வைக்க என்னை அழைத்தார்.

1986 முதல், தம் நான்கு மக்களின் திருமணங்களுக்கும் என்னை விரும்பி அழைத்தார்.

1986 இல் மூத்தமகள் மண்டோதரி-பாரிவள்ளல் திருமணத்தை, பேராசிரியர் மு.நாகநாதன் தலைமையில், நான் நடத்தி வைத்தேன். 1991 இல் மூத்த மகன் சுகுமார்-திலகவதி திருமணம்; 1993இல் இளைய மகள் மாதவி-ஆ.அரி திருமணம்; 1995 இல் இளைய மகன் ரமேஷ்-மகேஸ்வரி திருமணம் எல்லாவற்றையும் மகிழ்ச்சி பொங்க நான் நடத்தி வைத்தேன்.

தம் மகன்கள், மகள்கள் ஆகிய நால்வருக்கும் உயர்கல்வியைத் தருவதில் முனிரத்தினம்-முனியம்மாள் இருவரும் குறியாக இருந்தனர்.

எளிய கல்வி அறிவே பெற்றிருந்த அவர், ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் பெரியார் நூல்களையும், ‘‘விடுதலை’’, ‘‘சிந்தனையாளன்’’ முதலான ஏடுகளையும் படிப்பார்; கூர்மையாக வாதாடுவார். அப்பெருமகனார் தம் 79 ஆம் அகவையில் 24-3-2013இல் திடுமென மறைவுற்றார். அன்னாரின் உருவப் படத்திறப்பு விழாவில் 14-4-2013இல் வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன், வழக்குரைஞர் சமரசம், நான் ஆகியோர் பங்கேற்றோம்.

அன்னாரின் மூத்தமகள் மண்டோதரி, தம் மூத்த மகள், தாமரைச் செல்வியின் திருமணத்தையொட்டி, பட்டுப் புடவை எடுப்பதற்காக தன் இரண்டாவது மகள் மருத்துவர் கண்மணியுடன் 24-4-2016 அன்று, சென்னைக்குச் சென்று திரும்பும் போது, மாரடைப்பு நேர்ந்து தன் மகளின் மடியிலேயே மகிழுந்தில் உயிர் நீத்தார்.

மண்டோதரி அவர்கள் 52ஆம் அகவையிலேயே முதிராச்சாவு எய்தியதை எண்ணியெண்ணி அம்மா மு.முனியம்மாள் நாள்தோறும் கதறுகிறார்.

தம் அன்புத் துணைவியாரை இழந்து வருந்தும் தோழர் பாரிவள்ளல், தம் அன்னையை இழந்து துயருறும் மகள்கள் தாமரைச் செல்வி, கண்மணி, இராசராசேஸ்வரி ஆகியோர்க்கும்; அன்னை முனியம்மாள், அண்ணன் மு.சுகுமார், தங்கை மாதவி, தம்பி ரமேஷ், மைத்துனர் ஆ.அரி, நாத்தனார்கள் திலகவதி, மகேஸ்வரி ஆகியோர்க்கும் மற்றும் பெயரக் குழந்தைகளுக்கும் மா.பெ.பொ.க. சார்பிலும், ‘‘சிந்தனையாளன்’’ ஆசிரியர் குழு சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

மண்டோதரியை இழந்து கணந்தோறும் வருந்தும் மு.முனியம்மாள், மு.சுகுமார், திலகவதி மற்றும் குடும்பத்தினரை 29-5-2016 ஞாயிறு காலை 9.30 மணிக்கு முனிரத்தினம் இல்லத்தில் வே.ஆனைமுத்து, வேலூர் தோழர்கள் மோ.சி.சங்கர், சா.குப்பன் ஆகியோர் நேரில் கண்டு துன்பத்தைப் பகிர்ந்து கொண்டோம்.

**வாழ்க மண்டோதரி புகழ்!**

**- வே.ஆனைமுத்து**


**சென்னைத் தீவுத்திடலில் சூன் 1 முதல் 13 வரை நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் அருவி புத்தக உலகம் கடை எண்.338இல்**

பெரியார் நூல்கள், வே.ஆனைமுத்து நூல்கள், பாவலரேறு நூல்கள், பொழிலன் நூல்கள், வாலாசா வல்லவன் நூல்கள் மற்றும் தென்மொழி, தமிழ்நிலம், சிந்தனையாளன் இதழ்கள் கிடைக்கும்.

தொடர்புக்கு :

**9443810662, 9551122884**
**7418324618, 7299214554**

# கீழ்ப்பெண்ணாத்தூர் பெரியவர் மு.கிருஷ்ணன் அவர்கள் மறைந்தார்!



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பெண்ணாத் தூரில், முத்துக்கவுண்டர்-தஞ்சம்மாள் ஆகியோரின் மகனாக 1921இல் பிறந்தவர், கிருஷ்ணன் அவர்கள். அன்னார் கடந்த இரண்டு மாதங்களாக நடை குறைந்து வீட்டோடு இருந்தார்.

போதிய நிலபுலன்களைத் தந்தை வழியில் பெற்றிருந்தார். எனினும் தாம் வருந்தி வேளாண்மை செய்து சம்பாதித்த சொத்துக்களை மட்டும் தம் குடும் பத்துக்கு வைத்துக்கொண்டு, முன்னோர் சொத்தைத் தம் தம்பிகளுக்குப் பகிர்ந்து கொடுத்த பேருள்ளம் கொண்டவர், அவர்.

தாமும், துணைவியார் இலட்சுமி அம்மாள் அவர் களும் பெற்றெடுத்த மக்கள் அலமேலு, கோவிந்தம் மாள் என்கிற கோவிராமலிங்கம், இராமநாதன், கலைமணி ஆகியோர்க்கு நல்ல கல்வி அளித்தார்.

தம் மகள் கோவிந்தம்மாள், வேற்றுச் சாதிக்கார ரான கலசஇராமலிங்கத்தைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டபோது, அதை மனமார வரவேற்றார். அவர்களின் மக்கள் உயர்கல்வி பெற்றதை எண்ணி மகிழ்ந்தார்.

வே.ஆனைமுத்து ஆகிய நான் 1979க்குப் பிறகு எண்ணற்ற தடவைகள் கீழ்ப்பெண்ணாத்தூருக்குச் சென்றிருக்கிறேன். ஒவ்வொரு தடவையிலும் அவ் வூர்ப் பெரியவர்கள் அந்தாரி கோபால் கவுண்டர், மு.கிருஷ்ணன் என்கிற கிருஷ்ணக்கவுண்டர், கண்ணன் நாயுடு ஆகியோர் என்னைக் கண்டவுடன் வாய் நிரம்பச் சிரித்து மகிழ்ந்து என்னை வரவேற்பார்கள்; உரையாடுவார்கள்.

இறுதியாக, 2015 திசம்பரில் பெரியவர் மு.கிருஷ்ணன் அவர்களை அவர்தம் இல்லத்தில் கண்டு உடல் நிலைபற்றி உசாவினேன்; நிழற்படம் எடுத்துக்கொண் டேன்.

உழைப்பே உருவான அப்பெருமகனார் உற்றா ரையும் ஊராரையும் அரவணைத்துச் செல்லும் பெருந் தகையாளர்.

அன்னார் 23-5-2016 திங்கட்கிழமை தம் 94 ஆம் அகவையில் மறைவுற்றார். அவரை இழந்து துயருறும் அவர்தம் மக்கள், மருமக்கள், பெயரக் குழந்தைகள் உறவினர்கள் ஆகியோர்க்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வளர்க மு. கிருஷ்ணன் புகழ்!**

**- வே.ஆனைமுத்து**

## இன்று வரை உலகில் மூத்தோர்!

மானிட வரலாற்றில், இன்று வரை பதிவானவர் களில், பிரான்சு நாட்டில் வாழ்ந்த ஜின்னே கால்மண்ட் (Jeanne Calment) என்கிற பெயர் கொண்ட பெண்மணிதான் 122 ஆண்டுகள் 164 நாள்கள் வாழ்ந்தவர். அவர் 1997இல் மறைந்தார்.

அண்மையில் 2016 மே திங்கள் முதல் கிழமை யில் 116 அகவையில் மறைந்தவர் அமெரிக்காவில் வாழ்ந்த சுசன்னா முஷாட் ஜோன்ஸ் (Susannah Mushatt Jones) என்னும் பெண்மணியாவார்.


அதே 116 அகவையில் இத்தாலியில் நலமாக இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிற பெண்மணி எம்மா மொரானோ (Emma Morano) ஆவார். வடஇத்தாலியில் லேக் மக்கியோரி (Lake Maggiore) என்னும் ஊரில் அவர் வாழ்கிறார்.

இன்றும் நாள்தோறும் ஒரு முட்டையைப் பச்சையாகக் குடிக்கிறார். 2020ஆம் ஆண்டு வரை அவர் வாழ விரும்புகிறார் என்பதை அண்மையில் அவரை நேர்காணல் செய்து படம் எடுத்தவர்கள் கூறியுள்ளனர்.

***("The Hindu", 16.5.2016)***

## முற்போக்கு சமூகநீதிப் பேரவை, காஞ்சிபுரம்

**மேனாள் பிரதமர் வி.பி.சிங் பிறந்தநாள் விழா: பேச்சுப் போட்டி**



**நாள் 26-6-2016 ஞாயிறு**
**இடம் : காஞ்சிபுரம் அப்துல்லாபுரம்,**

பொருள் : திராவிட இயக்கம்
ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்கா?
ஊன்றுகோலா?
கல்லூரி மாணவர்களுக்கான போட்டி
7 நிமிட உரைவீச்சு!

**முதல் பரிசு : ரூ.1000/- ★ இரண்டாம் பரிசு : ரூ.500/-**
**ஐந்து ஊக்கப் பரிசுகள் : ரூ.200/-**

பரிசுகள் வழங்கிச் சிறப்புரை : **வாலாசா வல்லவன்**

தொடர்புக்கு : திரு.**க.காரை கோதண்டன்**
தலைவர் முற்போக்கு சமூகநீதிப் பேரவை
**கைப்பேசி : 09445176028, 094223484311**

## செங்கமலம் படத்திறப்பு விழா

பெரம்பலூர் மாவட்டம் வடக்கலூர் வ.அக்ரகாரம் மறைந்த தி.கோவிந்தன் அவர்களின் துணைவியார் கோ.செங்கமலம் அவர்களின் படத்திறப்புவிழா 30.5.2016 திங்கள் காலை 10.00 மணிக்கு அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. புலவர் முருக.அறிவழகன் படத்தைத் திறந்து வைத்தார். மு.இராமையா, வீ.கோவிந்தன், மருதை பெரியசாமி, மா.வரதன், வெ.வீரமுத்து, வசந்தா தங்கராசு ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## வள்ளுவம் பற்றி...

ஐதராபாத் நகரில் உள்ள இந்திய வருமானத் வரித்துறையில இருந்து ஓய்வுபெற்ற **(Retired from Indian Revenue Service)** திரு.கா.ப.இராமசாமி (அய்.ஆர்.எஸ்) அவர்கள் பெரியார்-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் பயிற்சி வகுப்பில், 19-6-2016ஆம் நாள் “வள்ளுவம்” பற்றி, இதனை இதனால் என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## தமிழகச் சட்டமன்றம் முடிவு தெரிந்தவை (31.5.2016)

| | மொத்தம் 232 இடங்கள் |
|---|---|
| அ.இ.அ.தி.மு.க. | 134 |
| தி.மு.க. | 89 |
| காங்கிரசு | 8 |
| முஸ்லீம் லீக் | 1 |
| | 232 |

## “இரண்டகன் இவனைச் சிறையில் இடுங்கள்!”

**“எல்லா நாடுகளோடும் உனக்கு**
**நல்லுற விருந்தால்**
**இத்தனைப் பெரிய பெரும்படை**
**உனக்குத் தேவையா?”**

**“எப்போது தூங்குவேன் என்றே**
**என்னை விழுங்க ஒருவன்**
**எல்லையில் காத்திருக் கின்றான்**
**நான் விழிப்புடன் இருக்கத்**
**தேவை யில்லையா’?”**

**“இணக்க மில்லாமல்**
**நீயே சொந்தமாய்**
**வகுத்துக்கொண்ட எல்லை உன்**
**தேசியப் பெருமை என்றுநீ**
**எண்ணி மகிழலாம். ஆனால்**
**எல்லைகள் அரசியலாளரால்**
**வரையப் படுபவை அல்ல;**
**மக்களால் அமைபவை**
**மக்கள் உணர்வை**
**மதித்திடல் இன்றி**
**என்னடா நாடு?**
**என்னடா தேசியம்?”**

**“அடடா, உன்னை**
**யாரென்றோ நினைத்தேன்.**
**நீ நாட்டுப் பகைவன்!**
**இரண்டகன்!**
**எதிரி நாட்டின்**
**கைக் கூலிதானடா!**

**யாரங்கே, காவலர்?**
**ஓடிவா ருங்கள்!**
**இரண்டகன் இவனைச்**
**சிறையில் இடுங்கள்.**
**நாடு புனிதம் அடையும்.”**

**- ம.லெ. தங்கப்பா**

## பயணத்தில் கேட்ட செய்திகள்

(1) 20.5.2016 அன்று சுமார் 30, 32 வயதுடைய இரண்டு இளைஞர்கள் தாம்பரம் சானிட்டோரியத்தில் மின்தொடர் வண்டியில் ஏறினர். இருவரும் தமிழ்நாட்டுத் தேர்தலைப் பற்றிப் பேசும் பொழுது ஒருவர் சொன்னார் : ‘‘மென்பொருள் மூலம் எதையும் செய்யலாம்; காணொளி மூலம் திறப்பு விழாக்கள், தொடக்க விழாக்கள் நடத்த முடியும்; எங்கிருந்து கொண்டும் வீட்டில் உள்ள (அல்லது) அலுவலகத்தில் உள்ள அனைத்தையும் குறிப்பிட்ட நேரத்தில் செயல்பட்டு விவரங்களை அளித்தல் போன்ற செயல்களை, மென்பொருள் மூலம் திட்டமிட்டுச் செய்யமுடியும். அதுபோல் தேர்தலில் பயன்படுத்திய மின்னணு வாக்கு எந்திரத்திலும் ஒரு சிறிய மாற்றத்தை மென்பொருள் செயல் திட்டத்தில் சேர்த்தால் ஒருவருக்கு கிடைக்கும் வாக்குகள் மற்றவர்களுக்கு மாற்ற வாய்ப்பு உண்டு. உலக நாடுகளே கைவிட்ட மின்னணு வாக்கு எந்திரத்தை அப்பாவி இந்திய மக்களை ஏமாற்ற இங்கு மட்டும் கூட்டுச் சதியுடன் தேர்தல் ஆணையம் நடத்துகின்றது. அதனால் இந்த தேர்தல் நம்பிக்கையற்றது’’ என்றார். இதைக்கேட்ட மற்றொரு இளைஞர் ஆமாம் இது சாத்தியமே என்றார்.

(2) 20.5.2016 அன்று மாலை 5 மணியளவில் திருவல்லிக்கேணியில் தேநீர் கடையில் இரண்டு பெரியவர்கள் சுமார் 65, 70 வயது இருக்கும். இருவரும் தேர்தலைப் பற்றிப் பேசியது : ‘‘இப்பொழுது வெற்றி பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் பணம் கொடுத்தும், பலனில்லா வாக்குறுதிகளைக் கொடுத்தும் பெற்ற வையாகும். ஒவ்வொரு வாக்காளருக்கும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற, தோற்ற பெரிய கட்சி உறுப்பினர்கள் ரூ.200 முதல் ரூ.3000 வரை கொடுத்து வாக்குகளைப் பெற்றுள்ளனர். தேர்தல் ஆணையம் இதில் கண்டுதுடைப்பு நாடகமாகவே செயல்பட்டது. பெயருக்கு அங்கு இவ்வளவு, இங்கு இவ்வளவு பறிமுதல் செய்தோம் என்றது, தேர்தல் ஆணையம்’’ என்று ஒருவர் கூறினார்.

மற்றவர், ‘‘ஆமாம் இதுமட்டுமா? வாக்குகளை எண்ணும்பொழுது, மேலிடத்து உத்தரவு நாங்கள் சொல்வதுதான் முடிவு’’ என்று கூறியுள்ளனர். ஒருநாள் செலவுக்குப் பணம் கொடுத்து அய்ந்து ஆண்டுக்கு அடிமையாக்கியது, மக்களை இந்தத் தேர்தல். எப்பொழுதுதான் இந்த மக்கள் விழிப்படைவார்களோ? பணம் கொடுக்காமல் வெற்றி பெறுபவர் மட்டுமே இந்த மக்களால் மதிக்கப்படும் உறுப்பினர் ஆவார் ’’ என்று பேசிக் கொண்டனர்.

நானும் தேநீர் குடித்துக்கொண்டே கேட்டதுதான் மேற்கண்ட செய்தி.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சூன் - 2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பெண்ணத்தூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **ஐ.து. பாபு மாசிலாமணி** | வேலூர் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சூன் - 2016

| | | | |
|---|---|---|---|
| முனைவர் **ஆ. முத்தமிழ்ச்செல்வன்** | சென்னக்குணம் | .... | 500/- |
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பெண்ணாத்தூர் | .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119